# சஞ்சீவி

விலை
ரூபா
8-00

மலை:7 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 9 சனிக்கிழமை (21-02-1998) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:38


# மலையகத்தில் புலிகள் பெருமளவில் ஊடுருவல்

## பாதுகாப்பு நிலைமை குறித்து அரச வட்டாரங்கள் அதிர்ச்சி

கொழும்பு, பெப்ரவரி 21

மலையகத்தில் புலிகள் பெருமளவில் ஊடுருவியிருப்பதாகவும், அங்கு தமது நடவடிக்கைகளை அவர்கள் விரிவுபடுத்தி, தீவிரப்படுத்தியிருப்பதாகவும் கிடைத்துள்ள புலனாய்வுத் தகவல்கள் அரச உயர்வட்டாரங்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருப்பதாகத் தெரிய வருகின்றது.

தலவாக்கொல்லை நகரப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் அதிசக்தி வாய்ந்த மின்மாற்றி ஒன்றும் எரிபொருள் சேகரிப்புத் தாங்கி ஒன்றும் குண்டு வைத்து நாசமாக்கப்பட்ட செயல்கள், மலையகப் பாதுகாப்புத் தொடர்பாக அரசுக்கு மேலும் கவலையை அளித்திருப்பதாக விடய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 7 ஊர்காவலர் உட்பட 9 பேர் அம்பாறையில் நேற்றுப் பலி!

அம்பாறை மாவட்டம் மதிய முகாம் 16 ஆம் கொலனி 'சுகதகம'வில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஏழு ஊர்காவலர் உட்பட 9 பேர் கொல்லப்பட்டனர்.

சிங்கள விவசாயி ஒருவர் விடுதலைப் புலிகளால் நேற்றுக் காலை கடத்தப்பட்டார் என்ற தகவல் வெளியானதை அடுத்து அந்த விவசாயியைத் தேடிச் சென்றவர்களை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

உயிரிழந்த ஊர்காவலரின் ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது

கொல்லப்பட்ட ஏனைய இருவரும் கிராம வாசிகள் என்றும் அறிவிக்கப்பட்டது.

## புல்மோட்டையிலிருந்து முஸ்லிம்கள் இடம்பெயர்வு

மனிலா, பெப். 21

புல்மோட்டைப் பகுதியில் உள்ள இராணுவத்தினரின் பாதுகாப்பு நிலைகள் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தக்கூடும் என வெளியான செய்திகளைத் தொடர்ந்து அப்பகுதிகளில் வசிக்கும் நூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பத்தவர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

புல்மோட்டையில் உள்ள கனியவளங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையிலேயே இப்பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-7)

## கிருஷாந்தி கொலை வழக்கு: எதிரிகளில் ஒருவர் மரணம்!

கொழும்பு, பெப். 21

கைதடி மாணவி கிருஷாந்தி குமாரசாமி மற்றும் மூவரைக் கொலை செய்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 5 ஆம் எதிரியான இராணுவக் கோப்ரல் எஸ். டபிள்யூ அல்விஸ் நேற்று கொழும்பு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் இவர் மயக்கமடைந்து வீழ்ந்தார்.

இதன் பின்னர் இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

நேற்று இவர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று அவரின் வழக்கறிஞர் நிமால் முத்துக்குமாரன மனு ஒன்றைத் தாக்கல் செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் — இராணுவ கோப்ரலின் மரணத்துக்கு மூளை மலேரியா காரணம் என பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

(உ-3-7-21)

### நாடுகடத்தல் தொடர்கிறது:

## 68 பேரை ரூமேனியா திருப்பி அனுப்பியது

கொழும்பு, பெப். 21

உரிய ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக குடியேறிய 68 இலங்கைத் தமிழர்களை ரூமேனியா நேற்று திருப்பி அனுப்பியது.

விசேட விமானம் ஒன்றின் மூலம் இவர்கள் நேற்றுக் காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நேற்று முன்தினமும் 61 இலங்கைத் தமிழர் நாடுகடத்தப்பட்டு இலங்கை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-3-21)

### குண்டு வீச்சுக்குப் பேரம் பேசிய

## சந்தேகத்தின் பேரில் கைதானவர் பிணையில்!

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ராமமூர்த்தி மீது கைக்குண்டு வீசுமாறு தமிழ்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தன்னிடம் பேரம் பேசியதாக யாழ். மார்ட்டீன் வீதியைச் சேர்ந்த எஸ். எஸ். ஜெயரட்ணம் என்பவர் யாழ். பொலீஸில் செய்த முறைப்பாடு தொடர்பாக கைதானவர் 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல யாழ். நீதிமன்ற நீதிவான் எஸ். பாலச்சந்திரன் அனுமதித்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை மேற்கொண்ட யாழ். பொலீஸார் ஈ. பி. டி. பி. அமைப்பைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் தவராசா கவிராஜ் என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்தனர்.

தாம் முன்பு ஈ. பி. டி. பி. அமைப்பில் அங்கம் வகித்ததாகவும்—

குறிப்பிட்ட முறைப்பாட்டுக்கும் தனக்கும் எந்தவித

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் - முஸ்லிம் கட்சிகளுடன் அமைச்சர் பீரிஸ் நேற்று பேச்சு

கொழும்பு, பெப். 21

நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று தமிழ் — முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

அமைச்சரின் இல்லத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழர் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன், புளொட் தலைவர் த. சித்தார்த்தன், செயலாளர் எஸ் சதானந்தன், இ. தொ. கா.வின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி. தேவராஜ், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப், செயலாளர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுஹைர் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

★ அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக அரசு வெளி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீடத்துக்கு மேலும் அனுமதி: யாழ். பல்கலைக்கழகமே தடை!

### நிர்வாகம் குறித்து ஈ. பி. டி. பி. விசனம்

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ். மருத்துவ பீடத்தில் போதிய விரிவுரையாளர்கள் மற்றும் ஆளணியினர் இல்லாத காரணத்தால் கூடுதல் மாணவர்களை அனுமதிக்க முடியாது என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், மருத்துவ பீடாதிபதி ஆகியோர் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். ஆகவே கூடுதலான மாணவர்களுக்கு அனுமதி வழங்கமுடியாத நிலையில் உள்ளோம்.

கல்வியமைச்சில் இடம்பெற்ற சந்திப்பில் ஈ.பி.டி.பி. தூதுக்குழுவிடம் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பண்டத்தரிப்பில் தேடுதல்

பண்டத்தரிப்பு, பெப். 21

நேற்றுக் காலை தொடக்கம் நண்பகல் வரை பண்டத்தரிப்புப் பகுதியில் சுற்றிவளைப்பு, தேடுதல்கள் இடம்பெற்றன. (உ-135)

### அதிகாரி பலி!

மட்டக்களப்பு வெலிகந்தவில் வாகன அணியில் சென்ற படையினரின் வாகனம் ஒன்று தடம்புரண்டதாக தெரியவந்தது.

இதில் இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்ததாகவும் 7 படையினர் காயமடைந்ததாகவும் தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

## சமூக அபிவிருத்தி மன்றம்

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி பொதுக் கூட்டம் 22-02-98 ஞாயிறு முற்பகல் 9.30 மணிக்கு தலைமை அலுவலகத்தில் நடைபெறும். சமூக பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகச் செயலாளர்

(53539)

# மனமாரப் பாராட்டுகிறோம்

## உடுவில் மகளிர் கல்லூரி

1997 A/L பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 60 மாணவிகளையும் மனமாரப் பாராட்டுகின்றோம்.

| | |
|---|---|
| கலைப் பிரிவு | — 32 |
| வர்த்தகப் பிரிவு | — 13 |
| கணிதம் | — 03 |
| விஞ்ஞானம் | — 12 |

பெற்றோர், பழைய மாணவர்கள்
உடுவில் மகளிர் கல்லூரி

(53544)

# சேவை நலம் பாராட்டு

## திரு. செ. தேவராஜன்

(ஓய்வு பெற்ற அதிபர். மானிப்பாய் இந்துக் கல்லூரி, முன்னாள் கொத்தணி அதிபர், மானிப்பாய்)

அவர்களின் தன்னலமற்ற, கடமையுணர்வு மிக்க, உன்னதமான கல்விச் சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்,

பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
அதிபர்கள்,
அலுவலக ஊழியர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்
(சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம்)

(49965)

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தின் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் (வடமாகாணம்)
திரு. ச. ஸ்ரீ காந்தராசா அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி தங்கம்மா சதாசிவம்பிள்ளை

அவர்கள் 18-2-98 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட கடற்றொழில்
திணைக்கள ஊழியர்கள்.

(53543)


யாழ். நகரில்!

# புதிய இடத்தில் பெட்டா!

ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் வகை, பிஸ்கட், இனிப்பு, பீடா, ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகலவிதமான மூலப் பொருள்களுக்கும்

ஊதுபத்தி, சாம்பிராணி, வாசனைத் திரவியம், ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கும் மூலிகை வகைகள், குங்குமம, குங்குமப்பூ, எண்ணெய், நெய், பிஸ்கட், சொக்லேட், சாப்பாட்டு இரசாயனப் பொருள்கள், டொபி வகைகள், எசன்ஸ் வகைகள் எமல்சன் வகைகள், கலர் பவுடர் வகைள், கேக் தயாரிக்கும் பொருள்கள், கேக் அலங்காரப் பொருள்கள், அச்சகத்துக்குத் தேவையான காகிதாதிகள், மை வகைகள் ஆகியவற்றுக்கு யாழ். நகரில் பெயர்பெற்றவர்கள்:

# பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் & பேப்பர் மேர்ச்சன்ட்

இல. 104 (298), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(சி/2933)


## சிப்பாய் தற்கொலை

மட்டக்களப்பு, பெப். 21

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி மியான்கல் குளம் இராணுவ முகாமில் கடந்த புதன்கிழமை மாலை படையினர் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இறந்தவர் மாத்தளை வாசியான சாந்த இந்திரஜித் திசநாயக்கா (வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (இ-21)

## முத்திரை வந்தது

யாழ்ப்பாணம், பெப. 21

குடாநாட்டில் பருத்தித்துறை, கைதடி, கொக்குவில், வண்ணார்பண்ணை, அச்சுவேலி, அளவெட்டி ஆகிய தபாலகங்களுக்கு கொழும்பில் இருந்து முத்திரை வகைகள் எடுத்துவரப்பட்டுள்ளன. எதிர் வரும் திங்கட்கிழமை தொடக்கம் பொதுமக்களுக்கு அவை விநியோகிக்கப்படவுள்ளன. (ஐ)


நெல்லியடி

## மஹாத்மா வெண் திரையில்

20 02-98 (வெள்ளி முதல்)
சரத்குமார் - மீனா நடித்த

### நாட்டாமை

காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2756)

## லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

35 அடி அகலத் திரையில்
21 02-98 சனிக்கிழமை இன்று முதல்
அர்ஜுன் - சிம்ரான் நடித்த

### கொண்டாட்டம்

(புத்தம் புதிய வெளியீடு)
குடும்பச் சித்திரம்

பழைய நேரம்
10-30, 2-30.
(53059)


## "செல்வம்ஸ்"

8-ஆம் பக்கத்தில் நேற்றைய உதயனில் வெளியான செல்வம்ஸ் நிறுவனத்தின் முகவரிகளில்ஒன்று 443, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்றிருக்க வேண்டும். இலக்கம் 343 என்று அச்சாகியது தவறாகும்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்லையா

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா செல்லையா அவர்கள் 07-01-1998 புதன்கிழமை அன்று மல்லாவியில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், புஸ்பராணி, கதிர்காமநாதன், யோகராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், அழகானந்தம், கௌரிமாலா, இரவீந்திரராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதர்சன், சுகிர்தன், சுபத்திரா, தரீமீகன், துவாரகா, காண்டீபன், வாதிகா, அகிலன், டர்சினி, டாருணி, தரங்கினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07-01-98 புதன்கிழமை மல்லாவியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. இரவீந்திரராஜா
[மருமகன்]

தேவாலய ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய. (58527)

## கந்தையா பாலச்சந்திரன்

(தொல்புரம் கிழக்கு)

முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் கந்தையா பாலச்சந்திரன் 18-02-98 அன்று திருகோணமலையில் காலமானார். அன்னாரின் மரணச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
பா. சயந்தன்
(மகன்)

(53529)

## திருமதி மனோன்மணி வீரவாகு

தாவடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி வீரவாகு 20-2-98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வீரவாகுவின் அன்பு மனைவியும், மகேஸ்வரன் (முன்னாள் இளை முகாமையாளர், சுன்னாகம் ப நோ.கூ.சங்கம், தற்போதையவர்த்தகர்), தனபாலசுந்தரம் (பிரான்ஸ்), பத்மநாதன் (பிரான்ஸ்), யோகநாதன் (பிரான்ஸ்), இராசலட்சுமி, இராசநாதன் (வர்த்தகர்), விஜயலட்சுமி (பிரான்ஸ்), ஜெயராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பதேவி, றஜி (பிரான்ஸ்), நந்தினி (பிரான்ஸ்), நந்தினி (பிரான்ஸ்), ஸ்ரீ ரங்கநாதன் (மக்கள் வங்கி பிரதான தலைமைகாரியாலயம், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்), நகுலேஸ்வரி, சரவணபவான் (பிரான்ஸ்), பாக்கியநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சிகா, ஜிரோசனா, உசாயினி, பாபிசன், இரங்கரதீசன், இரங்கபிதீகன், இரங்கடயானிசன், சபேசன், விநோதா, கயன், சிவகினி, அயன்தனா, ஐஸ்வினி, அபிந்தா, நவினன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-2-98) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகேஸ்வரன்
(முன்னாள் இளை முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம் சுன்னாகம்.)

சி ஸ்ரீரங்கநாதன்
(மக்கள் வங்கி பிரதான தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி)

இராசநாதன்
(வர்த்தகர்)

கே கே:எஸ். றோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (53545)

## திருமதி இராசம்மா தம்பாபிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கந்தரோடையைச் சேர்ந்த திருமதி இராசம்மா தம்பாபிள்ளை 19-2-98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பாபிள்ளையின் அருமை மனைவியும், திருமதி சீ. பாக்கியம், திருமதி ப. ஞானம்மா, காலஞ்சென்றவர்களான திருமதி அ. நல்லம்மா, பூ. பொன்னம்மா, திரு. த. இராசரத்தினம், திரு. த நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், த. ஆனந்தபாஸ்கரன் (கணக்காளர், சிலோன் கிளாஸ் கொம்பனி), திருமதி கு. கமலராணி (பல்வைத்தியர், மகரகம), திருமதி தி தயாபாலினி (ஆசிரியை, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆ. மிராளினி (ஆசிரியை, கொழும்பு இந்துக் கல்லூரி), கு. குகானந்தமூர்த்தி (டாக்டர், புற்றுநோய் வைத்தியசாலை மகரகம), மா. திருலிங்கம் (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருஷாணி, சுலக்ஷணன், ஆரணிதுளசி, லக்ஷினி, ஆதவலோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22-2-98) காலை 9 30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மா. திருலிங்கம்
(மருமகன்)

கந்தையா உபாத்தியாயர் வீதி,
கந்தரோடை, சுன்னாகம். (53447)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைது, கடத்தல், காணாமற்போகுதல்

# மட்டக்களப்பில் மீண்டும் பீதிநிலை!

'கல்லுளி மங்கன் போன வழி; காடு மேடெல்லாம் தவிடு பொடி'

– இன்று மட்டக்களப்பு மாவட்ட நிலைமையை அவதானிக்கும் போது இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் வகை தொகையின்றி கைது செய்யப்படுவதும், காணாமற் போவதும் திடீரென உயர்ந்திருக்கின்றது.

மட்டக்களப்பு நிலைமை குறித்து கடந்த இரு வாரங்களுக்குள் இரண்டு முக்கிய 'பக்ஸ்' செய்திகளை மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. யான ஜோசப் பரராஜசிங்கம் அரச உயர்பீடத்துக்கு அனுப்பி வைத்திருக்கின்றார். ஒன்று ஜனாதிபதிக்கு; மற்றையது பாதுகாப்புப் பிரதியமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு.

தனியார் வாகனங்களில் சிவில் உடையில் வந்து கண்ட கண்ட இடங்களில் எல்லாம் தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதும் அல்லது கடத்திச் செல்வதும் பின்னர் அவர்கள் காணாமற் போவதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக மீண்டும் தலை தூக்கியிருப்பதாக அவர் அந்த பக்ஸ் செய்திகளில் தெரிவித்திருக்கின்றார்.

வெள்ளை வான்களில் சிவில் உடையில் வருவோர் தமிழர்களை வகை தொகையின்றிக் கைதுசெய்வதும்பின்னர் அப்படிக் கைதானோர் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்படுவதும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் சில வருடங்களுக்கு முன்னர் சர்வ சாதாரணமாக இருந்ததாகவும்—

அந்நிலைமை மீண்டும் மட்டக்களப்பில் ஏற்பட்டிருப்பது குறித்து கிழக்கு மாகாண மக்கள் கலவரமடைந்திருப்பதாகவும் —

ஜோசப் பரராஜசிங்கம் எம். பி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி மட்டக்களப்பு தென்மேற்குப் பகுதியில் வெலிகாகண்டிய கிராமத்தில் விறகு பொறுக்கச் சென்ற இருவர் படையினரால் கைதான பின்னர் காணாமற் போயினர்.

கோயில் போரதீவைச் சேர்ந்த — 4 குழந்தைகளின் தந்தையான —பொன்னம்பலம் (தவராஜா வயது 40), கோயில் போரதீவுசாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான– ஆறுமுகம் மயில்வாகனம் ஆகிய இருவருமே இவ்வாறு காணாமற் போயினர்.

வெலிகாகண்டியப்பகுதியில் இவ்வாறு தமிழர்கள் ஒன்றாகக்காணாமற்போன நான்காவது சம்பவம் இது. அங்கு இதுவரை 15 தமிழர் இவ்வாறு காணாமற்போயிருக்கின்றார்கள்.

இதன் பின்னர் கடந்த 9 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் செங்கலடிச் சந்தியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த மூன்று தமிழ் இளைஞர்கள், நீல நிற பஜிரோ வாகனத்தில் சிவில் உடையில் வந்த இனந் தெரியாதோரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.



மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா

வந்தாறுமூலையைச் சேர்ந்த கந்தவனம் ஆனந்த சேகர், யோகன், பங்குடாவெளியைச் சேர்ந்த மூர்த்தி ஆகிய மூன்று தமிழ் இளைஞர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டு— அல்லது கடத்தி— கொண்டு செல்லப்பட்டனர்.

பின்னர் இவர்களின் நிலைமை குறித்து மட்டக்களப்பு உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர்கள் கையை விரித்து விட்டனர்.

மட்டக்களப்பில் இவ்வாறு வெள்ளைவான் கடத்தல்கள், திடீர் கைதுகள், காணாமற் போகுதல் போன்ற சம்பவங்கள் அதிகரித்திருப்பது, 1996 ஆம் ஆண்டு ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலையை நினைவூட்டுவதாக உள்ளது.




அந்த நினைவு வரும் போது —

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் எண்ணிக்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் காணாமற்போன காலத்தையும், மட்டக்களப்பில் தற்போது நிலவும் அத்தகைய சூழ்நிலையும் ஒப்பிடும் போது —

ஒரு முக்கிய ஒற்றுமையும் புலப்படுகின்றது.

குடாநாட்டில் ஆள்கள் காணாமற்போன சந்தர்ப்பத்தில் இங்கு நிலை கொண்டிருந்த 51 ஆவது டிவிசன் படையணிக்கு கட்டளைத் தளபதியாக இருந்தவரும், இப்போது மட்டக்களப்பில் படைகளுக்கு பொறுப்பாக இருப்பவரும் ஒரே அதிகாரிதான். அவர்தான் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா.

தமது யாழ்ப்பாணப் பாணியை(?) முடித்துக் கொண்டு மேலதிக விசேட இராணுவ உத்திகளைப் பயில்வதற்காக லண்டன் சென்ற மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா லண்டனில் ஒரு வருடப் பயிற்சியை முடித்துத் திரும்பியதும் சில காலம் விடுமுறையில் இருந்தார். மீண்டும் சேவைக்கு வந்ததும் மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அவர் வந்த காலமோ என்னவோ மீண்டும் காணாமற் போவோர் பிரச்சினை மட்டக்களப்பில் பூதாகாரமாகக் கிளம்பியிருக்கின்றது. எனவே —

''கல்லுளி மங்கன் போன வழி'' என்ற பழமொழி நினைவுக்கு வருவதில் தப்பில்லைத்தானே!

★ ★ ★

## கிளிநொச்சி நிலைமை

கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி யுத்தமுனைக்கு பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கடந்த முதலாம், இரண்டாம் திகதி கிளிநொச்சி தெற்கு முனையில் புலிகள் நடத்திய அதிரடிப் பாய்ச்சலுக்கு முன்னர் கிளிநொச்சியில் பரந்தன் சந்தியிலிருந்து டிப்போச் சந்தி வரையான ஆறுகிலோ மீற்றர் நீளப் பிரதேசத்தை படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

அந்தப் பிரதேசத்திலேயே தெற்கு முனையில் ஒன்றரை முதல் இரண்டு கிலோ மீற்றர் நீளமான பிரதேசத்தை மீண்டும் புலிகளிடம் பறிகொடுத்திருக்கின்றார்கள் படையினர்.

கடந்த ஞாயிறன்று பத்திரிகையாளர்கள் கரடிப் போக்குச் சந்திவரை வாகனத்தில் கூட்டிச் செல்லப்பட்டனர். பரந்தன் சந்தியிலிருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது கரடிப் போக்குச் சந்தி.

அங்கிருந்து கிளிநொச்சி மத்திய சந்தைப் பகுதி, ரயில் நிலையம் ஆகிய இடங்கள் வரை பத்திரிகையாளர்கள் நடத்திக் கூட்டிக் செல்லப்பட்டனர். இது கரடிப் போக்குச் சந்தியிலிருந்து மேலும் 500 முதல் 700 மீற்றர் தொலைவில் உள்ள இடங்களாகும்.

இதற்கு அப்பாலும் கண்டி வீதிக்கும் சமாந்தரமாக தெற்கே மேலும் ஐந்நூறு மீற்றர் முதல் 750 மீற்றர் தூரத்துக்கு அப்பால் படைகள் நிலை கொண்டிருப்பதை யுத்த முனைகளை அவதானித்த பத்திரிகையாளன் என்ற முறையில் அனுமானிக்க முடிந்தது.

பத்திரிகையாளரை அழைத்துச் சென்ற 543 படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் எச்.ஏ.என்.ரி. பெரேரா ஒரேயொரு மெய்ப் பாதுகாவலருடன் மட்டுமே அந்த இடம் வரை பத்திரிகையாளருடன் முன்னேறி வந்தமை—

பத்திரிகையாளர் சென்ற இடத்தில் அதிக பாதுகாப்பு கவச வசதிகள் ஏதுமின்றி புல்டோஸர் ஒன்று காடுகளை அழிக்கும் பணியில் ஈடுபட்டமை—

பத்திரிகையாளர் சென்ற பிரதேசத்துக்கு அப்பால் மேலும் தெற்கே உள்ள படையினருக்கு சாப்பாடு மற்றும் பொருள்களின் விநியோகம் இருந்தமை—

போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் மூலம் பத்திரிகையாளர் சென்ற பகுதிக்கு (கிளிநொச்சி ரயில் நிலையத்

**பாசுபதன்**

துக்கு) அப்பாலும் தெற்கே குறைந்தது ஐந்நூறு மீற்றர் தூரத்துக்கு அப்டால் வரையுள்ள பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை அனுமானிக்க முடிந்தது.

அதாவது—

படையினரின் தற்போதைய முன்னணிக் காவலரண்களில் இருந்து சுமார் ஐந்நூறு மீற்றர் வடக்கில் உள்ள இரண்டாவது வரிசைக் காவலரண் வரையே பத்திரிகையாளர்கள் செல்ல இயன்றது என்பதை அனுமானிக்க முடிந்தது.

கண்டி வீதியில் கரடிப் போக்குச் சந்தியிலிருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தெற்கே உள்ள டிப்போச் சந்தி பகுதியில் கடந்த முதலாம் திகதிக்கு முன்னர் இருந்த படையினரின் முன்னணிக் காவலரண்கள்—

புலிகளின் அதிரடிப் பாய்ச்சலை அடுத்து இப்போது பின்வாங்கப்பட்டு கரடிப் போக்குச் சந்தியிலிருந்து தெற்கே சுமார் ஒன்று முதல் ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது கண்டி வீதியில் வடக்கே பரந்தன் சந்தியிலிருந்து தெற்கே டிப்போச் சந்திவரை ஆறு கிலோ மீற்றர் பிரதேசத்திற்குப் பரந்திருந்த படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தெற்கு முனையில் ஒன்றரை முதல் இரண்டு கிலோ மீற்றர் பிரதேசம் தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இதையே (படைத்தரப்பு அதிகாரிகளின் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவலுடன்) கடந்த வாரங்களில் உதயன், சஞ்சீவிப் பத்திரிகைகள் அவ்வப்போது வெளிப்படுத்தி வந்தன.

ஆறு கிலோ மீற்றர் நீள கிளிநொச்சிப் பிரதேசத்தில் எதைக் கிளிநொச்சி என்பது? எதைக் கிளிநொச்சி நகரம் என்பது? எதை வைத்திருந்தால் கிளிநொச்சியை வைத்திருப்பதாக அர்த்தம்? எதைப் பிடித்தால் கிளிநொச்சியைப் பிடித்ததாகப் பொருள் கொள்ளலாம்? — என்ற கேள்விகளுக்கான விடைகளை வாசகர்களிடமே உதயன் விட்டு விட்டது.

ஆனால் ஒன்று —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளருக்கு 'ஜக்கெட்' ஏன்?

கிளிநொச்சி நகரைப் படையினர் பத்திரிகையாளர்களுக்குக் கூட்டிச் சென்று காட்டியது குறித்து கொழும்பிலிருந்து வெளியாகும் 'தினமுரசு' வார இதழ் விரிவாகவும், விஸ்தாரமாகவும் ஒரு கட்டுரை வரைந்துள்ளது.

''பத்திரிகையாளர்களுக்கு அவசர அவசரமாக புல்லட் புரூஃப் ஜக்கெட் எனப்படும் ரவைத் தடுப்பு கவச ஆடைகள் அணிவிக்கப்பட்டன. கிளிநொச்சி நகர் முழுக்க கட்டுப்பாட்டில் இருந்தால் பின்னர் எதற்கு ரவைத் தடுப்பு கவச ஆடைகள்?

''கிளிநொச்சி நகருக்குள் புலிகள் இருப்பதால்தான் ரவைத் தடுப்பு ஆடைகள் கொடுக்கப்பட்டன.

''நெருங்கிச் சுடக்கூடிய தூரத்தில் புலிகள் இருக்கின்றார்கள் என்றும் அர்த்தம். ஏனெனில் துப்பாக்கியால் சுடப்படுவதில் இருந்து மட்டுமே ரவைத் தடுப்பு உடை பாதுகாப்பு அளிக்கும்.

''ஷெல் வந்து விழுந்து வெடித்தால் ரவைத் தடுப்பு உடையால் எவ்வித பயனும் இல்லை. அல்லது ஆர். பி. ஜி. மற்றும் லோ போன்ற ஆயுதங்களால் தாக்கினால் கூட ரவைத் தடுப்பு உடையுடன் போய்ச் சேர வேண்டியதுதான்.''

—இவ்வாறு தினமுரசுவில் ''கண்ட காட்சியும் காணாத உண்மைகளும்'' என்ற தலைப்பில் 'நாரதர்' வரையும் ''எக்ஸ்ரே ரிப்போட்''டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அது உண்மையே. அது பற்றிய தகவல் உதயனிலும் வெளி வந்திருந்தது.

கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் பரந்தன், கிளிநொச்சி நிலைகள் மீது புலிகள் நடத்திய அதிரடிப் பாய்ச்சலின் போது படையினரின் முன்னணிக் காவலரண்களை உடைத்துக் கொண்டு படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் புகுந்த புலிகளின் — எண்ணிக்கை தெரியாத அளவு உறுப்பினர்கள் — அணி ஒன்று இன்னமும் படையினர் தற்போது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கிளிநொச்சிப் பகுதியில் நிலைகொண்டு பதுங்கியிருக்கின்றது என்பதை அங்குள்ள 543 ஆவது பிரிகேட்டின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் எச்.ஏ.என்.டி. பெரேரா, அந்தப் பத்திரிகையாளர் அணியில் இடம் பெற்றிருந்த இப்பத்தி எழுத்தாளரிடமும் ஒப்புக்கொண்டிருந்தார்.

பத்திரிகையாளர்கள் அங்கு செல்வதற்கு 48 மணி நேரத்துக்கு முன்னரும் இவ்வாறு ஊடுருவியிருந்த புலிகளின் அணியினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும்—

அவரிடமிருந்து ஒரு ரி–56 ரக ரைபிள், ஒரு தொலைத் தொடர்புக்கருவி, ஒரு திசையறிகருவி ஆகியன கைப்பற்றப்பட்டதாகவும் பிரிகேடியர் பெரேரா குறிப்பிட்டார்.

கிளிநொச்சிப் பகுதி சன நடமாட்டமின்றி காடு மண்டிப் போயுள்ளது. பத்து அடிக்கு அப்பால் இருப்பவரைப் பார்க்க முடியாத நிலை. அதற்குள் ஊடுருவிய புலிகள் எங்கு இருக்கின்றார்கள், படையினர் எங்கு இருக்கின்றார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டம் என்பதும் வாஸ்தவம்தான். ஆகவே பத்திரிகையாளர்களுக்கு கவசங்கள் அணிவித்ததில் நியாயம் உள்ளதே; அதேவேளை 'தினமுரசு' சுட்டிக்காட்டிய விடயமும் சரியானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பாவித்த கடைக்கதவு (5½ அடி X 11 அடி) விற்பனைக்குண்டு. தொடர்பு: 82, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். நீராவியடிப்பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக. (53469)

9 Sri தொடர் இலக்கமுடைய 1300 Voxwagon Car விற்பனைக்குண்டு. தொடர்பு: கு. ஆனந்தகுமார், இல. 11, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (நாவலர் வீதிக்கு அண்மையில்) (53521)

4000 ஓடுகள், 150 முகட்டோடுகள், தீராந்தி 600 அடி 4X4, 4X3, 5X4 (பாலை. முதிரை) நிலை ஐந்து சிறகு கதவுடன், நிலைகள் கதவுடன் - 2, யன்னல்கள் கதவுடன் - 16, பலன்விலோட் 300 அடி, நீப்பை 2X2, பனைமரம் 2000 முழம், சிலாகை 2000 முழம், கேற் -1, சீற் 4X4 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வே. எதிர்மனசிங்கம், 49,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். [53483]

### தவறிவிட்டது

கனகரெத்தினம் தர்சினி ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை (767443170V) விசேட அடையாள அட்டை, பல்கலைக் கழக அடையாள அட்டை ஆகியவை முடமாவடிச் சந்திக்கும் கோயில் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (53510)

### திருத்த வேண்டுமா?

சகல ரி. வி. நிகழ்ச்சிகளையும் தெளிவாகப் பார்ப்பதற்கு அன்ரனா பொருத்திக்கொள்ளவும், ரீ வி., றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும் வீனஸ் தபாலசிங்கம் Diploma In Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (ரி/2843)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (53514)

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு: 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (53515)

இறைச்சிக்கோழி (புறோயிலர்), நல்லின முட்டைகள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு காலை 10 மணிக்கு முன் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: க. சுபநாதன், பொன்னையா வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (53516)

### O/L கணிதம் 98

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (53475)

### கல்வி

O/L இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக்கற்பிக்கப்படும். அத்துடன் புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் தனிப்பட்ட முறையில் விசேடமாகக் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. (53474)

### திருமண சேவை

சகல மதம், உத்தியோகம், தொழில்சார் மணமக்களுக்கு ஜாதகங்கள் படங்களுடன் நேரில் வரவும். சகல தரம் நிலைகளிலும் எம்மிடம் மணமக்கள் உள்ளனர். ''சேவை நம்பகம்'' திருமணசேவை, வைமன் வீதி, நல்லூர். (53490)

எம்மிடம் சகலமதத்தினருக்கும் எக்கவுண்டன், எஞ்சினியர், ஆசிரியர் உண்டு. குறிப்பு புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (53522)

## தேவை

மானிப்பாய் ஸ்ரீ சத்திய சாயி நிலைய சத்யா பாலர் பாடசாலையில் கற்பிக்க ஆசிரியைக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது விண்ணப்பிப்பவர்கள் 40 வயதுக்குட்பட்டவராய் இருத்தல் விரும்பத்தக்கது- ஆசிரியை பயிற்றனர் சான்றிதழ் உடையவராயிருத்தல் வேண்டும். விண்ணப்பிப்போர் தமது சுய விபரக் கோவையுடன் (Bio Data) 28-02-98 காலை 9-30 மணிக்கு மானிப்பாய் சத்யசாயி நிலைய மண்டபத்தில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

தலைவர்,
சாயி நிலையம்,
மானிப்பாய்.

(53523)

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
ஒய்வுபெற்ற அதிபர்
திரு. கா. தவராசா
அவர்களின்

## சேவைநலன் பாராட்டு விழா

இடம்: பாடசாலை மண்டபம்
நாள்: நாளை 22 - 02 - 1998
ஞாயிற்றுக்கிழமை
காலம்: காலை 10 மணி.

பாடசாலைக்கு அருகில் உள்ள கொண்டலடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூஜையை அடுத்து அங்கிருந்து மங்கள வாத்தியம். சகிதம் விழா நாயகர் மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதோடு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். விசேட பூஜையிலும், சேவைநலன் பாராட்டு விழாவிலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகத்தினர்,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(இ/2925)

## நீங்கா நினைவில் ஓராண்டு



அன்னை மடியில்: 13 — 04 — 1939

மண்ணின் மடியில்: 04 — 03 — 1997

### அமரர் சுப்பையா இராசரத்தினர்

(இ. போ. ச. நடத்துநர் — காரைநகர் சாலை)

திதி: 21 — 02 — 1998

காலமே அவரைக் காற்றோடு கலந்திட்டாயா!
காற்றே! எம் கதை அவருக்கு கூறாயோ!

மீண்டும் உங்கள் வரவுக்கு ஏங்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

24. புறாடி லேன்,
அரியாலை.
(53520)

# நச்சுத்தன்மையான பொருள்கள் கண்டபடி விற்பனையாகின்றன

## நுகர்வோர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 21

குடாநாட்டில் உள்ள மருந்தகங்களிலும், சில உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யும் கடைகளிலும் நச்சுத்தன்மை வாய்ந்த பொருள்கள் விற்பனை செய்யப்படுவதை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாண நுகர்வோர் பாதுகாப்புச்சங்கம் மேற்கண்டவாறு அரச அதிகாரிகளிடம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மருந்தகங்களிலும், உணவுப் பண்டங்களை விற்பனை செய்யும் கடைகளிலும் மிக நச்சுத்தன்மை வாய்ந்த எலிப்பாசாணம் விற்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் விவசாய குகிமிநாசனி விற்கப்படும் கடைகளில் மரக்கறி எண்ணெய் வகைகளும் விற்பனை செய்யப்படுவதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இம்மருந்துகளை விற்பனை செய்யும் விற்பனையாளர் உரிய பாதுகாப்பின்றி இவற்றைக் கையாள்வதால் உயிராபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.

ஆகவே இவ்வாறு விற்பனை செய்வதைத் தடைசெய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் அவசியம் — என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-8)

## இளைஞர் கைது

வடமராட்சி, பெப். 21

பொலிகண்டி இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட உடுப்பிட்டி இமையாணன் கிழக்கைச் சேர்ந்த அப்புக்குட்டி அருந்தவச்செல்வம் (32 வயது) என்பவரை உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஈ.பி. டி.பி. வடமராட்சி பிரிவினரிடம் அவரது மனைவியான செல்வராணி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-173)

## பொருளியல் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### A/L 97 DAY CLASS

(புதிய, பழைய பாடத்திட்டங்கள்)

பொருளியல் — S. வரதராஜன்

ஆரம்பம்: 23 - 02 - 98
திங்கள் 10-00 மணி

★ 28 - 02 - 98-க்குப் பின்னர் அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

(53524)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கந்தையா இராமலிங்கம்

(துப்பையா)

தோற்றம்: 02-01-1906

மறைவு: 22-01-1998

அமைதியின் அணிகலனாய்
அன்பின் பிறப்பிடமாய்
அன்பாக வளர்த்து
அறிவூட்டி வையகத்தில்
வாழ்வாங்கு வாழவைத்து
சொல்லாமற் கொள்ளாமல்
சொர்க்கம் சேர்ந்ததை
எண்ணி எண்ணிக்
கலங்கி கண்ணீர் வடிக்கின்றோம்
ஈசனவன் பாதமலர் ஏத்துகின்றோம்
அனுதினமும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
இருபாலை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(53525)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கவீனமுற்ற படையினரது நலனுக்கு தனியான திணைக்களம்

## ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, பெப். 21

அங்கவீனமுற்றுள்ள இராணுவ வீரர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக தனியான திணைக்களம் ஒன்று நிறுவப்படும்.

பல்வேறு நிறுவனங்களும், கொடை வள்ளல்களும் யுத்த களத்தில் வீரத்துடன் போரிட்டு அங்கவீனம் அடைந்துள்ளவர்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்வதற்கு வாய்ப்பளிக்கும் அதே நேரத்தில் இந்தத் திணைக்களமும் பல வசதிகளைச் செய்ய இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து இந்தத் திணைக்களத்துக்கான நிதி ஒதுக்கப்படும்.

ஜனாதிபதி செயலகத்தில் அங்கவீனமுற்றுள்ள படை வீரர்களுக்கு சக்கர வண்டிகள் வழங்குவது தொடர்பாக நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

அமைதியை நிலைநாட்டவும், நாட்டு மக்களைப் பாதுகாக்கவும் நாட்டின் ஒருமைப்பாட்டை நிலைநாட்டவும் வீரம் மிகுந்த இராணுவ வீரர்களின் உதவியுடன் அரசு யுத்தம் ஒன்றை நடத்த வேண்டியுள்ளது.

நாட்டுக்குப் பெரும் சொத்தாக இருக்கும் இளைஞர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவது ஒரு துர்ப்பாக்கிய நிலையாகும். அவர்களது பலம் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாமல் யுத்த முயற்சிக்காகப் பயன்படுத்தப்படுவது பேரிழப்பாகும்.

பல தசாப்த காலங்களாக இழுபறியில் உள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண சகல மக்களும் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும். இதன் மூலம் இளைஞர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவது தவிர்க்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ-9)

# கிளிநொச்சி மாணவருக்கு உதவ கல்வி வளர்ச்சி நிதியம்

யாழ்ப்பாணம், பெப். 21

போர்ச் சூழல், இடப்பெயர்வுகள் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் நலன் கருதி "கல்வி வளர்ச்சி நிதியம்" ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத்தினால் அமைக்கப்பட்டுள்ள இந்த நிதியத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அவர்களது கல்வி வளர்ச்சிக்காக நிதி உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி நிதியத்துக்கு பொதுஅமைப்புகளிடம் இருந்தும் நலன்விரும்பிகள் மற்றும் கல்வித்துறை ஆர்வலர்களிடம் இருந்தும் நிதியைச் சேகரிக்கவும் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கென மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழகக் கிளையில் சேமிப்புக்கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதியத்திற்கு நிதி உதவி அளிக்கவிருப்புவோர் "கணக்கு இலக்கம் 21878, கல்வி வளர்ச்சி நிதியம், யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம்" எனக் குறிப்பிட்டு பணத்தை வைப்பிட முடியும் என மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இக் கல்வி வளர்ச்சி நிதியத்துக்கு நிதி சேகரிக்கும் நோக்கில் அடுத்த மாதம் 7 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் 'ஜெனோவா' என்னும் நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. (ஐ)

## கொழும்பில் 60 தமிழர் கைது

யாழ்ப்பாணம், பெப். 21

கொழும்பு கொட்டாஞ்சேனையில் 60 தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செவ்வாய் இரவு வரையான 48 மணி நேரத்தில் கொட்டாஞ்சேனையில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட படையினர் இவர்களைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 20 பேர் பெண்களாவர், (இ-3)

# உருளைக்கிழங்கு திருடன் மடக்கிப் பிடிக்கப்பட்டார்

## நீர்வேலியில் சம்பவம்

நீர்வேலிப் பகுதியில் பரவலாகத்திருட்டுத் தொழிலில் ஈடுபட்டுவந்த இருசகோதரர்களில் ஒருவர் பொதுமக்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

திங்கட்கிழமை இரவு நேரத்தில் இவர்கள் இருவரும் ஒரு விவசாயியின் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த உருளைக்கிழங்கைக்கிளறி எடுத்துக் கொண்டிருந்தபோது மேற்படிகாணியின் உரிமையாளர் தமது பயிரைப் பார்வையிட அங்கு வந்துள்ளார். அவரைக் கண்டதும் அவர்களில் ஒருவர் சாக்கில் போடப்பட்ட கிளறி எடுக்கப்பட்ட உருளைக்கிழங்குடன் சைக்கிளில் ஓடித்தப்பி விட்டார். மற்றவர் சைக்கிளை கைவிட்டுவிட்டு ஓடி மறைந்துள்ளார். விவசாயி ஆட்களை அடையாளம் கண்டு கொண்டார்.

புதன்கிழமை முற்பகல் பக்கத்திலிருந்த மக்கள் வசிக்காத வீடொன்றினுள் பதுங்கியிருக்கக் காணப்பட்ட இவர் காணி உரிமையாளரினாலும் பொதுமக்களாலும் வளைத்துப் பிடிக்கப்பட்டார்.

அவர்களால் விசாரிக்கப்பட்டபோது இதற்கு முன்பு பல திருட்டுக்களில் சம்பந்தப்பட்டதை முக்கியமாகக் கடந்தவாரம் கழற்றி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் திருடியதை அவர் ஒப்புக்கொண்டார். கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் இவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ 154)

## நெடுந்தீவில் இருந்து கருவாடு

நெடுந்தீவுப் பகுதியில் இருந்து பெருமளவு கருவாடு யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளது.

கருவாடு வகைகள் கிலோ 125 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டன. (ஐ-17)

## தொலைக்கல்வி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், பெப். 21

1997 இல் நடைபெற்ற தொலைக்கல்வி பரீட்சையில் பெறுபேறு கிடைக்காத, சித்தியடையாத வட்டுக்கோட்டை, மருதனார்மடம், கோப்பாய், தெல்லிப்பழை நிலையத்தைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்கள் 1998 இல் நடைபெறவுள்ள இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார்.

சித்தியடைந்தோரில் படிவம் தராதவர்களும் நாளை சமுகம் தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-4]

## முன்னாள் புளொட் உறுப்பினர் பலி!

மட்டக்களப்பு, பெப். 21

மட்டக்களப்பு மண்முனையில் தேசிய துணைப்படை வீரர் ஒருவர் கடந்த செவ்வாய் இரவு விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுட்டுக் கொல்லப்பட்ட சின்னவன் எனப்படும் எஸ். ஜீவரெட்ணம் என்பவர் முன்னாள் புளொட் உறுப்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மண்முனை — கொக்கட்டிச்சோலை இறங்குதுறை சோதனையில் விசேட அதிரடிப் படையுடன் இணைந்து செயல்பட்டு வந்தவர் இவர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (இ 21)

## பாராட்டு வைபவம்

அரியாலை, பெப். 21

சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்ட யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர் சி. வீ. கே. சிவஞானத்தைப் பாராட்டும் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் [illegible] உறுப்பினர்களால் இந்த வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டு உளது. (ஐ-17)


**A|L 98 DAY CLASS**

உங்கள் கானலான பரீட்சை முடிவுகளை நிதர்சனம் ஆக்க

**கலை, வர்த்தகப் பிரிவு - II**

ஆரம்பம்: திங்கள் 23-02-1998

காலை 8-00 மணி (பழைய நேரம்)

**D. M. I.**

233, STANLEY ROAD, JAFFNA.

D. SAM

(இ/2919)


# ஈராக் நெருக்கடி இலங்கைமௌனம்

கொழும்பு, பெப். 21

அமெரிக்காவுக்கும் – ஈராக்கிற்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல் நிலை குறித்து இலங்கை அரசு தனது கருத்துக்கள் எதனையும் இதுவரை உத்தியோக பூர்வமாக வெளியிடவில்லை.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து ஆராயப்படவில்லை. எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 15 லட்சம் பேர் முஸ்லிம்கள் என்பதால் அமெரிக்காவின் கொள்கையை எதிர்ப்பதைத் தவிர வேறு முடிவுகளை எடுப்பது இலங்கை அரசுக்குச் சிரமமாக இருக்கும் என்று அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் உற்பத்தியாகும் தேயிலையின் பெரும் பகுதியை 1991 ஆம் ஆண்டு முதல் ஈராக்கே கொள்வனவு செய்து வருகிறது.

ஈராக் மீதான அமெரிக்காவின் இராணுவ அச்சுறுத்தலை இந்தியா, மலேசியா உட்பட பல ஆசிய நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-7)


21-ம் திகதியில்இருந்து

**S. R. சினிமா**

சோனப்பு வீதி.
கரவெட்டி மத்தி.

வெண்திரையில்

அர்ஜுன் சிம்ரான்

★ கொண்டாட்டம்

மழையநேரம்: 10 30,2 30

புதிய வெளியீடு

[53530]



**ஆங்கில வகுப்பு**

பாடசாலையை விட்டு விலகியோருக்கு ஆரம்பம் முதல் போதிக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

**அறவழிப் போராட்டக்குழு**

வடமராட்சி செயலகம்

நெல்லியடி
ம. வீ. வீதி
(இலங்கை வங்கி முன்பாக)

(53528)


## முதலாவது பிறந்தநின வாழ்த்து

[ஆயுஸ்ஷேோம அழைப்பு]



## செல்வன் ஸ்ரீ சபாநந்தன்

**21-02-1998**

புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த

ஸ்ரீநந்தனசர்மா – விமலாதேவி தம்பதிகளின்

செல்வப் புதல்வன் ஸ்ரீ சபாநந்தன்

21-02-1998 சனிக்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை பருத்தித்துறை சிவன் கோயிலடியில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் பசுபதீஸ்வரர் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

சுபம்!

பிரம்ம ஸ்ரீ சபா. ஸ்ரீநந்தனசர்மா

சிவன் கோயிலடி,
பருத்தித்துறை.

(53531)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனுக்குப் பிரியமான மகா சிவராத்திரி தினம்!

மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும், மனம்—வாக்கு— காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலே விரதமாகும். இது ஆன்ம ஈடேற்றங் கருதிச் செய்யும் சாதனை ஆகும்.

விரதம், தவம், நோன்பு என்பன ஒரு பொருட் சொற்களாகும். விரதம் அனுட்டிப்பது ஒரு தவமாகும். விரதத்தின் போது பசித்திருந்து, விழித்திருந்து, தனித்திருந்து, மன அங்கலாய்ப்புகளை ஒருமுகப்படுத்தி இறைவனிடம் ஒப்படைத்து ஒரு விடிவு தேட முயலும் போது, ஐம்பொறிகளும் தூய்மையடைந்து, ஞானம் அல்லது பேரறிவு கைகூடும் என்பர். விரதத்தினால் மனம், வாக்கு காயமும் தூய்மை பெறும்.

இறைவனை நீள நினைந்து நித்தலும் கைதொழ வேண்டியது நமது கடமையாயினும், உலகியல் சூழல்களால் அக்கடமையைநாளாந்தம் செய்ய முடியாதிருப்பதால், குறிப்பிட்ட சில நாள்கள் அந்நாள்களின் முக்கியத்துவம் கருதி விரத நாள்களாக அனுட்டிக்கப்பட்டு இறை உணர்வு ஏற்படுத்தப்படுகிறது. அறிவியல் ரீதியாகவும் இன்றைய உலகில் விரதங்களின் மேன்மை உணரப்படுகிறது.

சிவவிரதங்களாவன, சிவராத்திரி, பிரதோஷம், சோமவாரம், திருவாதிரை, உமாமகேசுரவிரதம், கேதார விரதம், கலியாணசுந்தர விரதம், சூலவிரதம், இடபவிரதம் என வகைப்படுத்தப்படும்.

சிவராத்திரி என்பது ஒரு தவராத்திரி, விரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதமென்பர். 'இராத்திரி' என்பது இருட்காலம். உண்மையான இருட்காலம் என்பது இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் ''சர்வ சம்மார காலம்'', ''பிரளய முடிவு'' அல்லது ''ஊழி முடிவு'' எனப் பலவாறு கூறப்படும்.

இரவில் ஒளியின்றி உயிர்கள் நடமாடமுடியாது. எங்கும் அமைதி நிலவும். எனவே இந்த 'ஊழி ஒடுக்க'க் காலத்தில், உயிர்கள் ஐம்புலனையும் உள்ளடக்கி, தனு, கரண, புவன, போகங்கள் ஒன்றுமில்லாது செயலற்றுக் கிடக்கும். இந்தப் பேரிருளில் தனித்து நிற்பவன் சிவன் ஒருவனே என்று சைவர்கள் நம்புகின்றனர். சாதாரண இரவு போலல்லாது உலக ஒடுக்க நிலையாகிய இரவு சிவனுக்கே உரிய இரவாகும். எனவேதான் இவ்விரவு சிவராத்திரி எனப்படுகிறது.



ஊழிக்கால முடிவில், ஒடுங்கிய உலகத்தை மீளவும் தோற்றிவிப்பதற்காக, இறைவன் சோதிவடிவாக, அதாவது சோதிலிங்கமாய் நின்று ''இலனிதா தேவி'' என்ற சக்தியைத் தோற்றுவிப்பார். அத்தேவி சோதிலிங்கத்தை வணங்கியதும், அவர் இலிங்கோற்பவராகத் தோன்றி, பிரமா, விஷ்ணு முதலியோரைப் படைத்து உலகின் மீள் தோற்றத்திற்கான தொழிலை ஆரம்பிப்பார் என சைவசமயத்தவர் நம்புகின்றனர்.

மாசிமாதத்தில்சதுர்த்தசித் திதியில் வரும் இரவும், அந்த இரவின் மூன்றாம் சாமத்தில் நடைபெறும் இலிங்கோற்பவ பூசையும் இதனையே குறிக்கின்றன. இவ்விரதத்தைப் பற்றிய கதைகள் அநேகமுண்டு. அவை பலரும் அறிந்தவையே. அவற்றை அறிந்து அவனருளால் அவன்தாள் வணங்குவோமாக.

எந்த மாதத்திலும் சோமவாரத்திலே சதுர்த்தசி அல்லது அமாவாசை முழுதாய் நிற்பினும் அல்லது இரவு நான்காம் சாமமளவு நிற்பினும் யோக சிவராத்திரி எனப்படும். 12 மாதங்களிலும் பூர்வ அபரபட்சங்களில் வரும் சதுர்த்தசிகளிலும் அநுட்டிக்கப்படுவது நித்திய சிவராத்திரியாகும். சோதிப் பிளம்பாக இறைவன் தோன்றிய சிவராத்திரியாகையால் மாசிமாதச் சிவராத்திரி மகா சிவராத்திரி என வழங்கப்படுகிறது.

★

## நா. க. சண்முகநாதபிள்ளை

## இமயமலையின் உண்மை

வடக்கில் இமயமலை இருக்கிறது. கங்கை உற்பத்தியாவதாலும் முனிவர்கள் பலருடன் சம்பந்தப்பட்டதாலும், சிவனாகவே கருதப்படுவதாலும் இமயமலை இருக்கும் வடக்குத் திசையை நோக்கித் தியானம் செய்ய வேண்டும். கிழக்குத் திசையும் தியானத்திற்கு ஏற்றது.

வடக்கில்உள்ள இமயமலையில் மின்னணு காந்தக் கதிர்கள் இருப்பதாகவும், தலையை அந்தத் திசையில் வைத்துப்படுத்தால், அங்கிருந்து வீசும் காந்தக்கதிர்கள் தலையை ஆகர்ஷிப்பதனால் மூளை பாதிக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது. எனவேதான் எவ்வளவு செல்வந்தனாக வாழ்ந்தாலும் வடக்கில் தலை வைத்துப் படுக்கக் கூடாது.

இந்த உண்மையை ''வாழாது வாழ்ந்தாலும் வடக்கில் தலை வைத்துப் படுக்காதே'' என்ற பழமொழி உணர்த்துகிறது.

★

## அதிரடி அரங்கு

''மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது போன்ற நிலைமைதான்'' — என்று கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

யாழ். வர்த்தகர்களிடமும் மக்களிடமும் இருந்தும் பலவந்தமாகப் பணம் கறக்கும் முயற்சியைப் பற்றியே அப்படிக் குறிப்பிட்டிருந்தோம் வரி, பலவந்த வசூல், கட்டாய நன்கொடை போன்றவற்றில் ஈடுபடாத முன்னாள் ஆயுதக் குழுக்கள் தங்களை இனங்காட்ட வேண்டும்; இல்லையேல் அதில் அவர்களுக்கும் பங்குண்டு என்ற நிலையே ஏற்படும் எனக் கடந்த வாரம் தெரிவித்திருந்தோம்.

இது வரை ஈ.பி. டி. பி. கட்சி மட்டுமே தாங்கள் அத்தகைய செயலில் ஈடுபடுவதில்லை எனப் பகிரங்கமாக அம்பலப்படுத்தியிருக்கின்றது. ஏனைய கட்சிகள் மௌனம் சாதிக்கின்றன. ஏன்? மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியிருப்பவர்கள் நாங்களே என்று அவர்கள் தங்களை அடையாளம் காட்ட விரும்புகின்றார்களோ?

அத்தகைய ஆயுதக்குழு ஒன்றின் அடாவடித்தனமான செயல்களுக்கு ஒரு ''சாம்பிள்'' —

அது நகரத்தின் மத்தியில் உள்ள வீடு. ஒரு பட்டயக் கணக்காளருக்குச் சொந்தமானது. இடம்பெயர்வுடன் கொழும்பில் நின்ற அவர், மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்து தமது நிறுவனத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டார். இங்கிருந்த தமது உறவினர்களுக்கு அறிவித்து வீட்டைத் துப்புரவு செய்யச் சொன்னார். அவர்கள் துப்புரவு செய்யத் தொடங்கினர்.

ஆனால் திடீரென அவர்களுக்கு அதிர்ச்சி, தேர்தல் காற்றில் அள்ளுண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஒரு கட்சி, யாரிடமும் கேட்டுக் கேள்வியின்றி, பூட்டிய வீட்டை உடைத்துப் புகுந்து ஆக்கிரமித்துக் கொண்டது. வீட்டுக்காரரின் உறவினர்கள் ஆயுதக் குழுவின் அச்சுறுத்தலுக்குப் பயந்து அடங்கிப் போனார்கள்.

சுமார் பத்து நாள் கழித்து— இப்போது—பட்டயக் கணக்காளர் வந்து தனது வீட்டை, கேட்டுக் கேள்வியின்றி ஆக்கிரமித்தது தவறு என்று போய் அவர்களிடம் கேட்டால் அவருக்கும் மிரட்டல் வேறு.

இரண்டரை மூன்று, ஆண்டுகள் எங்கே போயிருந்தீர்? புலிகளின் கணக்கு வழக்குகளை நீர்பரிசோதனை செய்தற்கான ஆவணங்கள் வீட்டில் இருந்தன. நாம் நினைத்திருந்தால் உம்மை இராணுவத்திடம் பிடித்துக் கொடுத்திருப்போம்— என்ற மிரட்டல் வேறு.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் யாழ்ப்பாண மக்களை விட்டுவிட்டு ஓடிவிட்டு இப்போது தேர்தல் காற்றில் அள்ளுண்டு வந்தவர்கள் இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த அப்பாவி வீட்டுக்காரரைப் பார்த்து இரண்டரை, மூன்று ஆண்டுகளாக எங்கே போயிருந்தீர்கள் என்று கேட்கின்றார்கள். என்ன வேடிக்கை!

ஆயுதம் ஏந்தி, அரசுப் படைகளுக்கு எதிராகப் போரிட்டவர்கள் அரசாங்கத்திடமே ஆயுதங்களை வாங்கிக் கொண்டு யாழ்ப்பாணம் வரலாம் என்றால், புலிகளின் ஏதோ ஒருதுறையில், ஏதோஒரு கணக்கை, எப்போதோ ஒருநாள் 'ஓடிட்' செய்தவர் யாழ்ப்பாணம் வரக் கூடாதா?

வீட்டுக்கு உரியவனின் வீட்டை பலவந்தமாகப் (By Force) பறிக்கின்ற அரசியல் கட்சிதான்— வீட்டுக்காரனுக்கு நீதி வழங்காமல் அநீதி இழைக்கும் கட்சிதான்— நீதியான தீர்வு, சமத்துவமான வாழ்வு, கௌரவமான இணக்கம் போன்றவற்றை தமிழர்களுக்கு வாங்கித் தரப் போகின்றதா?

முன்னர் ஆயுதக் குழுக்களாக செயற்பட்ட இன்றைய அரசியற் கட்சிகளே! இப்போது ஜனநாயக வழியில் மக்களை நாடி வந்திருப்பதாக நீங்கள் கூறிக்கொள்வது உண்மையானால் — உங்களிடமிருக்கும் ஆயுதங்கள் தற்பாதுகாப்புக்காகவே என்று நீங்கள் கூறுவது உண்மையானால் — ஜனநாயக வழியில் நடக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

யாழ்ப்பாண மக்கள் பொறுத்துப் பொறுத்துப் போனவர்கள்; குட்டகுட்டக் குனிந்தவர்கள். இனிமேலும் பொறுப்பார்கள் என்றோ குனிவார்கள் என்றோ கருதாதீர்கள்.

மக்களின் தார்மீக உரிமைகளைப் பேணி, அராஜகங்களை அம்பலப்படுத்தி, உண்மையைவெளிக்கொணர வேண்டிய காலத்தின் கட்டாய கடப்பாடு உதயன் — சஞ்சீவி மீது சுமத்தப்பட்டிருக்கின்றது.

ஜனநாயகம் பேசிக் கொண்டு இங்கு வந்தவர்கள் பலவந்தமாகப் சொத்துக்களைப் பறிப்பது, கட்டாய வசூல் போன்றவற்றில் இறங்கினால் அதைப் பெயரிட்டு அம்பலப்படுத்த வேண்டிய கடப்பாடும் உதயன் — சஞ்சீவிக்கு உள்ளது.

ஆயுதங்களோடு, இயக்கங்களாக — 'விடுதலை' கதை அளந்து கொண்டு — நீங்கள் வந்த போது மக்களாகிய நாம் (பத்திரிகைகள் உட்பட) அடங்கிப் போனோம் என்றால், அதற்காக இப்போது ஜனநாயகம் பேசிக் கொண்டும் நீங்கள் அராஜகம் புரிவதைப் பார்த்துப் பொறுத்திருப்பதற்கு இளித்தவாயர்கள் அல்லர்.

உங்களுக்கு ஆயுதங்களைத் தந்து உங்களைப் பலப்படுத்தி வைத்திருக்கும் படையினரிடம் போய் நீங்கள் இழைக்கும் அநீதிக்கு எதிராக நீதி கேட்பது-அவ்வாறு நீதி கேட்கும் நிலைக்கு மக்களைத் தள்ளுவது — கேவலமானது. அதையும் புரிந்து கொள்ளுங்கள்.

அந்தக் கேவலம் புரியும் போது மக்கள் தாமே நீதியை நிலைநாட்டப் புறப்பட வேண்டியிருக்கும். அதற்கும் மக்களைத் தள்ளாதீர்கள்!

- மின்னல்

# கைது, கடத்தல், காணாமற்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

கிளிநொச்சி நிலைமை தொடர்பாக பத்திரிகையாளர்களைப் படையினர் கூட்டிச் சென்று காட்டியது கடந்த 15 ஆம் திகதி ஆகும்.

ஆனால் —

கிளிநொச்சியில் தெற்கு முனை புலிகள் வசமே உள்ளது; அங்கு படையினரின் பலமான காவலரண்களைக் கொண்ட முன்னைய முன்னணிக் காவலரண்கள் புலிகள் வசமே தற்போது உள்ளன; படையினர் பழைய இடத்திலிருந்து ஒன்றரைக் கிலோ மீற்றருக்கு மேல் பின்னேயே தற்போது நிலை கொண்டுள்ளனர் — என்ற தகவலை கடந்த 11 ஆம் திகதியே உதயன் விஸ்தாரமாகத் தெளிவுபடுத்தி விட்டது.

பத்திரிகையாளர்களைக் கூட்டிச் சென்று காட்டிய போது 'உதயனின்' பழைய செய்தியே அங்கு ஊர்ஜிதப் படுத்தப்பட்டது. அங்கு வந்த ஏனைய சில கொழும்புப் பத்திரிகையாளர்கள் கூட உதயனின் செய்தியை சிலாகித்து பேசிக்கொண்டனர்.

இதன் காரணமாகவே— தமது கிளிநொச்சி விஜயம் குறித்து எங்கு சென்றோம், எதைப் பார்த்தோம் என்ற விவரமான செய்தியோடு உதயன் செய்தியாளர் நிறுத்திக் கொண்டார்.

ஆனால்—

பத்திரிகையாளரின் கிளிநொச்சி விஜயம் குறித்து தகவல் வெளியிட்ட 'தினமுரசு' வார இதழ் தனது 'எக்ஸ்ரே ரிப்போட்டில்' —

''படையினர் அழைத்துச் சென்ற பத்திரிகையாளர்கள் எவருக்கும் (தமிழ்ப் பத்திரிகையாளர் உட்பட) கிளிநொச்சியின் பூகோள அமைப்பு துளியும் தெரியாமல் இருந்ததும் படையினருக்கு வசதியாகப் போய்விட்டது''— என்று தெரிவித்திருந்தது.

கொழும்பில் இருந்து வந்த பத்திரிகையாளர்களின் நிலை என்னவோ தெரியாது. ஆனால் அங்கு சென்ற 'உதயன்' பத்திரிகையாளரோ அல்லது அலுவலகத்தில் உள்ள செய்திப் பீடமோ கிளிநொச்சி பூகோள அமைப்பைப் புரியும் இந்த விடயத்தில் செய்[illegible] தவறாகப் பிரசுரிக்கவில்லை.

கிளிநொச்சிநகரம்என்றுகூறுவது எதை? பரந்தன் சந்தியையா? கரடிப்போக்குச் சந்தியையா? பஸ் நிலையம், சந்தை, ரயில்வே நிலையம், விளையாட்டு மைதானம், தபாலகம் உள்ள பகுதிகளையா? அல்லது அதற்கு மேலும் தெற்கே சென்று பல்கலைக்கழக வளாகம், டிப்போச் சந்தி, கிளிநொச்சி மகாவித்தியாலயம் போன்றவை உள்ள பிரதேசத்தையா? அல்லது இவை முழுவதையுமா?— இப்படியான சர்ச்சை உள்ள கேள்விகள் இருப்பதால் ''கிளிநொச்சியைப் புலிகள் கைப்பற்றினரா! இல்லையா?'' என்ற கேள்விக்குப் பதிலளிக்காமல் 'உதயன்' விட்டுவிட்டது அவ்வளவே!

கிளிநொச்சி ரயில் நிலையம் வரை சென்று விட்டு கிளிநொச்சி நகரம் படையினர் வசம் என்று எழுதும் பத்திரிகைகள் 'கிளிநொச்சி நகரம்' என்பதற்கு ஓர் அர்த்தம் கொடுத்திருக்கக் கூடும். ஆனால் அதனை வாசிக்கும் [illegible] கணிக்க வேண்டியிருக்கும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்படையின் கொலைப்பிரிவே இக்பால் அத்தாஸை மிரட்டியது!

## 'யுக்திய' பத்திரிகை தகவல்

கொழும்பு, பெப். 21 கடந்த 12ஆம் திகதி இராணுவச் செய்தியாளர் இக்பால் அத்தாஸின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அவருக்கு கொலைப் பயமுறுத்தல்மேற் கொண்டவர்கள் விமானப்படையில்இரகசியமாகச்செயற்படும் கொலைப் பிரிவினர் ((Killer Unit) என நம்பிக்கையான வட்டாரங்களை ஆதாரம் காட்டி ''யுக்திய'' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

இக்பால் அத்தாஸின் வீட்டிற்குள் அத்துமீறிப் பிரவேசிப்பதற்கு முன்னர் விமானப் படையைச் சேர்ந்த அந்தக் கொலைப் பிரிவினர் வீட்டைச் சுற்றி நோட்டமிடுவதில் ஈடுபட்டனர் எனவும்–

இரகசியப் பொலிஸைச் சேர்ந்தவர்களும் வேவுப் பணிகளில் ஈடுபட்டிருந்ததை அப்பகுதி மக்கள் கண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

200-6452 இலக்கமுடைய ஓட்டோவில் இரகசியப் பொலிசார் அந்த இடத்திற்கு வந்தனர் எனத் தெரியக்கப்படுகிறது. மோட்டார்போக்குவரத்துத் திணைக்களத்தில் இந்த 'ஓட்டோ' பொலிஸ் மா அதிபரின் பெயரில்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் இக்பால் அத்தாஸின் வீட்டுக்குள் நுழைவதற்கு முன்னர் அந்த வீட்டிற்கு முன்பாகவுள்ள விகாரையில் இருந்து நோட்டம் விட்டுள்ளனர். இக்பால் அத்தாஸ் எங்கு செல்கிறார் என்பதை அறிய அவரைப் பின் தொடர்ந்தும் உள்ளனர்.—

என்று யுக்திய தெரிவித்துள்ளது.

## நாளை இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 21 பாரம்பரியமான நாதசுரத்தில் கலைகளை வளர்க்கவும், கர்நாடக சங்கீத மரபுகளைப் பேணவும், இளம் கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுக்கவும் மாதம் ஒரு இசை நிகழ்வை நடத்துவது என்று எடுத்த தீர்மானத்தின்படி முதலாவது இசை நிகழ்வை இலங்கை இசை வேளாளர் சங்கம் நாளை நடத்துகின்றது.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு இந்நிகழ்வு நடைபெறும்.

சங்கத்தின் உப - தலைவர் எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், இந்து சமயப் பேரவை செயலாளர் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

ஸ்ரீதேவி திருச்செல்வத்தின் பண்ணிசை, கே. ஆர். சுந்தரமூர்த்தியின் மங்கள இசை, சங்கீத வித்வான் க. இராமநாதனின் கர்நாடக இசை ஆகிய நிகழ்வுகள் இடம் பெறும். (உ-3)


**கூரை ஓடுகள் இப்போது யாழ்ப்பாணத்துக்கு வந்து விட்டன!**

★ மண் ஓடுகள், அஸ்பெஸ்டஸ் சீற் ஆகியவற்றை விட மிகவும் மலிவானது.

★ கோப்புசத்திற்கு மிகக் குறைந்த மரங்களே போதுமானது.

★ ஆரோக்கியத்துக்கு உகந்தது (குளிர்மையானது)

★ இலகுவாகக் கையாளக் கூடியது.

★ உறுதியும் நீண்ட கால பாவனைக்கும் உகந்தது.

★ மூட்டு ஓடுகள் ஏனைய ஓடுகளிலும் பார்க்க அழகானவை.

★ தொழிற்சாலையும் விற்பனை நிலையமும்

**மனித முன்னேற்ற நிலையம் (HUDEC)**
14; மத்தியூஸ் வீதி, (பாங்சால் வீதி)
யாழ்ப்பாணம்.

உற்பத்தியாளர்கள் -
**HDL அபிவிருத்தி தனியார்**
வரையறுக்கப்பட்ட ஸ்தாபனம்.
HUDEC உடன் இணைந்தது.

(GTZ இன் மூலம் நிதியளிக்கப்பட்ட மற்றுமொரு யாழ்ப்பாணத்துக்கான அபிவிருத்தித் திட்டம்)

[53533]


## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்: 05 — 02 — 1922

மறைவு: 03 — 03 — 1997

**திருமதி நல்லம்மா குமரையா**

திதி: 21 - 02 - 1998

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாத்துயர் கொண்டு
வாடுகின்றோம்.
நூறாண்டு ஆயிடினும் மாறாது
நின் நினைவு
ஓராண்டு நிறைவதனில்
தேறாது வாடுகின்றோம்.

நின் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''தணிகை'',
கோவிலாக்கண்டி மத்தி,
கைதடி.

(53538)

## நாளை நடப்பவை

யாழ்ப்பாணம், பெப். 21 சுவாழ்வு நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "உளவியல்" பயிற்சி நெறி நாளை ஞாயிற்றுக்கிழமை மனித முன்னேற்ற நடுநிலையத்தில் நடைபெற உள்ளது.

85 மாணவிகள் இப்பயிற்சி நெறியில் பங்குபற்றவுள்ளனர். அருட்தந்தை டேமியன் இந்தப் பயிற்சி நெறியை நெறிப்படுத்துவார். (உ-5)

★ ★ ★

யாழ். கல்வி வலயம் 1 இன் பெண் சாரணியர் நடத்தும் பேடன் பவல் நினைவு நாள் நிகழ்ச்சிகள் நாளை காலை 9.30 மணி முதல் வேம்படி மகளிர் கல்லூரியில் மேபின் தம்பையா மண்டபத்தில் நடைபெறும் என்று இணைப்பாளர் திருமதி நீ தர்மகுலசிங்கம் அறிவித்துள்ளார். யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ)

★ ★ ★

யாழ். வண்ணார்பண்ணை கோம்பயன்மணல் மயானப் பரிபாலனசபைப் புனரமைப்புத் தொடர்பான பொதுக் கூட்டம் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

★ ★ ★

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெற இருக்கும் தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கான பகுதி I, பகுதி II இறுதிப் பரீட்சைக்கு தோற்றும் வலயம் ஒன்று சார்ந்த பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களை நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (இ-3)

★ ★ ★

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச்சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிறு மு. ப. 10.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில்நடைபெறவுள்ளது. (ஐ-5)

## ஆண்டு விழா

கொழும்புத்துறை, பெப். 21 அச்சுவேலி தோப்பு சனசமூக நிலையத்தின் 40ஆவது ஆண்டு விழாவும் புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும் கடந்த மாதம் நிலையத்தலைவர் க. கனகராசா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

## சமய சந்நிதியில்

சுழிபுரம், பெப். 21 பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலில் நாளை ஞாயிறு காலை இயந்திர பூசை ஆரம்பமாகி 21 தினங்கள் நடைபெறும்.

தினமும் இயந்திர அபிஷேகம் இடம்பெறும். (ஐ-28)

★ ★ ★

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசாமி தேவஸ்தான இலட்சார்ச்சனை நேற்று முதல் ஏழு தினங்களாக நடைபெற்று வருகின்றது. (உ-117)

## விண்ணப்பம் குறித்து அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப் 21 எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் இடம்பெற உள்ள 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் ஜி சீ. ஈ. உயர்தரப்பரீட்சை ஆகியவற்றுக்கான விண்ணப்பப்படிவங்களை உடன் பெற்று நிரப்பி எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக கோட்டக்கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறும்—

எதுவித காரணம் கொண்டும் நேரடியாகப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அவற்றை அனுப்ப வேண்டாம் எனவும் --

சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் அறிவித்துள்ளார். (உ-7)

## கிராம அலுவலர் பிணையில்!

மட்டக்களப்பு, பெப். 21 கடந்த ஏழு மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு தந்தாமலை கிராம சேவை அலுவலர் சின்னத்தம்பி மயில்வாகனம் 12 ஆயிரத்து 500 ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் பணியாற்றும் இவர் அப்பிரதேச யுவதி ஒருவரின் புகைப்படத்தை உறுதிப்படுத்தியமை தொடர்பாக இரகசியப் பொலிஸாரால் கடந்த ஜூலை மாதம் கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தார். (உ-21)


துன்னாலை மேற்கு
**மெ.மி.த.க. பாடசாலை**
**விளையாட்டு மைதானம்**
**திறப்பு விழாவும்**
**இல்ல மெய்வல்லுநர் போட்டியும்**

காலம்: 22—02—1998 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2-00 மணி

தலைவர்: திருமதி வி. சுகுமாரன் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
சி. சிவராசா
(கல்விப் பணிப்பாளர், வலயம் - 2)

கௌரவ விருந்தினர்கள்:
திரு திருமதி கமலேஸ்வரன்
திரு. திருமதி சிவானந்தவிக்கினேஸ்வரன்
(அமரர் வல்லிபுரம் நினைவாக
விளையாட்டு மைதான நன்கொடையாளர்கள்)

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர்கள்.

(53534)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இந்திராணி நித்தியானந்தர்

கடந்த 14 2 98சனிக்கிழமை இறைவனடிசேர்ந்த எமது அன்புத் தாயின் இறுதிக்கிரியைகள் நாளை 22. 02. 98 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
கணவன், பிள்ளைகள்

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(53518)

### கனகசபை தம்பிஐயா

(உரிமையாளர், நியூஸ்டார் ஜுவலர்ஸ் கன்னாதிட்டி)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகசபை தம்பிஐயா 19-02-98 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ் சென்ற தம்பிஐயா — பவளத்தின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (ஜேர்மனி), இரவீந்திரன் (ஜேர்மனி), இரவிச்சந்திரன் (கனடா), யோகேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீவிவேகானந்தராசா, தியாகநாதன் (இலங்கை வங்கி, 2 ஆம் தரக்கிளை, யாழ்ப்பாணம்), அன்பரசி (ஜேர்மனி), சுமதி (ஜேர்மனி), சந்திரகாந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும், சுதாகரன் (P. N. G. ), சுதர்சினி, சிறீகரன் (யாழ். இந்துக் கல்லூரி, A/L 97), சுகந்தினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி, A/L 99), சஞ்ஜெயன் (யாழ். இந்துக் கல்லூரி, A/L 2000), ஜனேந்திரன் (யாழ். வைத்தீஸ்வராகல்லூரி), சங்கீத் (ஜேர்மனி), நிதாரணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. சிறீவிவேகானந்தராசா
(மருமகன்)

14/33, கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்.

(53546)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் ஆஸ்பத்திரியிலிருந்து

# காணாமற் போன இளைஞர் தூக்கில் சடலமாக மீட்பு!

வவுனியா, பெப். 21

மன்னார் வைத்தியசாலையில் இருந்து கடந்த 17 ஆம் திகதி காணாமல் போன இளைஞர் ஒருவர் பின்னர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் பிணமாகமீட்கப்பட்டார்.

காய்ச்சல் காரணமாக மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மரியதாஸ் சகாயநாதன் (வயது 26) என்பவர் கடந்த 17 ஆம் திகதி முதல் வைத்திய சாலையில் இருந்து காணாமற்போயிருந்தார்.

பின்னர் நேற்று முன்தினம் மன்னார் சவுத்பார் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது முதுகிலும் பின் தலையிலும் காயங்கள் காணப்பட்டதையடுத்து இவரது மரண விசாரணையை எதிர் வரும் திங்கட்கிழமை வரை மன்னார் நீதிமன்ற நீதிவான் இளஞ்செழியன் ஒத்தி வைத்துள்ளார். (உ-9-164)

## இன்று

யாழ்ப்பாணம், பெப். 21

சாந்திகத்தினால் நடத்தப்பட்ட உளவளப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கான பட்டமளிப்பு விழா இன்று சாந்திகத்தில் நடைபெறவுள்ளது.

12 பயிற்சி நெறியாளருக்கு பட்டமளிப்பு வழங்கப்படும். (உ-5)

★ ★ ★

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலய முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்தும் தையல் கண்காட்சி இன்று காலை 9 30 மணி தொடக்கம் நாளை ஞாயிறு மாலை வரை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

இன்று நடைபெறும் ஆரம்ப வைபவத்திற்கு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும், கல்வி வலயம் ஒன்றின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் கௌரவ விருந்தினராகவும், யாழ். மரியன்னை பேராலயப் பங்குத் தந்தை ஏ.கி. கிறிஸ்தோப்பர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (உ-7)

★ ★ ★

குருநகர் கிழக்கு (ஜே.70) கிராமஅலுவலர் பிரிவிற்கான விசேட அடையாள அட்டை விநியோகம் இன்று காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை குருநகர் யாகப்பர் ஆலய முன்றலில் வைத்து வழங்கப்படுமென்று அப்பகுதிக்கான கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (உ-7)

## பரந்தன் ஊழியர் சம்பளம்

பரந்தன்இரசாயனதொழிற்சாலை ஊழியர்களுக்கான சம்பளம் இன்று சனி தொடக்கம் 26 ஆம் திகதி வியாழக்கிழமை வரை கடந்த காலங்களில் சம்பளம் வழங்கப்பட்ட அதே இடத்தில் வைத்து வழங்கப்படும் என்று தொழில் முகாமையாளர் கா. சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார். (உ-7)

## நியமனக் கடிதங்கள் கையளிப்பு

யாழ். கல்வி வலயம் II இல் ஆசிரிய நியமனம் பெற்ற சுமார் 237 பேர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் இன்றும் நாளையும் வழங்கப்படவிருக்கின்றன.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய மூன்று கல்விக் கோட்டங்களிலிருந்து தெரிவாகிப் பயிற்சியை முடித்த 79 ஆசிரியர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் இன்று காலை 9 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் வைத்தும் —

இதேவேளை கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய ஐந்து கல்விக் கோட்டங்களுக்கிடையே தெரிவான 158பேர்களுக்குரிய ஆசிரிய நியமனக் கடிதம் நாளை காலை 9 மணிக்கு கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் வைத்தும் —

யாழ். கல்வி வலயம் II இன் பணிப்பாளர் சி. சிவராசாவினால் கையளிக்கப்படும். (உ-109)

## கால எல்லை திரும்பவும் நீடிப்பு

கொழும்பு, பெப். 21

படைகளில் இருந்து தப்பி ஓடியோர் மீண்டும் சேவையில் சேருவதற்கான கால அவகாசம் திரும்பவும் புதன் கிழமை நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த கால எல்லை நேற்று நள்ளிரவுடன் முடிவடைவதாக இருந்தது.

இது தொடர்பான அறிவிப்பு பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. (உ-21)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

ரேவதி நடித்த

★ பயம்

மற்றும் இடைக்கால வீடியோ CD வெளியீடுகள்

1. படிக்காதவன்
2. துர்க்கை பூஜை
3. மரியாத்தா
4. இந்து (பட்டாசு)
5. விடுகதை
6. சத்தியா
7. அம்மன் கோயில் திருவிழா
8. காத்தவராயன்

சுப்பஸோ வீடியோ யாழ்ப்பாணம்.

(என்றும் CD பட வெளியீடுகளுக்கு)

(சி/2935)



எமது புதிய வெளியீடு

இசைத்தென்றல் பாகம் 33 (ஒறிஜினல் VCD)

ஒறிஜினல் வெளியீடு

ரங்கா

மக்கள் என் பக்கம்

உன் கண்ணில் நீர் வழிந்தால்

CD வெளியீடு

சலங்கைஒலி

புதிய போஸ்டர்கள் விற்பனைக்குண்டு.

வீடியோவிமல் யாழ்ப்பாணம்.

(சி/2932)


## தெற்கில் குண்டு வெடிப்புகள்:

# புலிகளின் உளவுப் பிரமுகரான ரமணனே தாக்குதல் சூத்திரதாரி?

கொழும்பு, பெப். 21

விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவு முக்கியஸ்தரான ரமணன் என்பவர் குறித்து தகவல்களைப் பெறுவதற்காக பழுகாமத்தில் உள்ள அவரின் வீட்டை இலக்கு வைத்து விசேட அதிரடிப் படையினர் நேற்றுக் காலை படைநகர்வையும் தேடுதலையும் மேற்கொண்டதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலதா மாளிகை, காலி, ஹோட்டல் கலதாரி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னணியில் திட்டமிட்டு வழி நடத்திய சூத்திரதாரியாக விளங்கியவர் புலிகள் உளவுப் பிரிவைச் சேர்ந்த பிரமுகரான ரமணன் என்பவரே என பாதுகாப்பு வட்டாரங்களுக்குக் கிடைத்த உளவுத் தகவல்கள் தெரிவித்துள்ளனவாம்.

இதனால் பழுகாமத்தில் உள்ள ரமணனின் வீட்டில் தேடுதல் ஒன்றை நடத்தி அவர் பற்றிய மேலதிகத் தகவல்களைப் பெற பாதுகாப்பு வட்டாரங்கள் முடிவு செய்ததாகவும் கூறப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் பளுகாமம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருப்பதால் விசேட அதிரடிப்படையினர் நேற்றுக் காலை பெருத்த எடுப்பில் பளுகாமத்துக்கு படை நகர்வு ஒன்றை மேற்கொண்டனர்.

அங்கு ரமணனின் குடும்பத்தவர்கள் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீட்டைச் சுற்றி வளைத்த படையினர் அங்கிருந்த தஸ்தாவேஜுக்கள் சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளைவெல்லாவெளி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலைமுதல் நேற்றுக் காலைவரை விசேட அதிரடிப் படையினர் தேடுதல் நடத்தினர். அப்பிரதேச காடுகளிலும் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதல் வாகனங்கள் இப்பிரதேசத்திலிருந்துதான் புறப்படுவதாக தகவல்கள் ஏற்கனவேவெளியாகி இருந்தன.

இது தொடர்பாகவே இத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

## மெய்வல்லுநர் போட்டி

திருநெல்வேலி, பெப். 21

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் ஆ. இ. நடராசா தலைமையில் நடைபெறும். பிரதம அதிதியாக யாழ். கல்வித்திணைக்கள கட்டட பொறியியலாளர் எஸ். சிவபாலன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக ரெவிகொம் நிறுவன யாழ். பிரதேச முகாமையாளர் கே. ரிபாலசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (ஐ-135)

★ ★ ★

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக பருத்தித்துறைமாவட்ட நீதிபதி த. விக்னராசாவும், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சந்திரகுமாரி விக்னராசாவும், சிறப்பு விருந்தினராக சங்கானைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் வீ. கணேசலிங்கமும் கலந்துகொள்வர். (ஐ-28)

★ ★ ★

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுமைப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தீருவில் மைதானத்தில் அதிபர் த. தலேந்திரராசா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் ஜே. எஸ். நல்லதம்பியும், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலக திட்டமிடல் உதவி அலுவலர் க. சச்சிதானந்தமும் கலந்து கொள்வர். (ஐ-109)

## சந்தேகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தொடர்பும் இல்லை என்றும்-அவர் நீதிவானிடம் தெரிவித்தார்.

அதையடுத்து அவரை 5 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் [illegible] எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (உ-3-9)

## மருத்துவபீட.....

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ் மருத்துவ பீடத்துக்கு தற்சமயம் அனுமதிக்கப்பட்டுள்ள 66 மாணவர்களுக்கு மேலதிகமாக 59 மாணவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கடந்த வாரம் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் ஈ.பி.டி.பி. தூதுக்குழு கோரிக்கை விடுத்தது.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி இது தொடர்பாக கல்வி அமைச்சுச் செயலாளருடன் மேலதிக பேச்சுக்களை நடத்துமாறு ஈ. பி.டி. பி. குழுவினரைக் கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து ஈ. பி. டி. பி. தூதுக்குழு கல்வியமைச்சுச் செயலாளருடன் பேச்சு நடத்தியது.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான இக்குழுவில் ஈ. பி. டி. பி. ஆலோசகர் டாக்டர் விக்கினேஸ்வரன், பேச்சாளர் எஸ். தவராசா ஆகியோர் பங்குபற்றினர்.

கல்வியமைச்சு செயலாளர் அன்ட்ரூ, பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவைச் சேர்ந்த பேராசிரியர் திலகரத்தின, கல்விச் சேவைகள் ஆணைக் குழுவைச் சேர்ந்த எஸ். பந்துசேன ஆகியோருடன் அக்குழு பேச்சு நடத்தியது.

யாழ். மருத்துவபீடத்துக்கு மேலும் 59 மாணவரை அனுமதிக்குமாறு தூதுக்குழுவினர் கோரினர்.

கட்டட மற்றும் உபகரண வசதி தேவையானால் தாம் உதவிசெய்ய முடியும் என்றும் ஈ பி.டி.பி. தூதுக்குழுவினர் தெரியப்படுத்தினர்.

கட்டட உபகரணம் வழங்குவதில் பிரச்சினைஇருக்காது என்று தெரிவித்த பேராசிரியர் திலகரத்தின—

"அங்கு போதிய விரிவுரையாளர் மற்றும் ஆளணி வசதியில்லை ஆகையால் 90 மாணவர்களை மட்டுமே அனுமதிக்க முடியும் என்று துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், மருத்துவ பீடாதிபதியும் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். ஆகையால் 90 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்க முடியும்." — என்று தூதுக்குழுவினரிடம் தெரிவித்தாராம்.

போதிய மாணவர்கள் கல்வி பயில வசதியிருந்தும் சாட்டுப்போக்குக் கூறி அதைத் தடுத்துவிட்டார்களே என்று ஈ. பி. டி. பி. பிரமுகர் ஒருவர் உதயனுக்குக் கவலை தெரிவித்தார். (உ-3)

## மலையகத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்)

மறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

மலையகத்தில் புலிகளின் செயற்பாடு தீவிரமடைந்திருப்பது அரச உயர் வட்டாரங்களில் எச்சரிக்கைமணியை அடித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

முப்படைகளின் தளபதி என்ற முறையில் மலையகப் பாதுகாப்பு மற்றும் அங்கு புலிகளின் ஊடுருவல் ஆகியவை குறித்து விளக்கமான — அவசர — அறிக்கை ஒன்றை பாதுகாப்பு உயர் வட்டாரங்களிடம் ஜனாதிபதி கோரியிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது.

மலையகத்தில் புலிகளின் அதிசக்தி வாய்ந்த தொலைத் தொடர்புக் கருவி ஒன்று இயங்குவதாகவும் —

அது நிலைகொண்டுள்ள இடத்தை கண்டு பிடிக்கபாதுகாப்பு வட்டாரங்கள் எடுத்து வரும் முயற்சிகள் இதுவரை பயனளிக்கவில்லை என்றும்—

இந்தத் தொலைத் தொடர்புக் கருவி மூலம் வன்னியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகத்துடன் மேற்கொள்ளப்படும் உரையாடல்களை பாதுகாப்பு வட்டாரங்கள் இடைஇடையே வழிமறித்துக் கேட்கக் கூடியதாக இருப்பதாகவும் —

சில செய்திகள் வெளியாகி உள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணிக்கு தலவாக்கொல்லையில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பற்றிய தகவல்கள் கொழும்பில் உள்ள செய்தி நிறுவனங்களுக்குச் சரியாக எட்டமுன்னரே, அது பற்றிய விஸ்தாரமான செய்தியை காலை 8 மணிக்கு முன்னர் — வன்னியிலிருந்து இயங்கும் — 'புலிகளின்குரல்' வானொலி வெளியிட்டதும் பாதுகாப்பு வட்டாரங்களைச் சிந்திக்க வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-7)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

விட விருக்கும் இடைக்கால அறிக்கை.

★ ஐ.தே.கவினால் பகுதி பகுதியாக வெளியிடப்பட்டு வரும் மாற்று யோசனைகள்.

— போன்ற விடயங்கள் குறித்து நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிய வந்தது.

ஐ.தே.கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்று யோசனைகளை தமிழ்—முஸ்லிம் கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமானால் அரசும் அதனை ஏற்றுக்கொள்ளும் என்று அமைச்சர் பீரிஸ் இச்சந்திப்பில் தெரிவித்ததாகவும் —

ஆனால் ஐ. தே. க. முன்வைத்திருக்கும் மாற்று யோசனைகள் பூரணமானவையாக இல்லாததால் அது குறித்து தாங்கள் எக்கருத்தும் தெரிவிப்பது அர்த்தம் அற்றது எனத் தமிழ் முஸ்லிம் கட்சிகள் பதிலளித்ததாகவும் — அறியவருகின்றது. (உ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-02-98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
சஞ்சிகை

21 - 02 - 1998 சஞ்சீவி

சாரங்கா நகை மாடம்

மாந்தர் மனம் மயங்கும் சுத்தமான 22 கரட் தங்க நகைகளுக்கு ஒரு நம்பகமான ஸ்தாபனம்

177/4, கஸ்தூரியார் றோட் யாழ்ப்பாணம். (சி-2902)

## கருத்துக் கலசம்

மயூரா

### சிவராத்திரி

இந்துக்களின் விசேட தினங்களில் சிவராத்திரியும் ஒன்று. இரவு முழுவதும் கண்விழித்திருந்து சிவனைத் துதிக்கும் புண்ணிய நாள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் புனித தலத்துடன் கூடிய சிறப்பு வாய்ந்த சிவாலயம் கீரிமலையில் உள்ள நகுலேஸ்வரம் ஆகும். அங்கு சென்று தமது சமயக் கடமைகளை நிறைவேற்றவே யாழ்ப்பாணச் சைவ மக்களில் பெரும்பாலானோர் ஆவல் கொண்டுள்ளனர்.

1990 ஆம் ஆண்டின் பின்னர் கீரிமலைக்குச் சென்று புனித நீராடவோ, சிவராத்திரியன்று விரதமிருக்கவோ குடாநாட்டுச் சைவ மக்களுக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

இப்போது குடாநாட்டில் போர் ஓய்ந்துள்ளது. எனினும் இயல்பு வாழ்க்கை முழுமையாகத் திரும்பவில்லை. அதனை ஏற்படுத்துவதற்கு அரசாங்கமும் படையினரும் பாடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில், பின்னணியில் சைவ மக்கள் கீரிமலைக்குச் சென்று புனித நீராடி, நகுலேஸ்வர ஈசனைத் தரிசித்து, சிவராத்திரி விரதமிருக்க வகை செய்யப்பட வேண்டியது அரசின் தட்டிக் கழிக்க முடியாத கடமை.

குடாநாட்டில் உள்ள சமய அமைப்புகள், சிவராத்திரியைப் பக்தர்கள்தடங்கலின்றி அனுஷ்டிக்கும் முகமாக அன்றைய தினம் இரவு ஊரடங்கைத் தளர்த்த வேண்டும் என்றும் கீரிமலைக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தக் கோரிக்கை நியாயமானது என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். குடாநாட்டுச் சைவமக்களின் வழிபாட்டு உரிமையில் தொடர்ந்து கை வைப்பது நியாயமல்ல என்பதனையும் உணர்ந்து கொள்ளட்டும்.

பாதுகாப்பை உறுதி செய்வது என்ற பேரில் மக்களின் வழிபாட்டு உரிமையை (நீண்ட காலமாகவே) மறுப்பது அவர்களின் அடிப்படை உரிமையைப் பறித்தெடுப்பது ஆகும்,

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், சில சந்தர்ப்பங்களில் மக்களின் பாதுகாப்புக் கருதி அவர்களின் வழிபாட்டு உரிமையை முதன்மைப்படுத்தாமல் காரியங்கள் நடைபெறுவதை ஓரளவு விளங்கிக் கொள்ளலாம்.

ஆனால் இப்போதும், தொடர்ந்தும், அவ்வாறே குடாநாட்டுச் சைவ மக்களின் வழிபாட்டு உரிமைக்கு இடையூறாக இருப்பது ஒருபோதும் ஜனநாயகம் ஆக இயலாது

இவற்றைக் கருத்திற்கொண்டு சிவராத்திரியன்று இரவு ஊரடங்கை நீக்குவதோடு, மக்கள் கீரிமலை சென்று வழிபாடியற்றவும் வசதி செய்யப்பட வேண்டும்.

இப்பத்தி அச்சுக்கும் போகும் தறுவாயில் அந்த வசதி செய்யப்படும் என்ற நல்ல செய்தி வந்தது; மெச்சுகின்றோம்.

# பாலியல் சர்ச்சைகளினால் பதவி இழப்பாரா கிளின்ரன்?

பெண் என்றால் பேயும் இரங்கும். மட்டுமா? பெரிய மனிதர்களும் இரங்கி விடுகிறார்கள்; தமது பாரிய பொறுப்புக்களையும் பெருமதியையும் மறந்து இறங்கி விடுகிறார்கள். எங்கிருந்தோ வந்தவள் இவர்களைத் தொட்டதால் பத்திரிகைத் தலைப்புக்களையும்—அட்டைகளையும்—நிரப்பி விடுகிறாள்.



கிளின்ரன்

வீட்டுக்கு வீடு வாசற்படி. ஆசைகள் மனிதனை ஆட்டும். இதனால் ஆயிரம் சிக்கல்கள் எழும். வீடு குடிசையாகட்டும்; இல்லை மாளிகையாகட்டும். மாளிகை வெள்ளையாகட்டும்; இல்லை சிவப்பாகட்டும்.

அங்கே விவகாரம் — பாலியல் என்று வந்துவிட்டால்— சுவாரசியத்துக்குக் குறைவு இருக்காது. அதுவும் பெரிய இடம் என்றால் சொல்லவா வேண்டும்? பத்திரிகையாளர்களும் அரசியல் எதிரிகளும் கும்மாளம்போடத்தொடங்கி விடுகிறார்கள்; எள்ளை எரிமலையாக்கி விடுகிறார்கள்.

அவர்களையும் பிழை சொல்ல முடியாது. பெரிய பிழைப்பு வரும்போதுவிட்டுக் கொடுக்கலாமா? அதுவும் உலக வல்லரசு எனசொல்லிக் கொள்ளும் அமெரிக்க ஆட்சிப் பீடத்தில் 'கிசுகிசு' என்றால் சொல்லவா வேண்டும்?

அமெரிக்க ஜனாதிபதியில் கிளின்ரனின் பாலியல் விவகாரங்கள் அண்மையில் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கின. இம்முறை 'சூடு' வழமையைவிடச் சற்றுக் காட்டமாகவே இருந்தது. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரத்தானே வேண்டும்!

கிளின்ரன் மீது பாலியல் குற்றச்சாட்டுக்கள் எழுந்த போதெல்லாம், அவர் அதை மறுத்து வந்தார். போதிய ஆதாரங்களைத் திரட்ட முடியவில்லை. செய்தி ஆறிய கஞ்சியாகிப் போய்விடும்.

இம்முறை கலிபோர்னியாவைச் சேர்ந்த மொனிக்கா லெவின்ஸ்கி என்ற 24 வயது இளம் பெண் தான் அமெரிக்க ஜனாதிபதியுடன் உறவு வைத்திருந்ததாக ஒப்புக் கொண்டிருக்கிறாள். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது தகப்பன் ஒரு டாக்டர்—கான்ஸர் ஸ்பெஷலிஸ்ட்.

அவளை கொஞ்சம் 'பிஞ்சிலே பழுத்த கேஸ்' என்றுதான் அயலவர்கள் இப்போது தகவல் வெளியிட்டு இருக்கிறார்கள். 12 வயதில் அவளது ஆடை அலங்காரங்கள் அவளை ஒரு 'மேனி மினுக்கி' எனப் பறைசாற்றின. அவள் 14 வயதை எட்டும் போது அவளது பெற்றோர் விவாகரத்து செய்து கொண்டனர். தொடர்ந்தும் வசதியான கல்லூரிகளில் படித்துக்கொண்டாள்.

இரவு விருந்துகளில் கலந்து கொள்வதில் அவளுக்கு அலாதிப் பிரியம். அதுமட்டுமா? மணித்தியாலத்துக்கு மூன்று டொலர் என்று உழைத்தும் இருக்கிறாள்.

அவளுடைய குடும்ப நண்பன் வோல்றர், கிளின்ரனின் அதி விசுவாசி. அவருடைய கட்சிக்கு மூன்று இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கி இருந்தார். வோல்றரின் வெள்ளை மாளிகைச் செல்வாக்கு மொனிக்காவை அங்கே 1995இல் வேலையில் அமர்த்தி விட்டது. அப்போது அவளது வயது 21.



லிண்டாவும் மொனிக்காவும்

வெள்ளை மாளிகையின் தளமாடியில் 93 ஆம் இலக்க அறையில் அவள் கடமை புரிந்தாள். அங்கு வரும் தபால்களைத் திறந்து பதிலே அவளது கடமையாக இருந்தது. இருந்தும் வெள்ளைமாளிகையின் நடைபாதைகளில் உலா வரக் கூடிய 'நீலப் பாஸ்' அவளுக்கு வழங்கப்பட்டிருந்தது,

பவிசு கிடைத்தால் குடை பிடிக்காமலா விடுவாள் [illegible] அவளது ஓய்வு நேரப் பொழுது போக்கு ஆகி விட்டது. பெரிய புள்ளிகளைக் கண்டு கதைத்துக் கைகொடுப்பதில் அவளுக்கோர் தனிஇன்பம். கையைக் கொடுத்தால் விடுவிப்பதற்குள் அப்பாடா என்றாகி விடும்.

அவளது அரசியல் அறிவு சூனியம் என்றே சொல்லலாம். ஆனால் வெள்ளை மாளிகையில் துணிந்து அரசியல் விமர்சனம் செய்து விடுவாள். அளவுக்கு மீறிய 'மேக்—அப்', அசிங்கமான ஆடைகள் என்று உலா வந்த அவளை அங்கு பல அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை.

- அம்பிகா -

விளைவு.. 1996 ஏப்ரலில் பென்ரகன் அலுவலகத்துக்கு மாற்றப்பட்டாள். வெள்ளை மாளிகையிலிருந்து மாற்றப்பட்டதை எதிர்த்து ஆட்சேபித்தாள். அத்தனை துணிச்சல்!

உறவு உண்மையோ பொய்யோ?... அழகான பெண்களுடன் உறவு வைத்திருப்பதாக பீற்றுவதில் பெருமைப்படும் ஆண்கள் ஒரு புறம். பெரிய புள்ளிகளுடன் நெருங்கிப் பழகுவதாக புளுகும் பெண்கள் மறுபுறம். இதுதான் உலகம்.

இவளும் நல்ல வாய்ச் சவடால் பேர்வழி. ஒருமுறை கிளின்ரன் தொலைக்காட்சியில் தோன்றியபோது தான் அன்பளிப்பாகக் கொடுத்த 'ரை'யை அவர் கட்டியிருப்பதாகச் சொல்லி அளந்தாள்.

1999 டிசெம்பர் கிறிஸ்மஸ் விருந்தில் வெள்ளை மாளிகையில் வைத்து கிளின்ரன் 'ஹாய் மொனிக்கா' என்று அழைத்தபடி இவள் கையைப் பிசைந்ததாக பென்ரகன் செயலர் தகவல் சொல்லி இருக்கிறார்.

1996நொவம்பர் 6ஆம்திகதியன்று இரண்டாவது தடவையாகத் தெரிவு செய்யப்பட்டு கிளின்ரன் வெள்ளை மாளிகைப் பிரவேசம் செய்த நிகழ்வு இன்று பேசப்படுகிறது. அந்த வீடியோ பதிவிலும் கூட கிளின்ரன் மொனிக்காவை ஸ்பெஷல் புன்னகையுடன் வரவேற்று ஒரு கிள்ளல் கொடுத்ததாகத் தகவல்.

இவையெல்லாம் அந்தச் சந்தர்ப்பங்களில் அதிகம் பெரிதுபடுத்தப்படவில்லை. இப்போது விவகாரம் சூடு பிடித்ததும் புதிதாக அர்த்



சர்ச்சைக்குரிய மொனிக்கா லெவீன்ஸ்கி

தங்கள் தெரிகின்றன. உறவு வைத்துக்கொண்டால் மட்டும் போதாதா? அதைப் போய் யாரோ ஒருவரிடம் புளுகாமல்விட்டால் மண்டை வெடித்து விடுமே! அதுவும் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனிடம் கொண்டாடிவிட்டுச் சொல்லாமல் இருக்க முடியுமா?

கொண்டாட்டத்தை யார் கண்டார்? கிளின்ரன் ஒருபுன்னகை உதிர்த்தாலே அவர் எனக்கு எல்லாம் செய்துவிட்டார் என்று புளுகித் தள்ளி விடலாம். அதில் எவ்வளவு பெருமை. பெரிய மனிதன் சகவாசம் பெருமை என நினைக்கும் பேதையர் கூட்டத்தில் இணைந்தாள் மொனிக்கா. இதனால் பெரிய மனிதனுக்கு வரப் போகும் தலைவலி பற்றிக் கவலைப்படவில்லை.

பெரிய மனிதனும் தனக்குரிய பண்புடனே பழகியிருந்தால் சிக்கல் வளர்ந்திருக்காதே! ஆக யாரையார் குற்றம் சொல்வது?

மொனிக்கா தனது புளுகை எல்லாம் தொலைபேசியில் பென்ரகனில் கடமை புரியும் 48 வயது லிண்டா ட்றிப்பிடம் வைத்துக் கொண்டாள். இந்த உரையாடல்கள் பலப்பல நாள்களில் பல மணித்தியாலங்கள் தொடர்ந்தன. அவ்வப்போது லிண்டா இந்த வம்பு உரையாடல்களை ஒலிப்பதிவு செய்து வைத்துக் கொண்டாள்.

இப்போது வெளிவந்திருக்கும் இப்பதிவுகள் பல சந்தர்ப்

(XI ஆம் பக்கம் பார்க்க)

# தான் முன்னெடுத்த வேலைநிறுத்தத்தால் தனக்கே சரிவைத் தேடிய தொண்டமான்

மலையகத் தோட்டத் தொழிலாளர் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றது.

ஆனால் மலையகத்தில் தனிப்பெரும் சக்தியாகவிளங்கிய — அமைச்சர் தொண்டமான் தலைமையிலான — இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு இந்த வேலை நிறுத்தம் 'ஆப்பிழுத்த குரங்கு' போன்ற இக்கட்டான நிலையை ஏற்படுத்தி விட்டது என்றால் அது மிகையாகாது.

கடைசியாக மலையகத்தில் நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு 'மரண அடியாக' விழுந்தது என்பது தெரிந்ததே. மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பக்கமிருந்த வாக்கு வங்கி மெல்ல ஐக்கிய தேசியக்கட்சி, மலையக மக்கள் முன்னணி, எம். எஸ். செல்லச்சாமி தலைமையிலான இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் பக்கம் சரியத் தொடங்கி விட்டது என்பதை அத்தேர்தல் முடிவுகள் கோடிட்டுக் காட்டின.

இந்தப் பின்னணியில்தான் 'ஒரு கல்லில் பல மாங்காய்கள்' என்ற இலக்கோடு இந்த வேலை நிறுத்சப் போராட்டத்துக்கு முஸ்தீபு செய்தார் அமைச்சர் தொண்டமான்.

★ வாழ்க்கைச் செலவு உயர்ந்து வரும் இவ்வேளையில் அதனைக் காட்டி மலையகத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற ஓர் இலக்கோடு போராட்டம் ஒன்றை முன்வைத்தால் அதில் இலகுவாக வெற்றிபெற முடியும். அதன் மூலம் மலையகத் தொழிலாளர்களின் ஆபத்பாந்தவன், இ. தொ. காவே எனக்காட்டி இழந்த தமது கட்சியின் செல்வாக்கை மீண்டும் கட்டியெழுப்புதல்.

★ அதன் மூலம் பிரதி அமைச்சர் சந்திரசேகரின் மலையக மக்கள் முன்னணி, எம். எஸ். செல்லச்சாமியின் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவற்றினதும் ஐ.தே.க. சார்பு தொழிற்சங்கங்களினதும் செல்வாக்கை மலையகத்தில் உடைப்பது.

★ இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கும் பொறுப்பை தனது பேரன் ஆறுமுகம் தொண்டமானிடம் கையளித்து, அவரை முன்னணியில் நிறுத்தி போராட்டத்தை நடத்துவதன் மூலம் ஆறுமுகம் தொண்டமானுக்கு செல்வாக்கைப் பெற்றுக் கொடுப்பதோடு, தமது அரசியல் வாரிசும், இ. தொ. காவின் அடுத்த தலைவரும் ஆறுமுகம் தொண்டமானே என்பதை உறுதிப்படுத்தி நிலைநாட்டுதல்.

— இவ்வாறு பல் நோக்கங்களுடன்தான் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்தார் தொண்டமான்.

தோட்டத் தொழிலாளருக்கு இதுவரை எண்பது ரூபாவே தினசரி வேதனமாக வழங்கப்பட்டு வந்தது. அதனை 115 ரூபாவாக உயர்த்த வேண்டும்; இல்லையேல் சுதந்திரப் பொன்விழா தினத்துக்கு அடுத்த நாள் — அதாவது பெப்ரவரி ஐந்தாம் திகதி முதல் — கால வரையறையற்ற வேலை நிறுத்தத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் குதித்துவிடுவர் என்று நேரத்தோடேயே முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டது.

தற்போதைய விலைவாசி உயர்வுக்கு தோட்டத் தொழிலாளர்கள் ஈடுகொடுப்பதானால் அவர்களுக்கு பெரிய சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று விடாது கோரி வந்த மலையகத் தொழிலாளரின் ஏனைய தொழிற்சங்கங்களும் ஒரே குரலில் ஒலிப்பதன் மூலம் மலையகத் தொழிலாளர்களுக்கு ஏதும் நிவாரணம் பெற்றுக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் இந்த வேலை நிறுத்த முயற்சியில் இ. தொ. காவோடு தோளோடு தோள் நின்றன.

தனது சரிந்த அரசியல் செல்வாக்கைக் கட்டியெழுப்பும் திட்டத்துடன் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க முயன்ற இ. தொ. கா., தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையானோர் தமது கட்டுப்பாட்டில் இருப்பதால் நினைத்த நேரம் வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கச் செய்யவும், நினைத்த நேரம் அதனைக் கைவிட வைக்கவும் தன்னால் முடியும் என்று தப்புக் கணக்குப் போட்டது.

ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் முன்னைய மாதிரியல்லர் இப்போது. அங்கு அரசியல் எழுச்சியும் முதிர்ச்சியும் இப்போது காணப்படுகின்றது. தொழிற்சங்கத் தலைவர்கள், அரசியல் வாதிகள் போன்றோர் தட்டி எழுப்பி விட்டு பின்னர் தாம் நினைக்கும் போது கட்டி வைப்பதற்கு தோட்டத் தொழிலாளர்கள் இப்போதும் மந்தைகள் அல்லர். அவர்களை முதலாளிமாருக்கு எதிராக 'உரு' ஏற்றிவிட்டு தாம் நினைத்த நேரத்தில் 'வேப்பிலை' அடித்து உரு இறக்க வைக்கலாம் என்ற எண்ணத்துடனேயே தொண்டமான் அணி களத்தில் இறங்கியது.

## உள்ளும் புறமும்

குறுமுனி

இந்த நிலையில்தான் வேலை நிறுத்தம் ஆரம்பிப்பதற்கு முதல் நாள் தொழில் அமைச்சர் ஜோன் செனிவிரத்ன இரு தரப்பையும் அழைத்து நேரில் பேச்சு நடத்தினார். தோட்டத் துரைமார் சங்கப் பிரதிநிதிகளும் இ. தொ. கா. உட்பட மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சகல தொழிற்சங்கங்களினதும் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பங்கு பற்றினர்.

அமைச்சர் செனிவிரத்ன அங்கு சமரசத் திட்டம் ஒன்றை முன்வைத்தார்.

தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்பட்டு வந்த எண்பது ரூபா நாள் சம்பளம் 95 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக லாபத்தில் பங்கு என்ற அடிப்படையில் தினசரி ஐந்து ரூபா 58 சதம் வழங்கப்படவேண்டும். ஆக மொத்தம் தோட்டத் தொழிலாளரின் சம்பளம் 80 ரூபாவிலிருந்து 100 ரூபா58 சதம் ஆக உயரும். இதுதான் தொழிலமைச்சரின் சமரசத் திட்டம். இதற்குத் தோட்டத்துரைமார் இணங்கினர்.

ஆனால் இ. தொ. கா. இணங்க மறுத்து விட்டது.

''நாம் கேட்டது 115 ரூபா சம்பளம். ஆனால் தர இணங்கியதோ வெறும் 100 ரூபா 58 சதமே. இதறகு நாம் இணங்க மாட்டோம்.'' —என்று அறிவித்ததுஇ.தொ. கா. ஏனைய தொழிற் சங்கங்களும் அந்த வழியைப் பின்பற்றின.

இ. தொ. காவைப் பொறுத்த வரை —



தொண்டமான்

தோட்டத் தொழிலாளருக்குஎனத்தான் முன்வைத்த போராட்டம் முன்னெடுக்கப் படாமல் அதற்கு முன்னமே தீர்வு காணப்பட்டு விட்டால் தனது போராட்டம் என்னாவது? தனது செல்வாக்கை அதிகரிக்கும் போராட்ட நோக்கம் என்னாவது? தோட்டத் தொழிலாளர் வீதிக்கு இறங்கினால்தானே அவர்களை வழிநடத்தும் போராட்டத்தலைவன் என்ற பட்டத்தை ஆறுமுகம் தொண்டமான் சம்பாதிக்க முடியும்? — இப்படிப் பல பிரச்சினைகள்.

எனவே தோட்டத் துரைமாரின் இணக்கத்தை கணக்கில் எடுக்காமல்-தொடர்ந்து 115 ரூபா வேதனம் என்ற கோரிக்கையை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு— தொழிலாளரை வீதிக்கு இறக்கியது இ.தொ.கா..

தமது உரிமைக்காக இ. தொ. கா. குரல் கொடுக்கின்றது. அதன் வழியே செல்வதுதான் சரி என்ற நம்பிக்கையோடு பின்தொடர்ந்தனர் தொழிலாளர்கள்.

இம்முறை தொழிலாளர் மத்தியில்—முன்னெப்போதும் இல்லாதவாறு — எழுச்சியும், உணர்ச்சியும், உத்வேகமும் இருந்ததாக அவ்வேளையில் மலையகத்துக்கு விஜயம் செய்த செய்தியாளர்கள் கூறினர். மலையகத் தொழிலாளரின் திடீர் போராட்ட எழுச்சி தங்களுக்கு வியப்பைத் தந்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறு தொழிலாளர் எழுச்சியை ஊட்டி, அவர்களை வீதிக்கு இறக்கிவிட்டு அந்த நேரத்தில் அமைச்சர் தொண்டமான் தாம் மட்டும் இந்தியாவுக்கு மாறிவிட்டார். அப்படிச் செய்தால் தானே—தாம் இல்லாத நேரத்தில் ஆறுமுகம் தொண்டமான் வேலை நிறுத்தத்தை வழிநடத்தி—அடுத்த தலைவர் என்ற பட்டத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்?

இந்த நிலையில் ஜனாதிபதி சம்பந்தப்பட்டோரை அழைத்துப் பேசினார். மலையகத்தில் தமது செல்வாக்கை இந்த வேலைநிறுத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கு எடுத்துக்காட்டி உணர்த்திவிட்டதாகத் திருப்திப்பட்டுக்கொண்ட இ.தொ.கா., ஜனாதிபதி அழைத்ததும் அவரையும் சரிக்கட்டும் நோக்கத்துடன் தனது கோரிக்கையிலிருந்து குத்துக்கரணம் அடித்தது.

சுமார் ஒன்பது நாள்கள் வேலைநிறுத்தம் தொடர்ந்தது. இதனால் ஒவ்வொரு தொழிலாளியும் ஐந்நூறு முதல் அறுநூறு ரூபாய் வருவாய் இழப்பைச் சந்தித்தனர்.

ஆனால் ஜனாதிபதியைச் சந்தித்து குத்துக்கரணம் அடித்த இ. தொ. கா. அந்தச் சந்திப்பு மூலம் தோட்டத் தொழிலாளருக்குப் பெற்றுக் கொடுத்த சம்பள உயர்வு தினசரி மேலும் ஒரு ரூபா என்ற அளவுதான்.

வேலை நிறுத்தம் ஆரம்பிக்க முதல் நாளே தொழில் அமைச்சருடன் நடந்த சந்திப்பில் 100 ரூபா58சதத்தை வேதனமாக வழங்க தோட்டத்துரைமார் இணங்கியிருந்தனர்.

அதற்கு அப்போது இணங்காத இ. தொ. கா. 9 நாள்கள் வேலை நிறுத்தத்தை நடத்தி, தொழிலாளருக்கு அறுநூறுரூபாவரை இழப்பை ஏற்படுத்திய பின்னர் 101 ரூபா 58 சதம் என்ற தினசரி சம்பள அதிகரிப்புக்கு இணங்கிப் போய் வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி தொழிலாளரைக் கோரியது.

அதாவது இ. தெ. கா. நடத்திய 9 நாள் வேலை நிறுத்தத்தால் தொழிலாளருக்கு ஏற்பட்ட அறுநூறு ரூபா நஷ்டத்தை —

அந்த வேலை நிறுத்தத்தினால் இ. தொ. கா. பெற்றுத்தந்த ஒரு ரூபா அதிகரிப்பின் மூலம் ஈடுகட்டுவதாயின் அதற்காக மட்டும் தோட்டத் தொழிலாளர்கள் இரண்டு வருடம் வேலைசெய்ய வேண்டியிருக்கும். (வழக்கமாக வருடத்துக்கு சராசரியாக தோட்டத் தொழிலாளி ஒருவருக்கு 300 நாள்கள் வேலை கிடைக்கும். இந்த ஒரு ரூபா சம்பள அதிகரிப்பால் ஒரு வருடத்துக்கு 300 ரூபா மேலதிகமாகக் கிடைக்கும். அறுநூறு ரூபா நஷ்டத்தை ஈடுகட்ட இரண்டு வருடம் வேலை செய்ய வேண்டியிருக்கும்.)

''ஆக இந்த ஒரு ரூபா அதிகரிப்புக்காகத்தானா 9 நாள் வேலை நிறுத்தம் செய்தோம்? அப்படியானால் வேலை நிறுத்தம் செய்யாமலேயே அதற்கு முதல் நாள் தோட்டத்துரைமார் இணங்கியபடி 100 ரூபா 58 சதம் என்ற சம்பள அதிகரிப்பை ஏற்றுத் தொடர்ந்து வேலை செய்திருக்கலாமே? இப்படி இ.தொ.கா.தான் நினைத்தபடி எம்மை மந்தையாக்கி நடத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது.''— என்ற எண்ணம் — உண்மை நிலை — தோட்டத் தொழிலாளர்களுக்குப் புரியத் தொடங்கியது.

அதன் விளைவாகவே, வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி இ. தொ. கா. அறிவித்ததும் மலையகத்தில் உள்ள அதன் அலுவலகங்கள் கல்வீச்சுக்கு இலக்காகின; தொண்டமானின் கொடும்பாவி எரிக்கப்பட்டது; இ. தொ. கா. எதிர்ப்பு அலை ஓங்கி வீசியது.

தோட்டத்தொழிலாளரை நட்டாற்றில் இ. தொ. கா. கைவிட்டு, அவர்களைக் காட்டிக் கொடுத்து விட்டது என்று கருதி ஏனைய தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இ. தொ. காவுக்கு நல்ல பாடத்தைப் படிப்பிக்கவும் திட்டமிட்டன.

ஒன்பது நாள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பும்படி கடந்த 13 ஆம் திகதியன்று இ. கொ. கா. அறிவித்தது.

ஆனால் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஐந்து இலட்சம் தோட்டத் தொழிலாளரில் கணிசமானோர் 14 ஆம் திகதி சனிக்கிழமை வேலைக்குத் திரும்பவில்லை.

தங்கள் அறிவிப்பு தொழிலாளரை எட்டவில்லை; அதனால் அவர்கள் வேலைக்குத் திரும்பவில்லை. நாளை திரும்பிவிடுவர் என்று இ. தொ. கா. சமாதானம் சொல்லியது.

ஆனால் 15 ஆம் திகதியும் கணிசமானோர் வேலைக்குத் திரும்பவில்லை; தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் விடுமுறை எனக் கருதி தொழிலாளர்கள் வேலைக்கு வந்திருக்க மாட்டார்கள் என்று சாட்டுச் சொல்லியது இ. தொ. கா.

என்றாலும் அதற்குஅடுத்த நாள்—16 ஆம் திகதி திங்கட்கிழமையும்— கணிசமானோர் வேலைக்குத் திரும்பாததால் இ. தொ. கா. அதிர்ந்து போனது.

இதன் மூலம் இ. தொ. காவின் முகத்தில் கரி பூசித் திருப்திப்பட்டுக் கொண்ட ஏனைய தொழிற்சங்கங்கள், தொடர்ந்தும் தொழிலாளரை வருத்த — வதைக்க— விரும்பாமல் அவர்களை வேலைக்குத் திரும்பும் படி திங்களன்று கோரின. அத்தோடு வேலைநிறுத்தப்போர் முடிவுக்கு வந்தது.

என்றாலும் இந்த வேலை நிறுத்தமும் அது தொடர்பாக மலையகத் தொழிலாளர் மட்டத்தில் ஏற்பட்ட எழுச்சியும், தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக அவர்கள் வெளிப்படுத்திய போக்கும் முக்கியமான ஒரு விடயத்தை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன.

இனிமேலும் மலையகத் தொழிலாளரை யாரும் தொடர்ந்து 'பேய்க்காட்ட' முடியாது என்பதுதான் அது.

★ ★ ★

### யாழ். மாநகர சபையும் அதன் மேயரும்

யாழ் மாநகரசபையின் புதிய மேயராக திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் அடுத்த மாத முற்பகுதியில் பதவியேற்பார் எனத் தெரிகின்றது.

அறுதிப் பெரும்பான்மையைப் பெறாத நிலையில் யாழ் மாநகரசபை நிர்வாகத்தை எவ்வாறு வெற்றிகரமாக அவர் கொண்டு நடத்தப் போகின்றார் என்பது தெரியவில்லை.

தலா ஆறு உறுப்பினர்களைக் கொண்ட புளொட் மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியவற்றில் ஏதேனும் ஒரு கட்சி உறுப்பினர்களின் ஆதரவு அவருக்கு அவசியம்.

அதை அவர் எப்படிப் பெறுவார் என்பதுதான் கேள்விக்குறி.

இதற்கிடையில் புளொட்,
(XI ஆம் பக்கத் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சுமைகள் இறங்குவதில்லை

மு. சிவநேசன்

பாகம் 6

சுந்தரம் மாமாவின்ரை முகம் சரியில்லை. அவருக்கு எப்பவுமே எங்களோடை எண்டால் 'மூட்' சரிவராது தானே? அதுதான் எண்டு நினைச்சம்.

பின்னாலை வாகனத்திலை இருந்து பெட்டியை இறக்கிறாங்கள்.

'ஐயோ! அப்பு செத்துப் போச்சு'.

**சஞ்சீவி குறுநாவல்**

நேற்றுப் பின்னேரம் அம்மா கொழும்பு ஆஸ்பத்திரியிலை பார்க்கையுக்கை அப்பு நல்ல சுகமாத்தான் இருந்தது. இன்னொருக்கா நிண்டு பாக்க அம்மா துடிச்சவதான். மாமா பிடிச்ச பிடியா காலையிலை ரயிலேத்தி அனுப்பிட்டார். அம்மாவை அனுப்பிட்டுதான் ஆஸ்பத்திரிக்கு போயிருக்கிறார்.

இரவு நெஞ்சுவலி வந்து அப்பு முடிஞ்சு போச்சுது. ஓடித்திருஞ்சுஅலுவல்பார்த்து அப்புவை வீட்டுக்கு கொண்டு வந்து சேர்த்திட்டினம்.

எங்கடை நிலைமையை ஆருக்குச் சொல்லுறது? செத்த வீடு தடல்புடலா நடத்திறார் மாமா. அண்டைக்கு ஏ. எல். அட்மிஷன் கார்ட் எடுக்கிறநாள். ஸ்கூல்ல வந்து கேள்விப்பட்டு எல்லா நண்பர்களும் வீட்டை வந்திட்டினம்.

அம்மாவுக்கு உலகம் தெரியாது. நான் மூத்தவள். அடுத்து ரெண்டு தம்பிமார். கடைசித் தங்கைக்கு ஐந்து வயது. "ஏன் எல்லாரும் அழுகிறியள்?" என்றாள்.

'அப்பு செத்துப்போச்சு. அதுதான் நாங்கள் எல்லோரும் அழுறம். நீ அழாதை'— என்றுசொல்ல "ஓம்" என்று தலையாட்டிவிட்டு சிரித்து விளையாடுகிறாள். பார்க்கப் பரிதாபமாகஇருந்தது. அப்புவைச் சுத்தி கொளுத்திய சாம்பிராணிக் குச்சுப் பெட்டிகளை பொறுக்கி வடிவு பார்த்து அடுக்கிறாள் அவள்.

அவளைப் பார்க்கப் பார்க்கவே நெஞ்சு பத்தி எரியுது. அழுகை பொங்கிப் பொங்கி வருகுது. அப்பவே எங்களுக்கு எல்லாம் விளங்குது. இனி எல்லாம் மாமாவின்ரை ஆட்டம்தான். எங்களுக்குத் தோல்விதான்.

அடுத்த நாள் என்ரை பிரின்ஸிபல் அட்மிஷன் கார்ட்டும் கொண்டு திரும்பவும் வீட்டுக்கு வந்திட்டா.

"கமலா நடந்தது நடந்து போச்சு. நீ இனிக் கவனமாகப் படிச்சு சோதினை எழுதுறதுதான் கொப்புவுக்கு செய்யிற பரிகாரம். அவரிடை ஆசையை நிறைவேற்று. இன்னும் மூண்டு நாள்தானே இருக்கு......!"

மாமா வெடுக்கெண்டு அதிபரிலை பாஞ்சாரே.

"இனி அவளுக்கு என்ன சோதினை? வீட்டிலை இருக்கட்டும். இந்தக் கவலையோடை உருப்படியா எழுத மாட்டாள். தகப்பன் செத்து ஒரு கிழமைக்குள்ளை வீட்டை விட்டு வெளியே போறது அழகோ? அடுத்த அடுத்த வருஷம் பெடியன்கள் கவனமாக படிச்சு எழுதட்டும்!" — என்றார்.



அதிபரும் விட்டுக் கொடுக்கவில்லை.

"உதெல்லாம் பழைய கால முறைபாருங்கோ. அவள் படிக்கத்தக்க பிள்ளை. நான் வந்து கூட்டிப்போறன். எழுதட்டும்"

எங்கடை குடும்ப விசயங்களிலை ஆரும் உருப்படியா தலையிடுறது மாமாவுக்கு பிடிக்காத விசயம்.

நான் சோதனைக்கு குளிச்சு வெளிக்கிடுற நேரம். மாமா செத்தவீட்டு கணக்கு பார்க்கிறார். அப்புவின்ரை பிரேதத்திலை போட்டு சுடலைக்கு எடுத்துப்போன அம்மாவின்ரை தாலிக்கொடி பிறகு மாமாவின்ரை கையிலை இருந்து கண்ணிலை படவில்லை. அதுக்கு அளவா கணக்கு முடிச்சு விடுவார் போல் இருக்கு.

இன்னும் இரண்டு நிமிசம் நிண்டால் கணக்குத் தெரியும். அதுக்கிடையிலை அதிபர் வந்து கூப்பிட நான் பரீட்சை மண்டபத்துக்கு போகிறேன். மனதிலே சுமைகள்.

'போட்டு வாறன்' என்றேன்.

அம்மாவின் பார்வையை கண்ணீர் திரையிட்டு மறைக்கிறது. மாமா கணக்குக்குள் தலையை ஒட்டியபடியே 'ம்' என்றார்.

பரீட்சை மண்டபத்தில் எல்லோரும் குசலம் விசாரிக்கிறார்கள். எனக்கு அழுகை அழுகையாக வந்தது. ஒருபடி பரீட்சையை ஒப்பேற்றி விடுகிறேன். பாடங்களுக்கு இடையில் அப்பு வருவதாகச் சொன்ன புதுவருடப் பிறப்பு வந்து உயிரை வாங்கிற்று. பரீட்சை முடியும் தருணம் அந்தியேட்டி ஆயத்தங்களில் மாமா இறங்கி விட்டார்.

இந்தப் பரீட்சை எனக்குச் சரியான சோதனைக் காலம். யாருக்கும் இப்படி வாழ்க்கை அமையவே கூடாது என நான் அப்ப நினைச்சேன்.

அப்பாவி அப்பு — பொல்லாத மாமா — செத்த வீட்டில் அட்மிஷன் கார்ட் உடன் நண்பர்கள் — தாலிக்கொடியைப் பிறகு கண்ணாலும் ஆசைக்கு காணாத அம்மா — ஒரு கணத்தில் தடம் புரண்ட வாழ்க்கை — பரீட்சை ஆரம்பம் — இடையிலை சோகமான வருஷப் பிறப்பு — பரீட்சை முடிவு — அந்தியேட்டி — அழுத வாழ்க்கை.

(XI ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரனில் மனிதன் போய் இறங்கியதால் சாத்திரங்கள் பொய்யாகிப் போய்விடுமா?

"நிலா வெளிச்சத்தில் படுத்து உறங்கக்கூடாது. அந்த நிலாக்கதிர்கள் பட்டால் பைத்தியம் பிடிக்கும்' — இப்படிச் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

நிலா வெளிச்சத்தில் படுத்துக் கொள்வது குளிர்ச்சி தானே? அதனால் எப்படிச் சித்தம் பாதிக்கப்பட முடியும்? — இப்படி ஒரு சந்தேகம் நமக்கு எழலாம்.

சித்தசுவாதீனம் இல்லாதவர்களைக் குணப்படுத்தும் நமது வைத்தியர்கள், அமாவாசை நாளிலும் பௌர்ணமி நாளிலும் மிக ஜாக்கிரதையாக இருப்பார்கள். அப்போது அந்தக் கலக்கத்தின் வேகம் அதிகம் என்பது ஐதிகம்.

சந்திர மண்டலத்துக்கு மனிதன் போய் அந்த மண்ணை எடுத்துக்கொண்டு வந்தபிறகு, சந்திரன் என்ற கிரகம் பூமியிலுள்ள மனிதர்களைப் பாதிப்பதாக ஜோதிட சாஸ்திரத்தில் சொல்லுவது எத்தகைய அறியாமை? — இன்று பகுத்தறிவு வாதிகள் இப்படிச் சொல்லுகிறார்கள்.

ஆனால், இன்றைய மருத்துவ விஞ்ஞானம் என்ன சொல்லுகிறது?

பென்சில்வேனியா மாநிலத்தில் ராவிட்ஸ் என்ற அமெரிக்க மனோதத்துவ டாக்டர் ஆராய்ச்சி நடத்தினார், எப்படி? மனநோய் உள்ள நோயாளிகளின் மூளைகளின் பிரதிபலிப்பு மின்னணு அலைகளாகப் பதிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு நாளும் அந்த அலைவடிவம் படமெடுக்கப்பட்டது. அந்த அலைகள் உச்ச அளவு தாறுமாறாகப் பதிவானது எப்போது தெரியுமா? அமாவாசையன்றும் பௌர்ணமியன்றும்!

'மனநோய் உள்ளவர்களைச் சந்திரனின் சஞ்சாரம் நிச்சயமாகப் பாதிக்கிறது' என்று தன் ஆராய்ச்சியின் முடிவைக் கூறுகிறார் டாக்டர் ராவிட்ஸ்.

★ ★ ★

"பொய்யான பொருளே மெய்யாக உருவாயிற்று.

"இருளிலிருந்து ஒளி பிறந்தது.

உணர்வில்லாத பொருளே "உணர்ச்சிக்கு அடிப்படை ஆயிற்று."

உபநிடதங்கள் இப்படிக் கூறுகின்றன.

"நமது உடலில் உள்ள நாம் அறியாத பொருள் சூட்சும சரீரம்.

"அது அளவில்லாதது; அது எல்லையில்லாதது.

"ஆனால், அதன் மூலம் நாம் உணர முடிவதில்லை.!"

— இதுவும் உபநிடதக் கூற்று.

உடல் கூற்றைப்பற்றி மருத்துவக்கலை என்ன சொல்லுகிறது?

"நமது உடம்பில் ஒரு லட்சம் கோடி அணுக்கள் இருக்கின்றன. அவை நமது ஆயுளில் அழிந்து மீண்டும் பிறந்தும், உருமாறியும் இயங்குகின்றன. நமது உடலின் உயிர்ப்புக்கு அவைதான் மூலாதாரம். ஆனால், அவற்றை நாம் காணமுடியாது. அதன் அளவும் எல்லையும் நாம் உணரக் கூடியவற்றைக் கடந்தவை... அந்த

**- லட்சுமி -**

அணுக்களுக்குப் பார்வை இல்லை. ஆனால், அவையே நம்மைப் பார்க்க வைக்கின்றன. அவற்றுக்கு உணர்வு இல்லை. ஆனால், அவை தாம் நமது உணர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றன!"

ஐன்ஸ்டீன் கூறுகிறார்: "எந்தப் பொருளை நாம் அறிய முடியவில்லையோ, எது நம்மால் உணர முடியாததாக இருக்கிறதோ, அதுவே நாம் அறியும் பொருளின், உணரும் உணர்வின் மூலாதாரமாக இருக்கிறது..."

★ ★ ★

கீதையில் கண்ணன் அர்ஜுனனிடம் கூறுகிறான்.

"எழுந்திரு அர்ஜுனா! தியானயோகத்தைக் கடைப்பிடி. இதன்மூலம் நீ ஐம்புலன்களையும் அடக்கக் கற்றுக்கொள். உன் மனத்தில் இந்த யோகத்தின் மூலம், நீ வேண்டும் பொருளைத் தொடர்ந்து சென்று கண்டுபிடி. நேரம், இடம், திசை இவை இன்றி எந்தக் கலக்கத்துக்கும் இடம் தராமல், உன் நினைவை ஊன்றிக் கொள். உனக்கு வெற்றி கிடைக்கும்."

ஐசக் நியூட்டனிடம் விஞ்ஞானிகள் கேட்டார்கள்.

"ஐயா பூமியின் ஈர்ப்புச் சக்தியை நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"

நியூட்டன் சிரித்துக் கொண்டே சொன்னார். "நான் அதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டே இருந்தேன். தொடர்ந்து வேறு எந்த நினைவும் இன்றி, இந்த விடையையே உள் மனத்தில் தேடிக் கொண்டிருந்தேன். வெற்றிதான் கிடைக்கும் — கிடைக்கவேண்டும் என்று திடமாக நம்பி நினைவை ஊன்றிக் கொண்டிருந்தேன்!"

மனோதத்துவ நிபுணர்கள் இப்படிக் கூறுகிறார்கள்.

"உங்களுடைய மூளையில் எண்ணற்ற பிம்பங்கள் இருக்கின்றன. மிகச் சாதாரண விஷயத்திலிருந்து மிகப்பெரிய விஷயம் வரையில் அவற்றிலிருந்து நீங்கள் தேடிக் கண்டுபிடிக்கலாம். உங்கள் வெற்றி, இப்படிக் கலக்கமற்ற ஆழ்ந்த சிந்தனையின் மூலம் சரியான விஷயத்தை அறிந்து அடையாளம் கண்டு கொள்வதில்தான் இருக்கிறது!"

★ ★ ★

சூரியன்தான் நமது இருதயத்தைக் கட்டுப்படுத்துகிறது. நமது இருதயம் வலுவடைய சூரியனை வணங்க வேண்டும். சூரிய நமஸ்காரம் செய்வதனால் இருதய நோய்கள் நீங்குகின்றன. இது நமது முன்னோர் கூறிய சாஸ்திரம்.

'சூரியன் என்பது பூமியைப் போன்ற ஒரு கிரகம். அதில் உயிர்கள்கூட இல்லை. அது தானே சுழல்வதும் பிற கிரகங்களின் சுழற்சியில் கலந்து கொள்வதும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு. அப்படி இருக்க சூரியனாவது, நமது இருதய நோய்களைக் குணப்படுத்துவதாவது? என்ன அறியாமை?' — இப்படிப் பகுத்தறிவுவாதிகள் கேட்கலாம்.

பகுத்தறிவு ஆராய்ச்சியில் பெயர் போன ரஷ்யாவில் லெனின்கிராட் நகரத்தில் உள்ள இருதய நோய் ஆராய்ச்சி நிலையத்தில் பணி

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மீண்டும் சாள்ஸ் சிக்கல்!

இலங்கையில் 50 ஆவது சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பிக்க பிரதம அதிதியாக வருகை தந்திருந்தார் இளவரசர் சாள்ஸ். அவரின் இந்த விஜயம் இலங்கைக்கும், சுதந்திரப் பொன் விழாவுக்கும் பெருமை சேர்த்திருப்பதாகப் பலரும் கருதுகிறார்கள்.

நான்குநாள் விஜயமாக இலங்கை வந்த அவர் இங்கு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருக்கிறார். இவ்வாறு பல்வேறு நாடுகளுக்கும் சென்று அங்குள்ள அபிவிருத்தி— ஆக்க—அறிவியல் துறைகளை ஊக்குவிக்கும் அவரது பணி இன்று நேற்றுத் தொடங்கியதல்ல.

சாள்ஸின் இலங்கை விஜயம் பற்றி விரிவான பல நிகழ்ச்சிகளை ரூபவாகினி ஒளிபரப்பி இருந்தது. இலங்கை மக்களின் மனங்களில் சாள்ஸ் இடம் பிடிக்கத் தொடங்கி இருந்தார். இதைப்போலவே சாள்ஸ் பற்றிய கருத்தில்—பத்திரிகைகளின் போக்கிலும்—மக்களின் கருத்திலும்—உலகளாவிய ரீதியில் மாற்றம் தென்படத் தொடங்கியிருக்கிறது.

'சாள்ஸின் இலங்கை விஜயத்தின்போது டயானாவும் கூட வந்திருந்தால்...' என்ற கற்பனை இனிக்கத்தான் செய்கிறது. அதற்கு சாள்ஸிற்கும் கொடுத்துவைக்கவில்லை; இந்த உலகுக்கும் கொடுத்து வைக்கவில்லை.

சாள்ஸின் இயற்கையான சுபாவம் பொதுவாகவே அவரை பத்திரிகையாளர்களிடம் இருந்து ஒதுக்கி வைத்திருந்தது. இதனால் அவர் செய்யும் சமூக சேவைகள் பெரிதும் விளம்பரப் படுத்தப்படவில்லை என்றே கூறலாம். விளம்பரங்களையும்—பத்திரிகைகளால் விமர்சிக்கப்படுதலையும்—பத்திரிகைகளில் முழுப்பக்க படங்களுக்கு போஸ் கொடுப்பதையும் சாள்ஸ் தனது இலட்சியமாகக் கொண்டிருக்கவில்லை. பத்திரிகைகளும் கூட கமெராக்களுடன் சாள்ஸை துரத்துவதில் பெரும் ஆர்வம் காட்டவில்லை. இடைக்கிடை அவரிடம் ஏதாவது குறைகண்டு பெரிதுபடுத்தவே பெரும்பாலும் முனைந்து வந்திருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

எனினும் அண்மைக் காலங்களில் சாள்ஸ் மீது பெரும் குற்றச்சாட்டுக்களை வாரி இறைத்து வந்த பத்திரிகைகளின் போக்கில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. காலப்போக்கில் இம்மாற்றம் விஸ்வரூபம் எடுக்கும்போது சாள்ஸ் பத்திரிகைகளிலும்—மக்கள் மனங்களிலும் பெரியதோர் இடத்தைப் பிடிக்கக் கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன.

கமெராக்களைக் காவிக் கொண்டு செய்தியாளர்கள் சாள்ஸை தொடரும் காலம் தொடங்கிவிட்டது. அவரின் ஆரவாரமற்றசமூகசேவைகள் வெளிச்சத்துக்கு வருகின்றன. எதையும் தனக்கே உரித்தான அமைதியுடன் எதிர்கொள்கிறார் சாள்ஸ்.

சாள்ஸ் தனது கடமைக்கு அடிமையாகவே தன்னை வைத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அரச குடும்பச் செலவில் தன் கடமைகளை அவர் விளம்பரப் படுத்தவில்லை. ஆண்டொன்றுக்கு மக்கள் கூடும் சுமார் ஐந்நூறு நிகழ்வுகளை அவரால் தவிர்க்க முடிவதில்லை. அங்கெல்லாம் தனது சேவை நோக்கத்தை —ஆர்வத்தை வலியுறுத்தி வந்திருக்கிறார்.

சுமார் 350க்கும் மேற்பட்ட தரும, ஸ்தாபனங்கள், நிதியங்களுடன் அவருக்கு ஈடுபாடு உண்டு. அவை ஆண்டொன்றுக்கு சுமார் மூன்றரைக் கோடி டொலர்களை வசூலிக்க வேண்டிய நிலையில் உள்ளன. இவற்றில் சுமார் பத்து லட்சம் டொலர் பணம் சாள்ஸின் சொந்த வருமானத்தில் இருந்து மட்டும் வழங்கப்படுகிறது.

தற்போது இளவரசர்களான வில்லியம், ஹரி இருவருக்கும் தந்தையின் அரவணைப்புக் கிடைக்கிறது; ஆழ ஓடியிருக்கும் அவரின் பாசம் புரிகிறது: நிச்சயமாக எலிஸெபெத் மகாராணியின் கைகளால் வளர்க்கப்பட்ட சாள்ஸைவிட, சாள்ஸின் கைகளில் விடப்பட்ட இவர்கள் கொடுத்துவைத்தவர்களே என 'நியூஸ்வீக்' ஒரு கட்டுரையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

பத்திரிகைகள் சேற்றை வாரி இறைக்கும் போதெல்லாம் கொம்பி எழுந்தவர் அல்லர் சாள்ஸ். தனது கசப்பான உணர்வுகளை நண்பர்களிடம் சூசகமாத் தெரிவிப்பார். அவ்வளவே! இப்போது பத்திரிகைகள் தன்னைப் பெரிதாககத் தூக்கிப் பிடிக்க முனைகின்றன என அறிந்தாலும்—தனதுபிள்ளைகளையும்—பிள்ளைப் பாசத்தையும் — செய்தியாளர்கள் முன்னிலையில் விற்று விட அவர் தயாரில்லை.

குழந்தைப்பிள்ளையிடம் 'அம்மாவா அப்பாவா அச்சா?' என்று கேட்டால் பட்டென்று 'இரண்டுபேரும்' எனப்பதில் வரும். நண்பர்களைக் கேட்டால் உண்மை தெரியவரும்.

சாள்ஸ் தேவையான இடத்தில் தேவையான அளவு விட்டுக் கொடுக்கும் ஒரு நல்ல தந்தை என்ற உணர்வு வில்லியத்திடம், இருப்பதாக இப்போது அவனது நண்பர்கள் தெரிவித்து இருக்கின்றார்கள்.

1997 இல் தென்னாபிரிக்காவுக்கு ஹரியுடன் விஜயம் செய்த சாள்ஸின் தந்தைப் பாசத்தை பல பத்திரிகையாளர்களும் உயரதிகாரிகளும் 'எக்ஸ் — ரே' கண்கொண்டு அவதானித்துக் கொண்டனர். மெல்லத் தோளில் கை வைத்து 'என் மகன்' என அவர் செய்த அறிமுகம் ஆழமானது.

ஆக இளவரசர்கள் இருவருக்கும் சாள்ஸ் ஒரு மனம் கவர்ந்த தந்தை ஆகிவிட்டார். இது இல்லாதபோது வாழ்க்கை அரச குடும்பம் என்றாலென்ன ஆண்டி குடும்பம் என்றாலென்ன வெறுத்துத்தானே போகும்?

16 வயதை எட்டும் வில்லியம் இதற்கிடையில் கமெரா பிளாஷ்களுக்குப் போஸ் கொடுக்கும் போலிமனோபாவத்துக்கு நிறையவே பழக்கப்பட்டிருந்தான். இப்படிப் பத்திரிகையாளர்கள் தூக்கிப் பிடித்த போதெல்லாம் கண்டுகொள்ளாதிருந்த ஸ்பென்ஸர் குடும்பம்—டயான விபத்தில் மாட்டிய போதுதான் — கமெரா சுமப்பவர்களை எதிரிகளாகப் பார்த்தது.

இவ்வளவு காலமும் இனிப்பாக மின்னிய 'பிளாஷ்கள் இப்போது நெருப்பாக—துப்பாக்கிகளாகத் தெரிகின்றன.

பிள்ளைகள் ஓரளவுக்

ஐம்பது வயதை எட்டும் சாள்ஸின் தலைக்குஇன்னமும் கிரீடம் கிடைக்கவில்லை. வாழும் வரை இவர் இளவரசர் தானே என்றகேள்வியும் எழுகிறது. சாள்ஸ் மக்களின் அபிமானத்தையும் பத்திரிகையாளர்களின் செல்வாக்கையும் தாராளமாகத் தட்டிக் கொள்ளாதவரை ராணி ராணிதான்.

தற்போது பத்திரிகைகளின் போக்கில் ஏற்படும் மாற்றம் தீவிரமாகும்போது — சாள்ஸ் மக்களின் ஆதரவையும் தாராளமாகப் பெற்றுக் கொண்டால்—அரசகுடும்ப நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்பட வேண்டி வரலாம்.

## அம்பிகா

சாள்ஸ்—கமிலா விவகாரம் வேறு குட்டையைக் குழப்பி நிற்கிறது. இதுவிடயத்தில் ஒளிவுமறைவு இல்லாமல் தெளிவாகவே காணப்படுகிறார் சாள்ஸ்.

பிரிட்டிஷ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக மட்டும் அல்ல—தனது மன எண்ணப் படியும்கூட — சாள்ஸ் கமிலாவை மணம் முடிக்கும் எண்ணத்தில் இல்லை என்பது அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்குத் தெரியும்.


சாள்ஸ் – கமிலா நட்பு அல்லது காதல்...... அது எதுவாகட்டும் ஆழமானது; புரிந்துணர்வு கொண்டது. சாள்ஸ் எதை நினைக்கிறாரோ, விரும்புகிறாரோ, எதிர்பார்க்கிறாரோ அதை இயல்பாகச் செய்ய கமிலாவால் இயலுகிறது. அதுதான் ஐக்கியம். ஆனால் அவர்களின் இந்த அன்பு ஒப்பந்தத்தில் திருமணம் என்ற ஷரத்து இடம் பெற வாய்ப்பில்லை.

சாள்ஸ் – டயானா திருமணத்தில் தனது தந்தையின் வற்புறுத்தல் கடுமையாக இருந்ததாக சாள்ஸ் பகிரங்கமாக சாடியிருக்கிறார். இப்படியான பேச்சுகளால் அரச குடும்பத்துக்கு சாள்ஸ் ஒரு பிரச்சினையாக உருவெடுக்கத் தொடங்கினார்.

திருமணத்துக்கு முன்பே —நிச்சயத்தார்த்தம் முடிந்த பின்னர், சாள்ஸ் – கமிலா விவகாரம் பற்றியெல்லாம் டயானா அவதானித்து விட்டார். ஆனால் திருமணத்திலிருந்து பின்வாங்க அவரின் இரு சகோதரிகளும் இணங்கவில்லை. பின்னாலே இவ்வளவு சிக்கல்கள் எழும் — குடும்ப விவகாரம் உலகச் சந்திக்குவரும் — என்றெல்லாம் அப்போதே தெரிந்திருந்தால் டயானா அன்றே பின்வாங்கி இருக்கலாம்தான்! என்ன செய்வது? விதி விடவில்லை. உலகம் வாய்பிளந்து நிற்க திருமணம் நடந்தது — மனதில் குமுறும் எரிமலைகள் இரண்டுக்கு இடையில்!

திருமணத்துக்கு முன்பே டயானாவை ஒதுங்கும்படி சாள்ஸ் சொல்லாமல் சொல்ல கமிலாவைப் பயன்படுத்தி இருக்கலாம். டயானா பின்வாங்குவதை அவரின் ஆள்கள் கௌரவக் குறைவாக எடுத்து விட்டார்கள். முடிவு— வாழ்வு முழுவதும் பூகம்பம்தான். குடும்பம் என்று ஆனபின் விட்டுக் கொடுக்க டயானா தயாரில்லை, டயானாவின் போக்கில் எடுபட சாள்ஸும் தயாரில்லை; இருவர் பார்வைகளும் இரண்டு பக்கம் பார்க்கத் தொடங்கின.

(IX ஆம் பக்கம் பார்க்க)



கருத்தொருமிக்க முடியாத சாள்ஸ்— டயானா தம்பதியர் வெவ்வேறு திசையில் பிரிந்தனர்.


சாள்ஸின் வருமானம் ஆண்டொன்றுக்கு ஐம்பது லட்சம் டொலர்கள் வரை இருக்கும். இதில் 20 வீதமான பணம் தான் இந்த தரும நிதியங்களைச் சுளையாகச் சென்றடைகிறது.

பார்த்தால் எந்நேரமும் ஸீரியஸாகத் தெரிபவர் சாள்ஸ். ஆனால் அவரின் உள்ளுணர்வுகள் மென்மையானவை: ஆரவாரமற்றவை; எளியவை—என அவரோடு நெருங்கிப் பழகும் நண்பர்கள் தெரிவிக்கிறார்கள். தாவரங்களுடன் பேசும் அளவுக்கு அவர் அன்பு மனம் கொண்டவர். அவரால் சில சந்தர்ப்பங்களில் பகிடிவிட்டு — சிரித்துப்பேசி மற்றவர்களை அசத்திவிட முடிகிறது. எதுவும் அளவாக இருப்பதால் அது அருமையும் பெருமையும் ஆகியும் விடுகிறது.

அவரது செயல்கள் அரசியல்தனம் அற்றவையாக —கவர்ச்சி; விளம்பரம் குறைந்தவையாக—இருப்பது ஏனோ பலருக்குப் பிடிக்கவில்லை.

இளமைக்காலம் கெடுபிடியான கட்டுப்பாடுகளுடன் கூடியதாக இருந்திருக்கும். அதன் தாக்கங்கள் அவர் வாழ்வில் தென்படக்கூடும் என்ற ஊகங்களை அமெரிக்கப் பத்திரிகையொன்று தெரிவித்து இருந்தது. ஆனால் தனது பிள்ளைகளான வில்லியம், ஹரி இருவருக்கும் அவர் ஒரு நல்ல தந்தையாக இருக்கவே முனைகிறார்.

பிள்ளைகள் சுதந்திரமாக அவரோடு பழகச் சில தடைகள் இருந்து வந்தமை அனைவருக்கும் தெரிந்த விடயம். இளமையிலேயே விளம்பர மாயைக்குள்—பத்திரிகைப் பக்கங்களுக்குள்—சமூக சேவை என்ற நாடகத்துள் அவர்கள் புகுவதைக் கண்டு சாள்ஸ் [illegible] யிருக்கிறார்.



கருத்தொருமித்த சாள்ஸ் — கமீலா நெஞ்சத்தால் இணைந்தாலும் திருமணப் பந்தத்தால் இணைய முடியவில்லை.

தன்னைச்சரி என்றுநினைப்பவர்கள் நினைக்கட்டும்; தவறென்று கணிப்பவர்கள் கணிக்கட்டும். நான் எனது பாதையில் செல்வேன் என்ற அவரின் எண்ணம் நீண்ட காலப் போக்கில் அவருக்கு வாய்ப்பாகவே மாறி வருகிறது.

வில்லியத்திடம் பத்திரிகைக்காரர்களின் வாலாட்டம் வாய்க்கவில்லை [illegible] அவரின் நண்பர்களிடம் [illegible] புத்துலக்கி இருக்கிறார்கள்.

கேனும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவேண்டும். அடுத்தவர்களோடு கலந்து பழகிவிட வேண்டும் என்ற ஏக்கம்—எண்ணம்—சாள்ஸிடம் தெரிகிறது. அவர்களுக்குரிய புதிய பாடசாலைத் தெரிவு அந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. எனினும் அரச குடும்பத்திற்குரிய பாதுகாப்பு காரணிகள் ஓர் எல்லைக்கு அப்பால் அவர்களுக்குச் சுதந்திரம் வழங்க முடியாத நிலைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரு

நீண்ட நாள்களாகவே என் மண்டைக்குள் ஒரு குடைச்சல். முட்டுத் தீராதது போல உணர்வு.

தட்டின 'கேஸ்' என்று பார்க்கிறீர்களா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. தட்டுவதற்கு நாள் இருக்கிறது.

இத்தனைக்கும் நானொரு கதாசிரியன். முப்பது வருடங்களுக்கு மேலாக எழுத்துத்துறையிலே கால்பதித்துக் கரைகண்டவன். என் பெயர் எட்டாத இடமேயில்லை.

தற்புகழ்ச்சியெல்லாம் இருக்கட்டும். முதலில் விடயத்துக்கு வருவோம். என்ன குடைச்சல் என்று கேட்கிறீர்களா? அந்தக் குடைச்சலைத்தான் இன்று எப்படியாவது தீர்த்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறேன்.

அதாவது, நான் இறுதியாகக் கதையெழுதி ஒரு வருடத்துக்கும் மேலாகிறது. 'என்ன பிரச்சினை?' என்று நீங்கள் கேட்பது காதில் விழத்தான் செய்கிறது.

காரணங்கள் நிறைய இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. முதற் காரணம்—நேரம் இல்லை.

ஏனென்றால் அலுவலகம் ஒன்றிலே பணிபுரியும் நான் வீடுதிரும்ப ஆறு மணியாகிவிடும். பிறகு சாப்பிட்டுவிட்டுப் படுக்கத்தான் சரி. ஞாயிற்றுக்கிழமைகளிலே வீட்டு அலுவல்களில் நேரம் பறந்துவிடும்.

இரண்டாவது காரணம்?

அதைச் சொல்ல எனக்கு வெட்கமாக இருந்தாலும் சொல்லுகிறேன். 'இன்றைய காலகட்டத்தில் எதை எழுதுவது' என்ற தயக்கம். சமகாலப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுத எனக்குத் துணிவில்லை. ஏனென்றால், நான் இன்னும் கொஞ்சக்காலம் வாழ ஆசைப்படுகிறேன். வெளிப்படையாக எழுதாமல் மறைமுகமாக எழுதுவோமென்றால் அதற்கும் பயமாக உள்ளது.

சரி...சமகாலப் பிரச்சினைகளை விடுவோமே?

சமூகத்திலுள்ள சிக்கல்களை எழுதலாமென்றால் 'கரு' கிடைக்கிறதேயில்லை. எல்லாச்சமுதாயப்பிரச்சினைகளையும் மையமாக வைத்து எழுதிவிட்டேன். இனி எழுதுவதற்கு என்ன இருக்கிறது? இருந்த போதிலும் கை துறுதுறுத்துக்கொண்டிருக்கின்றதே! அதுதான் இன்று ஞாயிற்றுக்கிழமை எப்படியாவது ஒரு கதை எழுதிவிட வேண்டும் என்று தீர்மானம் எடுத்துவிட்டேன்

எனது மனைவியைப்பற்றி நான் கொஞ்சம் சொல்லத்தான் வேண்டும். எந்தவொரு கலைஞனும் கலைத்துறையிலே பிரகாசிக்க அவனுடைய மனைவியின் ஒத்துழைப்பும் மிகமுக்கிய காரணம் என்று சொல்லுவார்கள். ஆனால் என்விடயத்தில் அப்படியல்ல.

முற்போக்கான சிந்தனைகளோடு எழுதிக்கொண்டிருந்த நான் அவற்றிலிருந்து விடுபட்டு, காசுக்கு ஆசைப்பட்டு விட்டேன். கொழுத்த சீதனத்தோடு சிவபாக்கியம் வந்தபோது எனக்கு எல்லாமே சொர்க்கம் போலிருந்தது. அவளது குணத்தை அறியத்தொடங்கியபின்தான் வாழ்க்கையே வெறுத்தது. தாய்க்குத் தப்பாமல் மூன்று ஆண் பிள்ளைகள். வாழ்க்கை ஏனோ தானோவென்று இறப்பர்போல இழுபட்டு இப்போது இறுதிக்கட்டத்தினை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

ஓசைப்படாமல் அதிகாலை நான்கு மணிக்கே எழுந்துவிட்டேன். நீண்ட நாள்களுக்குப்பிறகு படைப்பு ஒன்றினை உருவாக்கப் போகும் மகிழ்வுடன் கதிரையிலே சாய்ந்து அமர்ந்து யோசிக்கத் தொடங்கினேன். கதை எழுதுவதற்கு நல்ல 'கரு' வேண்டுமே! நான் எழுந்தது என் மாதரசிக்கு எப்படியோ தெரிந்து விட்டது. வந்தாள்.

''எப்ப எழும்பினீங்கள்? இண்டைக்குக் கனவேலை கிடக்கு. உவன் குமரனுக்கு மில்லிலை திரிக்கிற மா எண்டாப் பிடியாது. அதுதான் நேற்றே பத்துக்கொத்து அரிசி ஊறப் போட்டிட்டன். தேத்தண்ணியை ஊத்திப் போட்டு இடிக்கத் தொடங்குங்கோ. நான் காலைச் சாப்பாடு செய்யவேணும்''

'பகீர்' என்றது எனக்கு.

''படுபாவி! விடியமுந்தியே வேலைவாங்கத் தொடங்கி விட்டாள். படிப்பிள்ளையின்ர வாய்க்குச்சிக்கு என்னைப் போட்டெல்லே முறிக்கப் பாக்கிறாள் மூதேவி! இனிக் கதை எழுதினமாதிரித்தான்''

மனதினுள்ளே திட்டித் தீர்த்தேன்.

''பாக்கியம்! ஞாயிற்றுக் கிழமையாவது கொஞ்சம் ஓய்வா இருக்க விடனப்பா. ஆறு நாளும் கிடந்து முறிஞ்சு போட்டு இண்டைக்காவது எப்பன் நிம்மதியா இருப்பமெண்டா நீ விடுகிறாயில்லை''

''ஓமோம். நான் இஞ்சை ஏழு நாளும் கிடந்து முறியிறன். அதுக்கொண்டுமில்லை. கந்தோரிலை காலாட்டிக் கொண்டிருக்கிறவருக்குத்தான் களைக்குதாம்......''

நான் சட்டென்று அவ்விடத்தைவிட்டு அகன்றேன். நின்றால் வீண்சச்சரவில் முடியும் என்பது எனக்குத் தெரியும். காலைக் கடன்களை முடித்து விட்டுத் தேநீரை ஊற்றினேன். கோப்பைகளில் ஊற்றிக்கொண்டு போய் உறங்கிக்கிடந்த எனது 'மும்மூர்த்திகளுக்கும்' திருப்பள்ளியெழுச்சி பாடினேன்.

பின்பு, 'உலக்கை வலக்கை பற்றி' இடிக்கத் தொடங்கினேன்.

மாவிடிக்குக் கொண்டிருக்கும் போதாவது 'கரு' வைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்போமென்றால் புண்ணியவதி விட்டாற்றானே!

உடுவில் அரவிந்தன்.

மாவை அரித்தபடி ஊர் வம்பை அளந்து கொண்டிருந்தாள். ஒரு வழியாகப் பத்துக் கொத்தையும் இடித்துத் தள்ளிவிட்டேன். துவாயினால்வியர்வையைத் துடைத்துக்கொண்டே கதிரையிலை போய் அமர்ந்து கொண்டேன். எனது சிந்தனைப் பறவை மறுபடியும் சிறகை விரித்தது.

''ம்...என்ன கதை எழுதுவம்? அம்பது அம்பத்தஞ்சிலை வந்த ஒண்டை மாத்தி அடிச்சுவிடுவமோ? சீ! அது பிழை. இரண்டுபேருக்கு ஒரு 'கரு' உருவாகிறது நடக்கலாம். ஆனால் இப்பிடிச் செய்யக்கூடாது''

காலை பத்து மணிவரை' மூளையைப் போட்டுக் கசக்கியும் எந்த 'ஐடியா'வும் தென்படவில்லை.

மத்தியானம் ஏனோ தானோவென்று சாப்பிட்டேன். ஒரு சின்னத் தூக்கம் போட ஆயத்தமாகும்போது எனது கடைக்குட்டி—நான் பெற்ற செல்வம்—திருப்பரன் வந்தான். வயது பன்னிரண்டுதான். ஆள் வலு சுழியன்.

''அப்பா! சைக்கிள் பின்சில்லுக்கு கிறிஸ் வைக்க வேணும். ஓடேக்க ஒரே சத்தம். ஆமிக்காரங்கள் பார்த்துச் சிரிக்கிறாங்கள்'' என்றான்.

''ஏன் அவையே வாங்கித் தந்தவையாம்? இன்னும் ஒரு மாதம் போகட்டும். பிறகு பூட்டுவம்''

''இல்லையப்பா. இப் பூட்ட வேணும். இல்லாட்டி உங்களுக்குத்தான் வீண் செலவு வரும். பிறகு பின் சில்லை அப்படியே மாத்தி, சைக்கிளும் மாத்த வேண்டிவம்ரு.''

வெருட்டிப் பார்க்கிறான்.

''பரன். வாற ஞாயிறு பூட்லாம். அதுவரையும் ஓடு''

''அம்மா! இஞ்சை பாருங்கோ அப்பாவை. சைக்கிள் பூட்டித் தரமாட்டாராம்'' இங்கிருந்தே முறைப்பாடு செய்தான்.

''எடே! எடே! ஏன் இப்ப கத்திறாய்? இண்டைக்கே பூட்டித்தாறன்'' என்றுகூறிக் கொண்டே புறப்பட்டேன்.

'நாச்சியார் வந்தா இப்ப பரம்பரைக் கதையெல்லாம் கதைச்சுத்தான் வழியனுப்பி வைப்பா. அதுக்கிடையிலை போயிடவேணும்?' என எண்ணியபடி மகனின் சைக்கிளை எடுத்தேன்.

ஏறி ஓடிக்கொண்டு வீதிக்கு வந்தேன். எனது வீட்டு மதில் நிறைந்து வெவ்வேறு வண்ணங்களிலே சுவரொட்டிகள் 'எனக்கு நன்றாக வேண்டும்' என நினைத்துக் கொண்டேன்.

அன்றைக்கு எங்கள் ஊர் சமூகப்பணி மன்றக்காரர் விழா 'நோட்டீஸ்' ஒட்டிய போது ஏசிக்கலைத்தவன் நான்.

இன்று இதைத் தடுக்கமுடியாமல் இருந்தது ஏன்? அந்தக்

(X ஆம் பக்கம் பார்க்க)

சஞ்சீவி
சிறுகதைகள்

# எங்கள் தெருவில்.....

எங்கள் தெரு அப்படியொன்றும் பிரசித்தமானது அல்ல நீங்கள் அறிந்து கொள்வதற்கு. எப்போதும் வாகனம் போனபின் புகை கிளப்பும் வீதிதான் அது. அதுவும் இருந்திட்டு ஒன்றுதான் போகும். இவையெல்லாம் இல்லையென்றால் எங்கள் தெருவில் காணும் புதினம் நாலாம் வீட்டு சிவசாமியண்ணரின் இராப் பாடல்கள்தான்.

உங்களுக்கு விளங்கும் என நினைக்கின்றேன். அவர் ஒன்றும் வித்துவானல்ல; அவர் உள்ளேவிடும் பனங்கள்ளு, சுப்பர்சொனிக் (நம்மூரில் கசிப்பின் மறுபெயர்) தான் அவரை வித்துவான் ஆக்கிவிடும். ஒவ்வொரு நாளும் நாலுமணியளவில் அவரின் கச்சேரி தொடங்கும். கச்சேரியில் தியாகராஜ பாகவதர், ரீ. எம். எஸ். சீர்காழி கோவிந்தராஜன், சில வேளைகளில் இக்கால உன்னிகிருஷ்ணனும்வந்து போவார்கள்.

இடையில் அவரின் மனைவி குழப்பினால், கையில் கிடைக்கும் பொருள் மனைவிமேல் தாளம் போடும். இதனால் மனைவி எதுவும் தடுப்பதில்லை. ஆனால் சிவசாமியண்ணன் தானாக இராத்தாமதும் விடுவதில்லை. அடியுதை தாராளம். ஒவ்வொரு நாளும் அவரின் அட்டகாசம் தொடரும்.

எனது அப்பாவும், எதிர் வீட்டு சிவலிங்கமாமாவும் கூடியிருந்து சிவசாமியண்ணையை கிண்டல் அடிப்பது வழக்கம்.

''இஞ்சை சிவலிங்கம் இந்த குடியில் என்ன இருக்கின்றது?''

''அது சிவசாமியிடம் அல்லது குடிக்கிறவையிடம் தான் கேட்க வேண்டும்...''

இரண்டு பேரும் ஏதோ பெரிய ''ஜோக்' சொன்னது போல் விழுந்து விழுந்து சிரித்தார்கள். சிவசாமியண்ணரின் பாடல்கள் உரத்துக் கேட்டன. இடையில் அவரின் மனைவியின் அழுகைச் சத்தம் கேட்டது. உடனே அப்பர் ''இஞ்சை சிவலிங்கம் ஒருத்தன் மனைவியை நெடுகப் போட்டு அடிப்பானாம்...கொஞ்சநாளில் அவனுக்கு கோயிலில் மேளம் அடிக்கிற தொழில் கிடைத்ததாம். அதன் பின்னர் அவன் மனைவியை அடிப்பதில்லையாம்''...என்று கூற இரண்டு பேரும் கெக்கட்டம் இட்டு சிரித்தார்கள்.

''...இது பாரும் ஷேக்ஸ்பியரின் கதை''

''...அப்ப ஷேக்ஸ்பியர் காலத்திலும் சிவசாமி இருந்திருக்கிறான்...''

மீண்டும் சிரிப்பு. நாங்கள் படுக்கைக்குப் போன பின்னும் சிவசாமியண்ணரின் பாடல்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

இப்படியாக இருக்கும் நாளில் எங்கள் தெருவில் ஒரு விசேடம் நடந்தது. விசேடம் ஒரு விசர் நாய் வடிவில் வந்து சேர்ந்தது ஒரு மாலையில். முதலில் அதனை யாரும் கவனிக்கவில்லை. அது நாலைந்து நாய்களை உருட்டி உருட்டி கடித்த பின்னர்தான் சிறுவர்களும் பெரியவர்களும் 'விசர் நாயடா விசர் நாயடா...' என்று கத்தியதும் ஊர் உஷார் அடைந்தது.

சிவலிங்கமாமா இரும்புக் கேற்றை உள்ளுக்கு நின்று இழுத்துச் சாத்தியபடி அப்பாவிடம் — ''இஞ்சை பேரின்பநாயகம் விசர் நாயாம்...''

''...ஓமாம் நீர் கண்டனீரே?...''

''ஓம். அல்ஷேசன் போல பெரிய நாயப்பா...''

இடையில் அம்மா—

''அடியுங்கோவன் அப்பா?...?''

''உமக்கென்ன விசரே... விசர்நாய் கடிக்க முன்னம் ஆளிலை பாயும். அது தானாகப் போகட்டும்...''

அம்மா கதவுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்ததால் அம்மாவுக்கு பின்னால் நான் நின்று கொண்டிருந்தேன்.

அப்பா சொல்லி வாய் மூட முன்னர் அந்த நாய் தெரு மூலையில் ஒரு நாயைக் கடிக்க விரட்டியது. மிகவும் பெரிய நாய் எனக்கும் பார்க்கப் பயமாக இருந்தது.

''சிவலிங்கம் உது பெரிய நாய் அடிக்கப் போய் ஆபத்தில் முடியும்'' — என்றார் அப்பா.

''...ஓம் பேரின்பம் ஆஸ்பத்திரியில் விசர் நாய் ஊசி மருந்தும் இல்லையாம்.''

இத்துடன் விசர் நாய் அடிக்கும் எண்ணம் அப்பாவுக்கும் பக்கப்பாட்டு சிவலிங்க மாமாவுக்கும் இல்லாமல் போய்விட்டது.

ஆனால் நாயின் இராஜாங்கம் தொடர்கின்றது. நாய்களை கலைப்பதும், ஆடுகளை, மாடுகளைக் கலைப்பதும், போகும் வாகனங்களை கலைப்பதுமாய் இருந்தது. பின்னர் கோயில் பக்கத்தில் படுத்தும் விட்டது.

இந்த நேரம் பார்த்து எங்கள் சிவசாமியண்ணன் ''கையில் வைத்து காத்திருந்தால் காலடியில் காத்திருக்கும்'' என்ற பாடலுடன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார்.

சிவலிங்க மாமா உடனே கேற்றால் எட்டிப்பார்த்து ''.. இஞ்சை பேரின்பம். உந்த விசரனுக்கு விசர் நாய் கடிக்கப் போகுது... உடனே சொல்லும்...''

அப்பாவும் உடனே சிவசாமியண்ணனுக்கு விசர்நாய் கிடக்கும் விடயத்தை உரத்த

இ. கோகுலராகவன்.

குரலின் அறிவித்தார்.

சிவசாமியண்ணன் திடீர் பிரேக் அடித்து நின்று நாயைப் பார்த்து ஒரு சீட்டி அடித்தார்.

நாய்க்கும் அவருக்கும் கொஞ்ச இடைவெளி தான் இருந்தது. எல்லோரும் நினைத்தோம் சிவசாமியண்ணன் ஓடி விடுவார். என்று. ஆனால் நடந்தது வேறு.

திரும்பியவர் வேலியில் எட்டி ஒரு கிளுவம் கதியாலை முறித்து துண்டாக்கிக் கொண்டு விசர் நாயை நோக்கி முன்னேறினார். விசர் நாய் உஷார் அடைந்து கடிப்பதற்கு முன்னே பாய்ந்தது. நாய் பாயவும் சிவசாமியண்ணரின் முதல் அடி விழவும் கணக்காய் இருந்தது.

பலமான அடி நாய் 'வக்' என்றபடி சரிந்து விழுந்தது. ஓங்கி அடுத்த அடி. நாய் ஒருக்கால் கழுத்தை மேலே வளைத்து ''விலுக்'' என்று ஓர் உதை உதைத்தது. வாயால் இரத்தம் கக்கியது. நான் கண்களை இறுக மூடிக் கொண்டேன்.

சம்பவம் நடந்து முடிந்தது. இரவு வரையும் அப்பா எதுவும் கதைக்கவில்லை. அப்பாவுக்கு இது வெட்கமாய் இருந்திருக்க வேண்டும். சிவலிங்க மாமாவுக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவரும் இரவு கதைக்க வரவில்லை. அப்பா ஈஸிச் செயாரில் இருந்தார். நான் படுக்கைக்குப் போகும் நேரம்.

',...எடியேய் நான் இல்லாவிட்டால் இந்த றோட்டுக்காரர் எல்லோரும் வீட்டுக் கான்ரி மூத்திரம் பெய்திருப்பாங்காடி...''

சிவசாமியண்ணரின் குரல் பெரிய சத்தமாய், விரசமாய் கேட்டது.

நான் அப்பாவைத் திரும்பிப் பார்த்தேன். அவர் ஈஸிச்செயாரில் இருந்து சிறுத்துச் சிறுத்து காணாமல் போய் விட்டது போல் இருந்தது. ★

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?

(அண்மையில் கொழும்பு கொம்பனித்தெருவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்து கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் இரவோடு இரவாக பெட்டி படுக்கைகளுடன் தெருவில் வீசப்பட்டனரல்லவா? அப்படி வீதியில் கிடந்த தமிழர் ஒருவரின் புலம்பல் இது.)

செம்பாட்டுப் புழுதி; சேவல்...பேடிரண்டு
செம்பரத்தை பூத்த சிறுமுத்தம்! மாவோடு
வம்பாடும் தென்றல்; வடுகொறிக்கும் சிற்றணில்கள்
செப்போடு எம்கிணற்றுத் தேவாமிர்தம்; உந்தச்
சம்பா, அரிக்கன் சாட்டரிசி ஈடுவராக்
கம்புப் புழுங்கல் கஞ்சியென.........
எல்லாம்போய்.. லொட்ஜில்
இடமும் பறிபோய்; நாம்
வெள்ளவத்தை றோட்டின் விளக்குத்தூண்கீழுள்ளோம்
எம்வீட்டு ஹோலில் இரவு படுத்தமென்றால்
அம்மா வந்தெழுப்ப அடுப்படியில் கண்விழிப்போம்!
உருண்டு உருண்டு உயிர்கசியக் கண்ணுறங்கி
வருடம் பலவாச்சு; வாடகை அறையென்ற
பெட்டிக்குள் பூச்சிகளாய் பிரேதக் களைதெரிய
கட்டில் மூட்டைகளின் கற்பழிப்புக் காளாகி
நெட்டை மரங்களென நிற்பதற்கும்; ஆயிரங்கள்
''கொட்டேனா'' லொச்சுக்கு கொட்டியதும்; பயனின்றிப்
பட்டாச்சுப் பாடு பலதடவைப்... இங்கேநாம்
நம்பர் கட்டிவிட்ட நாய்களைப்போல்; எம்வாழ்வும்
நம்பர்கள் இன்றி நடவாது என்ற நிலை.
ஏதோ, வெளிநாட்டு ஏஜண்ட் வரும்வரைக்கும்
நாதியிது என்ற நம்பொறுமை கூடஇன்று
பாதியிலே போச்சு படுக்கஒரு இடமென்ற
அந்த நிம்மதியும் அறுபட்டுத் தலைநகரின்
சந்தியிலே இன்று சால்வை விரித்தபடி...
பெட்டைநாய் குட்டிகளை பிடித்துவந்து எறிகின்ற
பற்றன்போல்!! எம்மைப் பறித்து எறிந்தாரே.
மதுரை வீதியிலே மங்கையவள் சிலம்பேந்தி
அதிர வந்தாளே; அதுபோல் ஏதோவாம்!?
கொழும்பு எரியமுதல் கோன்மனைகள் பாறமுதல்
வழிதெருவில் எறிபட்டெம் வயிறெல்லோ எரியுதுபார்
பெட்டைநாய் குட்டிகளை பிடித்து நடுத்தெருவில்
விட்டெறிந்த பாவ வினைப்பயனோ?
முன்வீட்டு ஆடு முருங்கையினை காந்துதெனப்
பின்காலை உடைத்த பெரும்பழியோ.. இல்லாட்டில்
வேலி படவைக்க வெந்நீரை ஊற்றியதும்
தாலி அடகில் தவிச்சமுயல் பறறியதும்
எட்டுவட்டி வாங்கி ஏழைபணம் உண்டதுவும்
சுட்டிறந்த உடலில் சுண்டுவிரல் மோதிரத்தை
வெட்டி எடுத்ததுவும் விளைவித்த துன்பமிதோ?
''பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?''

— ச. முகுந்தன் —

## எதிரொலி

வாழ்கிறார்கள் என்பதற்காய்..., வாழ்வை விரும்பித்தான்
வாழ்கிறார்கள் என்றில்லை மண்ணிலின்று — பாழ்விதியை
நொந்து, தமைநொந்து வேசத்துக் கேற்றபடி
'தெந்தெனாப்' போட்டுள்ளோம் தேர்ந்து.

வாழ்க்கை வெறுத்தவர்கள், வாடிக் கசங்கியவர்,
தோள்கள் இளைத்தவர்கள் தொய்ந்தவர்கள் — கூழும்
குடிக்கப் பலன் கேட்டோர் கூடிக் குமைய
எடுப்பார்கைப் பிள்ளையானோம் இங்கு.

ஆனாலும் நன்றாய் அமுங்கும் நிலக்கரிதான்
தீவளர்க்கும் என்று தெரிந்திடுக! — ஓயாமல்
யானை மிதித்தபுல் கூட எழுந்திடலாம்
ஆரறிவார் வையத் தியல்பு?

நெஞ்சில் எரியும் நெருப்பொன்றே மிச்சமென
விஞ்சும் மழைக்குளிரில் முக்குளித்தோம் — அந்த
நெருப்பு அணையாமல் நெய்விடுதல் தானெம்
வரலாற்றைக் காக்கும் வழி

— தேரடிச் சித்தர் —

## முடிவொன்று வேண்டும் முதல்!

தைமாதம் பிறந்தாச்சு தைரியமும் தந்தாச்சு
கையோடு பொங்கலிட்டுக் காரியத்தை முடிப்பதற்கு,
பாயினைச் சுற்றிவிட்டு, பரமசிவன் அம்மனையும்
கோயிலிலை போயொருக்கா கும்பிடவே வெளிக்கிட்டேன்.

இருட்டோட எழுந்திருந்து இறைநீரில் முகங்கழுவி
அருட்டுகின்ற கண்தூக்கம் அலசுவதால் போகவிட்டு
குருட்டாட்டம் தடுமாறிக் குறிநீறு — அது பூசி;
வெருட்டுகிற பனிக்குளிரில் விரைந்து தைத்தேன் — சைக்கிளினை

காலையிலே பத்திரிகை 'கட்அவுட்டை' தாங்கிவந்த
வேளையிலே நான்தெருவில் வேகமுடன் ஓடி வர,
வர்த்தகத் துறைமீது வாழ்ந்துவரும் மாணவர்கள்
தர்க்கமுடன் பேசக்கேட்டேன் — தங்கள்நிலை என்னவென!

முந்நூறு புள்ளிக்கு முழுதாக எட்டிறக்கிக்
கண்ணீரை வரவழைக்க காரணமும் உருவாச்சு;
வெந்நீரை எம்மீது வேதனைக்கு ஊற்றிவிட்ட
அன்னாரின் தலைமீது அவனியது இடிந்துவிழும்!

சாபமிட்டார் நங்கையர்கள், சாகும்வரை படிப்பமென்று
கோபமுடன் சூளுரைத்து, கொள்கையினை உறுதி செய்து
தாபமுடன் புத்தகத்தை தாங்கிவந்த தம்பியர்கள்
பாபமொன்றும் செய்யவில்லை, படிக்குந்துறை மாறவில்லை!

முருகா, நீயுந்தான் முக்கியமாய் இந்நிலையை
ஒருக்கா ஓடிவந்து ஒழுங்காக்கி இவர்களுக்கு
உருகி, 'கட்டவுட்'டை உயராதுசெய் என்றேன்!
வறுகிக் கொண்டோடினான் மறைந்து!

—கி.வாயுபுத்திரன் —

## உயிரெழுத்தின் நாயகியே!

அன்பின் சுந்தரியே
ஆண்டவன் படைப்பில்
இளமையின் தேவதை – நீ
ஈர் பத்து வயதினிலே
உனைக் கண்டதும்
ஊனமான நெஞ்சமதில்
எழுந்ததுதான் முதற் காதல்!
ஏற்றமதைத் தந்துவிட்டு
ஐம்புலன் சிந்தையிலே
ஒன்றிவிட்ட உன் நினைவில்
ஓராயிரம் கனவு கண்டேன்
ஔடதம் போன்றவளே – உன்
எஃகு இதயம் இளகமாட்டாதா?

— ஏழாலை கோகு —

## நரை

நீ
எட்டிப் பார்த்தபோது
நான்
அஞ்சினேன்,
அருவருப்படைந்தேன்!
பகலிரவாய்
உனையொழிக்கப்
பாடுபட்டேன்!
ஆனால்,
நீயோ
என்னைக்
கடவைகளிலும்
காவற் கூடங்களிலும்
காத்து வருகிறாய்!

— கி. பிரசன்னா —
(சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

## உயிர்களின் உணர்வுகள்

அல்லலுறும் இதயங்களுக்கு
ஆறுதல் கூற மனமற்ற
இதயமில்லா மனிதனே
ஈரமுள்ள நெஞ்சங்களை — உனது
உஷ்ண அம்புகளால்
ஊடுருவாமலாவது
எட்ட நீ நின்றிருக்கலாமே......?
ஏனிந்தக் குரோதம் உனக்கு?
ஐயமின்றி—நீ
ஒன்றை மட்டும் மனதில்வை
ஓர் நாள் நீ செய்த குற்றங்களுக்கு
ஔடதமற்ற தண்டனையை
அனுபவிப்பாய்!

—நீர்வை சுகந்தா—

## நின்மதி

நிம்மதி என்ன விலை?
சொன்னால் வாங்குவேன்.
உன் சந்நிதி கிடைக்கும் வரை
அதை நான் தேடுவேன்.
வெண்மதி ஒளியினிலும்
அதைத்தான் தேடுவேன்.
நின்மதி காணும் வரை
நிம்மதி எனக்கில்லை.

—செ.அற்புதராஜ்—
(மாணவன், இணுவில் மத்திய கல்லூரி)

## ஏனிந்தச் சோதனை?

வீடில்லை வேலியில்லை
வளவில்லை வருமானமில்லை
எல்லாமே ஏப்பமாகி
எட்டாண்டாகி விட்டது.

புள்ளி பெற்றாலும்
பள்ளி இல்லாமையால்
ஆசிரிய நியமனமில்லை
ஐயாயிரம் பணமுமில்லை.

வங்கியில் வைப்பின்மையால்
வங்கியில் வேலைவாய்ப்பில்லை
வலிவடக்கே!
ஏன் உனக்கு
இந்தச் சோதனை?

-தையூரான்-

## எப்படி நாம் வளர்வோம்?

அம்புலியைப் பாடிநாம் இங்கழைத்தோம் – நீல்
''ஆம்ஸ்றோங்,' அங்குசென்று ஆய்வுசெய்தான்
குந்துமிடம் தேடியே யாவும் வரும் – என்ற
கொள்கையில் என்றுமே பற்றுவைத்தோம்.

ஐதீகக் கதைகளிலே மனதைவிட்டோம் – வெறும்
அண்டப் புழுகுகளில் நாளை விட்டோம்
பௌதிக நுட்பமதில் அவன்வளர – பழம்
பரம்பரையை மென்றுதுப்பி வாழ்விழந்தோம்.

அண்டங்கள் கடந்தாய்வு செய்யும்வேளை நாம்
அடிக்கட்டை மாடுபோல் சுற்றி நின்றோம்
எய்துதற்கு புதிதாக அவர்கள்தேட – அம்பு
எய்தகதை அசைபோட்டு இன்பங்கண்டோம்.

பெருகிவரும் சனத்தொகையும் பசியும்நோயும் – கேள்விக்
குறியாக்கி மானுடத்தை வாட்டும்போது
இதிகாச நாயகியர் கற்பின்திண்மை – விஞ்சும்
எடைபார்க்க பட்டிமன்றம் போட்டுநின்றோம்.

கட்டுதற்கு கோவணமும் இல்லாவேளை – நாம்
பட்டுடுக்கும் கனவினிலே திளைத்திருந்தோம்
முட்டுவதும் மோதுவதும் தொழிலாய்க் கொண்டோம் – நலம்
எட்டுதற்கு என்னசெய்தோம், எப்போ செய்வோம்?

— புத்தூர் வே. இளையகுட்டி

## புதிய அரிச்சுவடி!

அரசுக்கு அழகு
ஆட்சியைத் தக்க வைத்தல்
ஆதாரமாய் அமைந்தது
அசலான தீர்வுப் பொதி
இரசிக்கக் கூடியது
இழுத் தடிப்பு நாடகம்
ஈனம் சேர்வது
ஈரமுள்ள தமிழர்க்கு
உவகை மிக்கது
உயிர்ப் பலி எடுப்பது
ஊக்கமாய் நடப்பது
ஊரிலே கைது செய்தல்
எல்லாரும் புகழ்வது
எம்மரசின் சாமர்த்தியம்
ஏமாற்றம் தருவது
ஏற்க முடியாத் தீர்வு
ஐயுறவு கொள்வது
அண்டி வாழ்வோர்க் காகாது
ஒருபோதும் இயலாதது
ஒத்து வாழும் தன்மை
ஓயாமல் தொடர்வது
ஓரம் கட்டும் போக்கு
ஔவியம் பேசுதல்
அரசுக்கு நன்று அன்று
எஃகாய் இருப்பது
எம்மை ஆள்வோரின் இதயம்.

—க. தியாகராசா—

## தம்பலகாமத்து தணல்!

விழியோரம் கண்ணீர் நதிகாய்ந்திடாமல்
விதவைகள் கரைந்தார்கள் கதறி
''பழிசெய்தம்'' என்று படலையில் மோதி
படைத்தோர்கள் சொரிந்தார்கள் குருதி
பழிவாங்கி வேலி வெடிதூவ...எட்டுப்
பொடியங்கள் தொலைந்தார்கள் சிதறி
உலகத்தின் கண்கள் குருடாகிப் போச்சே
அப்பாவி களுக்காரு உதவி?

வெறிதின்று, காவல் விசர்கொன்று... பிய்ந்த
இதழ்கள் உழுதார்கள் தெருவில்
புரியாமல் ஊரார் புகைந்தார்கள்; நூறு
புயல்களைக் கருக்கொண்டார் மனதில்
''அறியாமல் செத்தோர்...... பகையாட்கள்'' என்றால்
தருகிறோம் உடலென்றோர் திமிரில்
எரியாக வீழ்ந்தார் தமிழர்கள்; தீமை
வெருண்டோட எழுந்தார்கள் துணிவில்.


மன்னிப்பைக் கேட்டால் மடிந்திட்ட வாய்கள்
வலம்வந்து கவிபாட எழுமா?
பொன்னள்ளித் தந்தால் புழுதின்ற சேயின்
கனவெல்லாம் நனவாகி வருமா?
உண்மையைக் கொன்று— உலகுக்கு அன்பு
உறவென்று படங்காட்டுபவனே
என்னென்று உந்தன் அரசமரக் கொப்பில்
பதிவைக்க நினைக்குமென் மனமே?

— அருணன்

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார்த்தை விளையாட்டு




சிறுவர், சிறுமியரே!... இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படி வேண்டுமானாலும் எத்தலன தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது இருபத்தியைந்து வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

## இயலுமா?

ஆறு X ஆறு சதுரங்களைக் கொண்ட அட்டவணை ஒன்று கீழே காட்டப்பட்டுள்ளது. இதில் உள்ள ஆறு சதுரங்களில் நீங்கள் புள்ளியிட வேண்டும். ஒரு சதுரத்தில் புள்ளியிட்டால் அந்த சதுரம் உள்ள வரிசைக்கு மேலும் கீழும், இடமும் வலமும், மூலைக்கு மூலையும் உள்ள வேறு நேர் வரிசைகளில் புள்ளியிட முடியாது. எங்கே ஆறு புள்ளிகளை இடுங்கள் பார்க்கலாம்.

(XIஆம் பக்கம் பார்க்க)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## படிப்பு சுமையல்ல

தேர்வு காலம் வந்தாச்சு
திறமை காட்ட வாருங்கள்
பரீட்சைக் காலம் என்றாலே
பதற்றம் தானே வந்திடுமே.

படிக்கும் நேரம் படிக்காமல்
பயனில்லாமல் ஊர் சுற்றும்
விடலைக் கூட்டம் சேராமல்
வெற்றி காணப் படித்திடுவோம்.

நமக்கு முன்னே உயர்ந்தோரும்
நம்மைப் போல படித்தவரே
சுமையாய் படிப்பை எண்ணாமல்
சுவையாய் அதனை ஏற்போமே.

அம்மா அப்பா நினைவெல்லாம்
அருமைச் செல்வம் நம்முடைய
செம்மையான எதிர்காலம்
சிறப்பு மிக்க புகழ் வாழ்க்கை.

சின்னஞ் செடியே பின்னாளில்
செழித்துப் பெரிய மரமாகும்
சின்ன வயதுப் பழக்கம் தான்
சுடலை வரைக் கூட வரும்.

அறிவை நன்றாய் வளர்த்திடுவீர்
நாளைய தலைவர் நாமென்று
நம்பிக்கையுடன் தலை நிமிர்த்தி
நம்மை உயர்த்தும் வழிநடப்போம்!

- ச. அமுதினி-
(ஆண்டு 10, நாவற்குழி மகா வித்தியாலயம்)

## கண்டுபிடியுங்கள்!

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | லே | சி | யா | டா | து | யா | ரு |
| கு | ஸ் | ரி | ன | ந் | ஷ் | பெ | னா |
| வை | சி | க | லா | ர | பி | சீ | ஸ் |
| த் | கி | ஸி | பா | ஈ | ரா | க் | ல் |
| ஈ | யூ | ர் | ரா | கி | ன் | ரே | ஜே |
| நி | பா | ன் | மா | ஓ | ஸ் | யா | ர் |
| லி | யா | தி | ந் | இ | பி | தா | ம |
| சி | இ | த் | தா | லி | சூ | டா | ன் |

மேலேயுள்ள சதுர அட்டவணைக்குள் 21 நாடுகளின் பெயர்கள் ஒளிந்துள்ளன. மேலிருந்து கீழோ, கீழிருந்து மேலோ, பக்கவாட்டிலோ, பின்னுக்கிருந்து முன்பாகவோ, முன்னுக்கிருந்து பின்பாகவோ அப்பெயர்கள் உள்ளன. 'இந்தியா' என்ற பெயர் மாத்திரம் உங்களுக்கு வரைந்து காட்டப்பட்டுள்ளது. ஏனைய இருபது நாடுகளின் பெயர்களை இவ்வாறு கோடிட்டுக் காட்டுங்கள் பார்க்கலாம்.


(விடைXI ஆம் பக்கத்தில்)




## வேகமாக ஓடும் குதிரை

குதிரையும் கழுதையும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை. ஆனால் கழுதையை விடக் குதிரை பெரியது; மிக்க அழகானது.

குதிரையின் குளம்புகள் பிளவுபடாத ஒற்றைக் குளம்புகளாகும். அதன் வாலில் அடர்ந்து நீண்ட மயிர் அழகாகத் தொங்கும். குதிரையின் கழுத்தில் பிடரிமயிர் உண்டு.



குதிரைக்கு கொம்புகள் இல்லை. அதன் காதுகள் எப்பொழுதும் நிமிர்ந்தே இருக்கும். அதன் முகம் நீண்டிருக்கும். குதிரைக்கு மேல் வாயிலும் கீழ்வாயிலும் பற்கள் உண்டு.

வெள்ளை, கறுப்பு, சிவப்பு நிறங்களில் குதிரைகள் உண்டு. வண்டிக்குதிரை, ஏறுகுதிரை, பந்தயக் குதிரை எனப்பலவகைகளும் உள்ளன.

சில நாடுகளில் குதிரைகளைக் கட்டி ஏர் உழுகின்றனர். ஆசிய நாடுகளில் வண்டி இழுக்கவும், ஏறிச் செல்லவும், பந்தயங்களில் ஓடவும், வேட்டைக்கு ஏறிச்செல்லவும் குதிரைகள் பயன்படுகின்றன. குதிரை மிகவிரைவாக ஓடும். குதிரையேற்றம் நல்ல உடற்பயிற்சியாகும்.

**பிராணிகள் உலகம்**

முற்காலத்தில் நால் வகைப் படைகளில் குதிரைப்படையும் ஒன்று. ஒவ்வொரு வீரனுக்கும் அவன் குதிரை உயிர்த் தோழனைப் போன்றது. இது நன்றியறிதலுள்ளது. வளர்ப்போனிடம் அன்பாக இருக்கும்.

அரேபியாவில் குதிரைகள் அதிகம். அரேபியக் குதிரைகள் முதல் தரமானவை; பெரிதாயும் அழகாகவும் விளங்குபவை.

குதிரைகள் புல் தின்னும்; கொள் என்றால் அதற்கு மிகவும் விருப்பம். கடிவாளத்தைக் கண்டால் வெறுப்படையும். குதிரையைச் சேணம் முதலியவற்றால் அழகுபடுத்துவர்.

குதிரைக்குச் [illegible] வந்தால், காலால் உதைக்கும்; [illegible] பெற்ற குதிரை வேடிக்கை செய்யும்; நாட்டியமும் ஆடும்.

## முயன்று பாருங்கள்

பின்வரும் புதிர்களில் ஒவ்வொரு சொற்களுக்குக் கீழும் சில வினாக்கள் உள்ளன. அந்த வினாக்களுக்குரிய பதில்கள் அந்த சொற்களில் ஒளிந்துள்ளன. கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

I.

### மரகதம்

1. நிழலைத் தருவது.
2. ஓர் இராசி இது.
3. ஒரு வகையைக் குறிப்பது.
4. தேருக்கு மறுபெயர்.
5. உடலில் ஓர் உறுப்பு.
6. தட்டையான உலோகப்பொருள்.
7. யானைக்குப் பிடிப்பது.
8. வகுப்பு என்றும் பொருள்.
9. ஒரு நட்சத்திரம்.
10. விவசாயத்தை இப்படியும் சொல்வர்.

— ஜெ. பிரேமகாந்தன் —

II.

### பத்திரிகை

1. குதிரைக்கு மறுபெயர்.
2. இறைவனை இப்படியும் அழைக்கலாம்.
3. நட்புக்கு எதிரானது.
4. அரைக்கும் கருவி.
5. ஓர் உறுப்பு.
6. பத்திரிகையில் நீளவாக்கில் வருகின்ற பகுதியை இப்படி அழைப்பர்.

— இ. தணிகைவாசன் —
(ஆண்டு 10, ஹாட்லிக் கல்லூரி)

III.

### சாவகச்சேரி

1. செயலகத்துக்கு மறு பெயர்.
2. அரசாங்கம் அறவிடுவது.
3. யானையின் மறுபெயர்.
4. மானில் ஒரு வகை.
5. மக்கள் நெருக்கமாக வாழும் பகுதி.
6. இறத்தலைக் குறிப்பது.
7. வரிசையில் செல்வதைக் குறிக்கும்.
8. 'சேமி' எனத் தூண்டுவது.

— இரஞ்சினி சாம்பசிவம் —

(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

## சிட்டுக் குருவி

சிட்டுக் குருவி சிட்டுக்குருவி
சிரிச்சி பறந்திச்சாம்!

பட்டு வாலை ஆட்டியாட்டி
பாட்டு படிச்சுதாம்!

மெட்டுப் போட்ட தாய்க்குருவி
மெல்ல வந்திச்சாம்!

கெட்டுப் போன தாளம் தன்னை
சுட்டிக் காட்டிச்சாம்!

எட்டி நின்ற தந்தைக்குருவி
கிட்டே வந்திச்சாம்!

கெட்டிக்கார குஞ்சை ஆட
கெஞ்சிக் கேட்டிச்சாம்!

வெட்டி வந்த மாங்கனியை
பிட்டுக் கொடுத்திச்சாம்!

சிட்டுக் குருவிக் குஞ்சு இப்போ
சிறப்பாய் ஆடிச்சாம்!

எட்டுப்பக்கம் எகிறி எகிறி
எழிலைக் காட்டிச்சாம்!

- புவனேந்திரன் பிரதீப்காந்த் -
(ஆண்டு9, பரி.யோவான் கல்லூரி)

## காற்றாடி

அண்ணன் செய்த காற்றாடி
அழகு மிக்க காற்றாடி
வண்ணக் காகிதக் காற்றாடி
வாலே இல்லாக் காற்றாடி.

காற்றில் மிதக்கும் காற்றாடி
கண்டோர் வியக்கும் காற்றாடி
சற்றும் அயராக் காற்றாடி
சண்டைக்கு அழைக்கும் காற்றாடி.

—பிருதிவிராஜ் அபிராமி—
(ஆண்டு—2,
இந்து ஆரம்ப பாடசாலை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வெள்ளம்

முற்றும் துறந்த முனிவர்களாகட்டும் — இலட்சிய வேட்கை கொண்ட தியாகி களாகட்டும் எவரும் தனித்து நின்று எதனையும் சாதிக்க முடிவதில்லை.

இவர்கள் தமது நெறிகளிலே தவறாது நிலைக்க வேண்டின் உறுதுணையாய் கைகொடுக்க ஓர் இல்லறத்தான் மனது வைக்க வேண்டும்.

இப்படிப்பட்டவர்களுக்கு வேண்டியன வழங்கி இவர்களைத் தாங்கும் சக்தி வேறு யாருக்கு வாய்க்க முடியும்?

எனவே அவரவரை அவர் அவர் விரும்பும் நெறியின் கண் ஒழுக வழிகோலுகிறவன் இல்லறத்தான்.

மட்டுமோ? தானும் அறத்துக்கு இழுக்கு ஏற்படா வண்ணம் — குந்தகம் விளையாத விதமாக வாழ வேண்டிய கடமை அவனுக்கு உண்டு பொருள் ஈட்டப் புகுந்தாலும் அதை தவறில்லா வழிகளிலே ஈட்டவேண்டிய கட்டாயம்.

இல்வாழ்வு ஒரு பெரிய தவம். அறம் தவற அங்கே பல சந்தர்ப்பங்கள் கிட்டும். அனைத்தையும் அவதானமாகக் கையாண்டு தப்பிப் பிழைத்து வாழவேண்டும்.

அடுத்தவர்களுக்கு உதாரணமாக வாழ வேண்டும். பிழை விடுபவர்களை திருத்தி விட அருகதை இருக்கவேண்டும். அது மிகச் சிரமமானது.

ஆற்றின் ஒழுக்கி — அடுத்தவர்களை சரிவர நடத்தி தானும் அறன் இழுக்கா — அறம் தவறாது வாழும்—வாழ்வு தவம் செய்வாரினும் — நோற்பாரினும் கூடிய தவத்தை — நோன்மையினை — உடையது.

ஆனால் நாம் காண்பதோ — தாம் பிழை விட்டுக் கொண்டே அடுத்தவர்களைத் திருத்த முனைபவர்களைத்தான்.

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா
　　　　　இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து
　　　　　—0048

(இல்வாழ்க்கை)

— அம்பிகைபாகன் —

# இந்த வார இராசி பலன்

## [21 - 02 - 1998 முதல் 27 - 02 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| சூ, வி புத கே செ | இராசிச் சக்கரம் | | |
| வெ | | | ரா |
| | சந் | | |

மாற்றம்:

22 - 2 - 1998 இல் மீனம் இராசியில் செவ்வாய் மாறும்.

நாட்டில் மாற்றங்கள், திசைதிருப்பங்கள், தேர்தலால் புதிய அழுத்தங்கள் ஏற்பட இடம்உண்டு. தொழிலாளர்கள் புதிய வேண்டுகோள் விடலாம். மாணவர்கள் புதிய கல்வியால் திசைதிருப்பப்படலாம். விஞ்ஞான முறைகள் தலைதூக்கும். இந்திய அரசியலில் பெண் அரசியல்வாதியான சோனியா காந்திக்கு செல்வாக்கு அதிகரிக்கும். அரசியல்வாதிகள், தலைவர்களின் மனத்தளம்பலான பேச்சுக்களால் இந்திரா காங்கிரஸின் செல்வாக்கு அதிகரித்தபடி இருக்கும். தமிழ் நாட்டில் அறிஞர் கருணாநிதியின் அரசியல் செல்வாக்கு அதிகரிக்கும்.

உலகில் கிழக்கு நாடுகளுக்கும் — மேற்கு நாடுகளுக்கும் கருத்து வேற்றுமைகள் வர இடம் உண்டு. ஈராக்கில் ஐ நா. அழுத்தத்தால் போர் நிகழும் அபாயமும் அழிவுகளும் தொடரப் பலன் உண்டு. மத்திய கிழக்கு நாடுகளில் குழப்ப நிலைகள் அதிகரிக்கும்.

மேடம்: உங்கள் வேகம் அதிகரிக்கும். நிதானமாகச் செயற்படவும். திறமை, புத்திக் கூர்மை இருந்தாலும் உங்களைப் புகழ்ந்து சிலர் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவார்கள். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்களின் உதவிகள் இருக்கும். திடீர் மந்த நிலைக்குச் சிலர் தள்ளப் படலாம். கை கால் உளைவு, கண்நோ, வயிறு, குடல் வியாதிகள் வருத்தின் வைத்தியம் செய்து கொள்ளுங்கள் ஆறிச் செய்யலாமென பின்போடாது உடல் நிலையில் கூடிய கரிசனை எடுத்துக் கொள்ளுங்கள். புதியன புகுதலும் பழையன கழிதலும் உங்களைப் பொறுத்தளவில் நன்மையாகும். ''காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்ளுங்கள்'' என நான் சொல்லியா உங்களுக்குத் தெரிய வேண்டும்?

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

இடபம்: மேலே ஏறி ஏறிச் சென்றாலும் கூடி வரும் பொழுது குதித்து விழும் மழை போன்ற நிலை ஏற்படலாம். எதிர்ப்பாலாருடன் மிக அவதானமாக, அளவாக நடந்து கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் தேவையற்ற வியாக்கியானங்களும், கருத்து மாற்றங்களும் தேடி ஓடிவரும். காலில் காயம், கையில் தளும்பு என இருக்கின்றது. வீட்டாருக்காக வேண்டாதவரையும் வேண்டி அலைந்துவர இடம் உண்டு. மனப்பயம் மாறி மாறி ஏற்படும் காலமிது. வயிற்று நோ, சாப்பாட்டில் கவனமாக இருக்கவும். வீடு மனை மாற்றம் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்; திங்கள்

மிதுனம்: எந்த விஷயத்திலும் ஒரு மந்தநிலை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி போராட்டங்கள் ஏற்பட்டபடி இருக்கும். அடிக்கடி பரபரப்புக்கள் ஏற்பட்டபடி இருக்கும். சுய காரியகாரராகிய நீங்கள் சாதுரியமாக உங்கள் காரியங்களைச் செயற்படுத்துவதில் கெட்டிக்காரர்கள். எதிர்ப்பாலாரை அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். தாயாருக்கோ, தாய்வழியினருக்கோ நல்லதல்ல. தந்தை வழியினருடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்து பிரச்சினைப்பட வேண்டாம். அயலவர்கள் உங்களைக் க்வனித்தபடி இருப்பார்கள். எனவே அவதானமாக நடந்து கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

கடகம்; ''வாய் இருந்தால் வங்காளம் போகலாம்'' என்ற வாக்குக்கு இணங்க உங்கள் செல்வாக்கால் பல காரியங்களைச் செயற்படுத்த முயலுவீர்கள். பொருட் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடம் உண்டு. வீட்டிற்காக ஓடி ஓடி எதைச் செய்தாலும் வீட்டார் திருப்தி சொல்வார்கள் என்று எண்ண முடியாது. கால் உளைவு, நெஞ்சு படபடப்பு சிலருக்கு அடிக்கடி இருக்கும். வைத்தியங்களைச் செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு

சிங்கம்: அட்டமத்துச் சனி, தொட்டதெல்லாம் குறையாம். அவசரப்படாது நிதானமாக மெல்ல, மெல்ல முன்னேறுங்கள். வாழ்க்கையென்ற நெடுந்தூரத்தை அவசரப்பட்டுக் கடக்க முற்பட்டால் அவதியில்தான் முடியும். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடம் உண்டு. ஆலயத்திற்குச் சென்று வாருங்கள். கண், வயிறு, கைகால் உளைவு, உஷ்ண வியாதிகள் ஏற்பட்டு வேதனை தரும். புத்திரர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். அடிக்கடி கோபப் படாமலும், திட்டங்களை மாற்றாமலும் இருக்கப் பாருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

கன்னி: உடற்களைப்பு, மனதில் பயம், அடிக்கடி படபடப்பு ஏன் இந்தநிலை? வீட்டில் செல்வாக்கு இல்லாவிட்டாலும், நாட்டில் உங்கள் சொல்வாக்கிற்கு நல்ல மதிப்பிருக்கும். இக்காலத்தில் படிப்படியாகக் காரியங்கள் நடக்கும். வயிறு, நரம்பு, கண், சலம் ஏதாவது ஒரு வியாதி வருத்த இடம் உண்டு. அயலவர்களுடன் அன்பாக இருங்கள். ஆபத்துக்கு அவர்கள்தானே முதலில் ஓடிவர வேண்டும்? வீடு, மனை, பொருள் வாகனச் சிறப்புக்கள் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

# சோதிட சஞ்சீவி

## மகாதேவா ஜோதிடம்


நல்லூர்

துலாம்: எல்லோருக்கும் எப்பொழுதும் உதவி செய்து வாழவேண்டுமெனச் சிந்திக்கும் சிறந்த பண்பு கொண்டவர்கள் நீங்கள். ஆனால் நீங்கள் பிறரை நேசிப்பது போன்று பிறர் உங்களை நேசிக்கின்றார்களா? தொழில் ஸ்தானத்தில் மனதிற்கு வேதனை தரும் செயற்பாடுகளைச் செய்வார்கள். காலவெள்ளத்தில் பகல், இரவு [illegible]

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 38



சொற்சிலம்பம் இல. 38
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 27 — 02 — 1998

### இடமிருந்து வலம்

1. விஷ்ணு. 4. இதைப் பிடிக்கவே பலரும் போட்டி. 7. இதில் விளக்கு ஏற்றலாம். 8. கூட. 9. ஆண் நரயை இப்படியும் அழைப்பர். 10. கொடிமரம். 13. கிரகம். 14. எமது கடைசிப் பயணம் இதில். 15. ஆராதனை. 16. சுவை உணர்ச்சி 17. ஒரு காட்டு விலங்கு. 18. செவி. 19. மரத்தின் முளைக்கும் பகுதியில் வருவது.

### மேலிருந்து கீழ்

1. இறந்தோருக்கு மாசம் தோறும் செய்யும் கடன். 2. அடுக்கு. 3. உருவம். 4. ஒரு பிரபந்தம் 5. இணங்க. 6. பிம்பம். 10. திருடன். 11. போட்டிக்குப் பிடிப்பது. 12. ஆளுமை. 14, மாட்சிமை. 17. பெண்.

### சொற்சிலம்பம் 36 — முடிவுகள்

**இடமிருந்து வலம்**

1. அபலை. 3, ஆகமம். 6. சுகி. 8. வரி. 9. வர்மக்கலை. 13. சகானா 14. பரு. 15. வெகுளி. 16. கல்வி. 17. பண். 18. சல்லி. 19. சுபாவம். 22. பரிகசி.

**மேலிருந்து கீழ்**

1. அசுவம். 2. பகிர் 4. கவலை. 5. மரி. 7. தக்காளி. 10 மசகு. 11. கனா. 12. கருவி. 14. பல்லி 15. வெண்பா. 16. கல்லூரி. 17. பசுமை. 20. வலை. 21. மாசி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: க. கலையரசி,
203/1, ஆசீர்வாதம் லேன்,
யாழ்ப்பாணம்.

★ இரண்டாம் பரிசு: திருமதி எல். இரத்தினம்,
65, வைமன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு: செ. செல்வறஞ்சினி,
880/2, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150. 00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100. 00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50. 00

★ புதிர்ப்போட்டி இலக்கம் 37 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாத்திரப் படைப்பில் இளங்கோவின் சாதனை

பாத்திரப் படைப்பில் இளங்கோ அடிகள் பெருஞ் சாதனை புரிந்திருக்கிறார். பிரதான பாத்திரங்கள் முதல் சிறுபாத்திரங்கள் வரை அனைத்தையுமே செப்ப முறப் படைத்திருக்கிறார். கண்ணகி பாத்திரத்தைச் சிறப்புறப் படைத்தது போலவே கோவலன் பாத்திரத்தையும் சிறப்புறப் படைத்திருக்கிறார்.

கோவலனின் கருணையுள்ளத்தை இளங்கோ அடிகள் காட்டமுற்பட்டுப் பெரு வெற்றி கண்டுள்ளார்.

''காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்'' என்கிறார் ஔவையார். இது இன்பத்துக்கு ஔவையார் கூறிய வரைவிலக்கணமாகவும் வாழ்க்கை நியதியாகவும் உள்ளது. இந்த நியதியில் இருந்து விலகி ஒருவருக்கு ஒருவர் துரோகம் செய்யும் போது வாழ்க்கை துன்பமயமாகிறது.



கண்ணகி

கருணை உள்ளத்தில் கோவலன் குறைந்தவன் அல்லன். மணிமேகலை பிறந்த போது மணிமேகலைக்குப் பெயர் இட்ட கோவலன், பெயரிட்டது குறித்துத் தானம் செய்கிறான். தானம் பெற வந்தவருள் ஓர் அந்தணனை மதம் கொண்ட யானை ஒன்று துதிக்கையால் தூக்கியது.

இதனைக் கண்ட கோவலன் தன்னுயிரையும் பொருட்படுத்தாது மத யானையின் துதிக்கையை நோக்கி விரைந்து அந்தணனை மீட்டான். இதனால் இளங்கோ அடிகள் கோவலனைக் ''கருணை மறவ'' என்கிறார். இத்தகைய கருணை மறவன் கண்ணகியைத் திருமணம் செய்ததும் —

''மாசறு பொன்னே!
வலம்புரிமுத்தே!
காசறுவிரையே!
கரும்பே தேனே!
அரும்பெறற்பாவாய்!
ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன்
பெருமடமகளே!''

என்று பாராட்டினான். அப்போது கோவலன் மனத்தில் எந்தச் சபலமும் இல்லை. காதலிருவர் கருத்தொருமித்தவர்களாகவே இருந்தனர்.

## மாதவி சந்திப்பு

மாதவியின் அரகேற்றம் கண்ட அரசன் ஆடற்கலையைப் பாராட்டி பச்சை மாலையும், தலைக்கோற் பட்டமும் ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னும் மாதவிக்குப் பரிசளித்தான். அம் மாலையை வாங்குவோன். மாதவிக்கு மணாளன் ஆவான் என்பதை அறிந்த கோவலன் ஆயிரத்தெண் கழஞ்சு பொன் கொடுத்து மாலையை வாங்கி மாதவியை அடைகிறான்.

கண்ணகி கண்ணீர் சிந்தவும் கண்ணகி — கோவலன் இருவரின் பெற்றோர் கலக்கமடையவும் கூடிய ஒரு கருமத்தை சற்றும் ஆராயாது கணப் பொழுதில் செய்து விட்டான் கோவலன். இதைத்தான் 'சபலம்' என்று குறிப்பிடுகின்றார்கள். கண்ணகிக்குத் துரோகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கனவிலும் கொள்ளாத கருணை உள்ளம் கொண்ட கோவலன் கணப்பொழுதில் சபலத்துக்கு ஆளானான்.

இந்தச் சபலத்தில் இருந்து கோவலன் மெல்ல மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டான்.

கானல் வரிப்பாடலால் கருத்து வேற்றுமை கொண்டு திடீரென எழுந்து கண்ணகியிடம் சென்ற கோவலன் கண்ணகியின் வாடிய மேனியைக் காணுகிறான். கண்ணகிக்குத் தான் செய்த பெரிய துன்பத்தை நினைக்கிறான். கண்ணகியைப் பார்த்து —

''வஞ்சகம் பொருந்திய பொய்யுடையாளுடன் வாழ்ந்து பரம்பரையாக வந்த பெரும் பொருளைத் தொலைத்து விட்டேன். இது எனக்கு வெட்கத்தைத் தருகிறது'' என்றான்.

''சலம்புணர்கொள்கைச்
சலதியொடாடிக்
குலம் தருவான் பொருட்
குன்றத் தொலைத்த
இலம்பாடு நாணுத்தரும்''

என்றான்.

இது கேட்ட கண்ணகி தனது வாடிய முகத்திற் புன்னகையை வருவித்து ''சிலம்பு ஒரு சோடி இருக்கிறது கொள்ளுங்கள்'' என்றாள்.

அந்த நேரத்தில் கோவலனுடைய மனம் தனது பரம்பரைச் செல்வம் முழுவதும் தொலைவதற்குக் காரணமாக இருந்த மாதவியையும் அந்த நிலையிலும் புன்முறுவலோடு மாதவிக்குக் கொடுக்க சிலம்பு இருக்கிறது என்று கூறும் கண்ணகியையும் ஒப்பிட்டுப் பார்த்தது. அந்தோ! கண்ணகிக்கு எவ்வளவு பெருந்துன்பத்தைப் புரிந்து விட்டேன் என்று அவன் மனம் ஓலமிட்டது.

## இரண்டு கேள்விகள்

''இந்தச் சிலம்பை மதுரைக்குக் கொண்டு சென்று விற்று அதனை முதலாகக் கொண்டு எனது வணிகத் திறமையால் இது வரைத் தொலைத்த பொருளை எல்லாம் திரும்ப ஈட்ட விரும்புகிறேன். நீயும் என்னோடு இப்பொழுதே புறப்படு''— என்றான். கண்ணகியும் மறு வார்த்தையின்றி இரவோடு இரவாகக் கோவலனுடன் புறப்பட்டாள்.

இந்த இடத்தில் இரண்டு கேள்விகள் எழுகின்றன.

முதலாவது கேள்வி — ஏன் இரவோடு இரவாகப் புறப்படவேண்டும்?

இரண்டாவது கேள்வி — ஏன் கண்ணகியையும் கூட்டிக் கொண்டு புறப்படவேண்டும்?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதிலைச் சொல்லாமற் சொல்லியதன் மூலம் இளங்கோ அடிகள் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை' படைத்த மாபெரும் கவிஞன் தான் என்பதையும் அதே நேரத்தில் நிகரற்ற உளவியல் ஆசிரியர் தான் என்பதையும் நிரூபித்துள்ளார்.

தனது உண்மையான நிலை எது என்பதை ஒருவன் உணர்ந்து விட்டால் அது ஒன்றே அவனது உயர்வுக்கு வழி வகுக்கும். தனது மனம் சபலமுள்ளது என்பதைக் கோவலன் நன்கு தெரிந்து கொண்டான். உயிரினும் மேலாக மதித்த கண்ணகியைக் கணப் பொழுதில் பிரிந்து மாதவியிடம் சென்றான் என்றால் அதற்குக் காரணம் அவனது சபல புத்தியே!

இப்போது அவனது மனச்சாட்சி அவனது சபல புத்தியோடு மோதி வெற்றிபெற்று அவனைக் கண்ணகியிடம் இழுத்துக்கொண்டு வந்து விட்டது. மனச் சாட்சியின் இந்த வெற்றி நிச்சயமானதா என்ற ஐயம் கோவலனுக்கு ஏற்பட்டு விட்டது.

பூம்புகாரில் இருந்தால் மாதவியின் நினைவு பழைய படி வலிமைபெற்றுக் கோவலனின் சபலபுத்தி வழியாக வந்து கோவலனைப் பழைய படி மாதவியிடம் இழுத்துச் சென்று விடவும் கூடும். இந்தச் சபலம் தனக்கு இருப்பதை அறிந்தே இரவோடு இரவாகப் புறப்பட்டான்.

கண்ணகியோடு மதுரைக்குப் புறப்பட்டதேன்?— இது இரண்டாவது கேள்வி.

கோவலனது பரம்பரையினர் வணிகத்துக்காக ஊர்விட்டு ஊர் செல்வதோ அல்லது கடல் கடந்து நாடு விட்டு நாடு செல்வதோ புதுமையானது அல்ல. கோவலன் பரம்பரையில் வணிகத்துக்காக ஊர் விட்டு ஊர் செல்கையில் மனைவியை அழைத்துச் சென்ற முதலாம் ஆள்கோவலனே. அந்த வகையில் கோவலன் குல மரபை மீறினான். அப்படியானால் ஏன் கண்ணகியைத் தன்னுடன் அழைத்துச் சென்றான்? அதற்கும் கோவலனின் சபல புத்தியே காரணம்.

மதுரை சென்று சேர்வதற்கு இடையிலேயே தனது சபல மனம் தன்னை மாதவியிடம் இழுத்துச் சென்று விட்டால் என்ன செய்வது என்று அஞ்சினான். தன்னைத் தன் மனச்சபலத்திடமிருந்து காப்பாற்றிக் கொள்ளக் கற்பின் செல்வியாகிய கண்ணகி கூட இருப்பதே பெரும் பலம் என்று அவன் நம்பினான். அதனாலேயே கண்ணகியை உடன் அழைத்துச் சென்றான்.

## கோவலனின் கருணை உள்ளம்

மனச்சபலம் காரணமாகக் கண்ணகியைத் தவிக்க விட்டு மாதவியே கதி என்று சில ஆண்டுகளைப் போக்கிய போதும் கோவலனின் கருணை உள்ளத்தைக் குறை கூற முடியாது.

மதுரை சென்ற கண்ணகியையும், கோவலனையும் மாதரி என்னும் இடையர் குலப்பெண் புதிய மனையொன்றில் இருத்த கண்ணகி சமையல் செய்து கோவலனை உண்பித்து வெற்றிலை பாக்கும் கொடுக்கிறாள். அப்போது கோவலனின் சபல உள்ளம் தோல்வியுறக் கருணை உள்ளம் வெற்றி அடைந்திருந்தது.

கண்ணகியைப் பெரும் துன்பத்தில் விட்டு மாதவியிடம் சென்ற போது கண்ணகியின் துன்பம் பற்றி யோசியாத கோவலன் இப்போது காட்டு வழியாக நடந்த கண்ணகியின் மெல்லிய அடிகள் பருக்கைக் கற்கள் நிறைந்த காட்டு வழியைக் கடப்பதற்கு சிறிதாவது வன்மை உடையனவோ என்று வருந்துகிறான்.


''கல்லதர் அத்தம்
கடக்கயாவதும்
வல்லுநகொல்லோ
மடந்தை மெல்லடி'' எனக் கவலைப்படுகிறான்.

தன் மனச்சபலத்தைத் தானே உணர்ந்து தன்னைத் திருத்திக் கொண்ட கோவலன் தவறியபோதும் பின்னர் தன்னை உயர்த்திக் கொண்டு விட்டான்.

''எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல் மற்றன்ன செய்யாமை நன்று''
— என்றார் வள்ளுவர்.

என் செய்தேன் என்று இரங்கும் தவறு ஒன்றைக் கோவலன் செய்தான். ஆனால் மற்றன்ன செய்யாத நிலைக்கு உயர்ந்தான்.

கண்ணகியை நோக்கி தன்னைப் பற்றிக் கோவலன் விமர்சிக்கும் போது—



கோவலன்

''நான் இப்படியெல்லாம் தவறு செய்தது மாயமோ? முன் செய்த தீவினையின் பயனோ? என் பெற்றோர் எப்படித் துன்பப்பட்டனரோ? சிறு பருவத்தில் பெரிய அறிவினையுடைய உனக்கு தீமை செய்தேன். பயனில சொல்வாரோடும் புதிய பரத்தமை உடையாரோடும் கூடி, இழிந்தோர் கூட்டத்தின் சிரிப்புக்கு உட்பட்டு பெரியோர்விரும்புகின்ற நல்லொழுக்கத்தினைக்கெடுத்தேன்'' — என்கிறான்.

''மாயங்கொல்லோ!
வல்வினை கொல்லோ!
யானுளங்கலங்கி!
யாவதும் அறியேன்!
வருமொழியாளரொடு
வம்பப்பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி
நெடுநகைபுக்குப்
பொச்சாப்புண்டு
பொருளுரையாளர்
நச்சுக் கொன்றேற்கு
நன்னெறி உண்டோ?

- புலவர் ம. பார்வதிநாதசிவம் -

★

# மீண்டும் சாள்ஸ்...

(IV ஆம் பக்கத் தொடர்)

டயானா அலை இன்னமும் ஒயவில்லை. அவரின் மரணம் உலகினைப் பாதித்து இருக்கிறது. லண்டன் வீதிகளில் மக்கள் திரண்டு கண்ணீர் சிந்திய கண்களுடன் ஏக்கர் கணக்கான நிலத்தில் அஞ்சலியாக மலர்க்கொத்துக்களை வைத்த காட்சிகள் மனங்களில் இருந்து இன்னும் மறையவில்லை. இந்த அனுதாப அலையை காலம் வெல்லுமா? இதை மீறி சாள்ஸ் தனது முத்திரையை பதிக்க முடியுமா? என்பதே இப்போதைய கேள்வி.

பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயருடன் நெருக்கமாக பழகும் சாள்ஸ் அங்குள்ள இளைஞர் வேலையின்மை பற்றிய பிரச்சினைகளில் அக்கறையாக இருக்கிறார். விவசாயத்துறை, சுற்றுச்சூழலை பேணுதல், கட்டடக்கலை போன்றவற்றில் அதிகம் ஆர்வம் காட்டும் சாள்சின் முயற்சிகள் வரவேற்பைப் பெற்று வருகின்றன. கல்வி மற்றும் மருத்துவத் துறைகளிலும் சாள்சின் பங்களிப்பு தாராளமாகவே உண்டு.

பிரிட்டனில் மட்டுமன்றி ஐரோப்பிய ஒன்றியம் முழுவதும் சாள்சின் சேவையும் செல்வாக்கும் வளர்ந்தே வருகிறது. எலிஸெபெத் மகாராணியின் 80ஆவது பிறந்த நாளோடு—2003 அளவில்— சாள்ஸிற்கு முடிசூடும் அரண்மனையின் எண்ணம் நிச்சயம் வரவேற்பைப் பெறும். அதற்கிடையில் உலக மக்களின் மனங்களில் இழந்த செல்வாக்கை நிச்சயம் மீண்டும் கட்டி எழுப்ப சாள்ஸினால் முடியும். பத்திரிகைகளும் அவர் பக்கம் சாயத் தொடங்கி விட்டன.

இன்று சாள்ஸ் ஒரு சிறந்த தந்தை. தன்பிள்ளைகளுக்கு உற்ற வழிகாட்டி. உலகினுக்கோர் சிறந்த சமூக சேவகன். அது மட்டுமா? பத்திரிகை[illegible] அவர் நல்ல பிள்ளைதான். ★

## தலையே நீ நரையாய்!

தலையே நீ நரையாய் — ''சென்றி''
தடையின்றி விரைவினில் தாண்டுதற்கே!

கண்காள் குழி விழுமின் — ''ஆமி''
கண்டதும் ''லொக்காயன்ன'' எனவே

முதுகே கூன் விழுவாய் — ''பொயின்ரில்''
இறங்காமல் சீற்றில் இருப்பதற்கே!

தோலே நீ சுருங்காய் — ''ஐசி''
தொலைந்தாலும் பொலிசார்கள் மன்னிக்கவே

இளமையே நீ அகல்வாய் மனம்
கலங்காமல் நடமாடித் திரிவதற்கே!
(தலையே நீ நரையாய்)

புத்தூர்: வே. இளையகுட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வரா இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)
உலகமும், மனிதர்களும் இருக்கின்றார்கள். நெஞ்சில் சளி, வயிற்றில் புகைச்சல், கைகால் உளைவு, சர்வ சாதாரணம். தெய்வபக்தி யுள்ளவர்களை சந்தித்து ஆறுதல் பெறுவீர்கள்.

★ அதிர்ஷ்டநாள்; திங்கள்.

**விருச்சிகம்:** திட்டமிட்டுச் செயற்படமுடியாது. உங்களைச் சிலர் சந்தேகக்கண் கொண்டு நோக்கும் காலமாகும். எதிலும் ஒரு மந்த நிலை. இடமாற்றம், காணி, பூமி சம்பந்தமான விஷயங்களில் கொஞ்சம் அவதானமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்திலும் உங்களுக்கு நல்லதைச் செய்வது போல சிலர் கதைப்பார்கள். ஆனால் ஒன்றும் செய்ய மாட்டார்கள். மனக்கலக்கப்படாமல் எதிர்ப்பாளருடன் அன்பாக இருங்கள். எலும்பு, நரம்பு, தலை சம்பந்தப்பட்ட இடங்களில் அவதானமாக இருக்கவும். பொருள்கள் களவு போகலாம். அவதானமாக இருக்கவும். நல்லவர்கள், பெரியவர்களின் அன்பும் தெய்வபக்தி, சக்தி, யுத்தியும் உங்களைப் பாதுகாக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**தனுசு:** நீங்கள் நாலு பேருக்கு நன்மை செய்வதாகத்தான் அடிக்கடி நினைக்கின்றீர்கள். உங்கள் இரகசியங்களை உங்கள் வாயாலேயே பிறர் அறிந்து உங்களைப் பலவீனமாக்குகிறார்கள் என்பதை ஏன் ஒப்புக் கொள்ளுகின்றீர்கள் இல்லை? அயலவர்களின் கண்கள் உங்களை நோக்கியபடி இக்காலத்தில் இருக்கும். இனஜனங்கள், சகோதரங்கள் கலக்கமுறுவர். பொருளில் அவதானமாக இருக்கவும். வீடு, வாகனம், தொழில் ஸ்தானங்கள் சம்பந்தமான மாற்றங்கள் பொறுப்புக்கள் அதிகரிக்கும். எதிர்ப்பாலாரின் உதவிகளால் நன்மைகள் அதிகரிக்கும். உஷ்ண, வாய்வு, வியாதிகள் வரும். உடலில் கவனமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்; புதன்

**மகரம்:** 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்பது பொருத்தமாகும். மனதில் களவு இருந்தால் பொருளில் இழப்பு வரும். ''மடியில் பாரம் இருந்தால் வழியில் பயம்'' வரும். கொஞ்சம் நிதானமாக இருங்கள். செய்யாத குற்றத்திற்கு யாரும் தண்டனை அடைவதில்லை. தொழில், பொருள் நிதானம் தேவை. பொருளால் உறவு பகையாகலாம். தொழில் ஸ்தானத்தில் புதிய மாற்றங்கள் ஏற்படும். களைப்பு, அடிக்கடி கோபம், நடுக்கம், மறதி, நரம்பு, கண்நோ என்பன போன்ற வியாதிகள் இருக்கும். பண நெருக்கடி உங்களுக்கு மாத்திரமா? நாட்டிற்கு நாடு, வீட்டுக்கு வீடு இருக்கின்றதே! கொஞ்சம் தவணை கேட்டு சமாளியுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

**கும்பம்:** எந்த விஷயத்திலும் துணிவு வேண்டும். எதிர் நீச்சல் அடித்துப் பழகிக் கொள்ளுங்கள். இன்பதுன்பம், கஷ்டநஷ்டம், வரவு செலவு மாறி மாறி வரத்தான் செய்யும். வாழ்க்கை என்பது இதுதானே. தெய்வ பக்தி கொண்டு உறுதியுடன் செயற்படுங்கள். எவரும் உங்களை எதுவும் செய்து விடமுடியாது. பெரியவர்களின் உதவிகள் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். தொழில் ஸ்தானத்தில் மறதி அதிகம். சளி, நரம்பு, பயம் இருக்கும். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும். பிரயாணம், இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: ஞாயிறு,

**மீனம்:** விதி சதிசெய்யும். தலை, கைகாலில் காயங்கள் ஏற்படலாம். தொழில் ஸ்தானத்தில் எதிர்பாராத திசைதிருப்பங்கள் ஏற்படலாம். அடிக்கடி ஆத்திரப்பட்டு இழப்புக்களைத் தேடிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வாகன சுகம் சிலருக்கு கிடைக்கலாம். இரகசியங்களைச் சொல்லாமல் செயற்படுத்துங்கள். அதனால் அதிக நன்மை அடைவீர்கள். அதிக பிரயாசை—அலைச்சல், சலிப்பு, மறதி, கைகால் உளைவு, சளித் தொல்லை என்பன மாறி மாறி இருக்கும். குலதெய்வ வழிபாடு மிக முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

# கீதோபதேசத்துக்கு பார்த்தனனை பரந்தாமன் தேர்ந்தெடுத்தது ஏன்?

மகாபாரதத்திலே மூத்தவர்களான தருமரும், பீமனும் இருக்க கீதோபதேசம் செய்வதற்கு அர்ஜுனனை கிருஷ்ண பகவான் தேர்ந்தெடுத்தது ஏன்? தார்மீக வாழ்க்கையை மேற்கொண்ட தர்மர், அர்ஜுனனை விட மேலானவர் அல்லவா? அவருக்கு பகவத் கீதையை பரந்தாமன் உபதேசிக்காததேன்?

தர்மத்துக்குத் தலைவராக இருந்தவர் தர்மராஜா. யுத்த களத்தில் பின்வாங்காதவர் என்பதால் யுதிஷ்டிரர் என்ற பெயரும் அவருக்கு உள்ளது. அவர் என்றும் தம் விரோதிக்குப் பயந்து புறமுதுகிட்டதில்லை. ஆனால் மோதுவதற்கு முன்னர் சிந்திக்காத பலவீனம் அவருடையது.

## சாயி பாபா கூறும் விளக்கம்

துரியோதனன் சதுரங்கச் சூதாட்டம் விளையாட அழைத்த போதே சிந்திக்காமல் உடனே ஒப்புக் கொண்டார்; தன்னுடைய சொத்துக்கள், அரசாங்கம் மற்றும் தன்னை, தன்சகோதரர்களை, மனைவி திரௌபதியை பணயமாக வைத்து ஆடித் தோற்றுப் போனார். பின் தனது விவேகத்தைப் பயன்படுத்தாமல் போனதை நினைத்து வருந்தினார். இருப்பினும் அவர் மனைவியும் சகோதரர்களும் காட்டுக்குச் செல்ல வேண்டி நேர்ந்தது. தவறு விட்ட பினனர் தனது தவறுக்காக வருந்தி என்ன பயன்? குருக்ஷேத்திரப் போரில் கூட இப்படித்தான் அவர் சண்டையிட ஒப்புக்கொண்டு, கௌரவர்களையும் மற்ற வீரர்களையும் கொன்று குவித்த பிறகு —வெற்றி கிடைத்த பின் — 'ஏன் சண்டையிட்டோம்?' என்று வருந்தினார். இது பலவீனத்தின் அடையாளம்.

பீமனும் ஆயிரம் யானையின் பலம் உடையவன். தனது புஜபலத்தில் அவனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. அதனால் அவனுக்கு எப்போதும் அவசரம்; அளவுக்கதிகமான தைரியம். இப்படிப்பட்ட—உடல் வலிமையை மட்டும் நம்பிக்கொண்டிருக்கின்றவர்களுக்கு யாராவது புத்திசொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

ஆனால் அர்ஜுனன் சற்று வித்தியாசமானவன். பதினான்கு வயதிலேயே அவனுக்கு கிருஷ்ணர் நண்பராகினார். பிறகு சுபத்திரா விவாகம் மூலம் கிருஷ்ணருடைய நெருங்கிய உறவினனும் ஆனான். அனைத்து விஷயங்களிலும் கிருஷ்ணருடைய ஆலோசனையைக் கேட்டு, தனக்குச் சரியில்லை என்று தோன்றுவது குறித்து விவாதிக்கவும் செய்வான். அப்படி ஆலோசனையைக் கேட்டு உறுதியானவுடன் செயலில் இறங்குவானே தவிர, செய்த காரியத்துக்காகப் பின்னர் வருந்த மாட்டான்.

இந்த அர்ஜுனன் யுத்தத்தில் தனக்கு எதிராக அணிவகுத்து நின்ற அவனது உறவினர்களையும் மூத்தவர்களையும் பார்த்துவிட்டு சண்டையிட மறுத்து விட்டான். ஒரு க்ஷத்திரியனுடையகடமையிலிருந்து—சண்டையிட்டுத் தர்மத்தைக் காப்பது என்ற விரதத்திலிருந்து — ஒதுங்குவது நியாயமில்லை என்று கண்ணன் எடுத்துரைத்த பிறகு யுத்தத்துக்குத் தயாரானான். அதன் பிறகுதான் ஸ்ரீகிருஷ்ணர் தன்னுடைய அருளை வழங்கவும் அதைப் பெற்றுக் கொள்ளவும் ஏற்றவன் அர்ஜுனனே என்று முடிவு செய்து, பகவக்கீதையை எடுத்துரைத்து, அருளி, தன்னுடைய உண்மையான விஸ்வரூபத்தைக் காட்டி அருளினார்.

சண்டை முடிந்த பிறகு, அர்ஜுனனுக்கு தனது கடமையைச் சரிவரச் செய்தோம் என்ற உணர்வு இருந்ததே தவிர, தான் தவறு செய்து விட்டோம் என்ற குற்ற உணர்வு இருக்கவே இல்லை.

இதனால்தான் பகவத்கீதையை உபதேசிக்க அர்ஜுனன் அதிகம் தகுதி உடையவனாகின்றான். அவனுடைய மூத்த சகோதரர்களான தர்மர், பீமன் முதலியவர்களைவிட இறைவனின் சொல்லில் மாறாத நம்பிக்கை வைத்த அர்ஜுனனுக்குத்தான் கீதோபதேசத்தைப் பெறும் பாக்கியம் கிடைத்தது.

★

# வாழ்க்கையின் இரண்டு விடயங்கள்

மனித வாழ்க்கையில் அனுபவிக்கும் தன்மைகளில் சிறப்பாக அமைவது எப்போதும் இரண்டு விடயங்களே அவை.

★ வருவதும், போவதும் — இன்பமும், துன்பமும்.
★ வந்தால் போகாதது — புகழும் பழியும்.
★ போனால் வராதது — மானமும் உயிரும்.
★ தானாக வருவது — இளமையும் முதுமையும்.
★ உடன் வருவது — புண்ணியமும் பாவமும்.
★ அடக்க முடியாதது — ஆசையும் துக்கமும்.
★ தவிர்க்க முடியாதது — பசியும் தாகமும்.
★ இழிவைத் தருவது — பெருமையும் கோபமும்.
★ அனைவருக்கும் சமம் — பிறப்பும் இறப்பும்.

# கரு...

(V ஆம் பக்கத் தொடர்)
கால நினைவுகளால் ஏற்பட்ட பயமா? இருக்கலாம்.

செல்வராசாவின் சைக்கிள் கடையை அடைந்தேன். சைக்கிளைக் கொடுத்து 'கிறிஸ்' வைத்துமுடிய நான்கு மணியாகி விட்டது.

திரும்பிவரும் வழிநெடுக அதே 'கரு' பற்றிய சிந்தனை.

பிரதான சந்தியிலே சனம் கூடியபடி நிற்பது தெரிந்தது. உரத்த குரலில் வாய்த்தர்க்கம் நிகழ்வதும் கேட்டது. என்னவாயிருக்கும் என எண்ணமிட்டவாறே நெருங்கினேன். சிலவேளை எனது கதைக்கான கரு இங்கு கிடைக்கக்கூடும். எட்டிப் பார்த்தேன். இரண்டு குழுவினர் ஒருவரை ஒருவர்தாறுமாறாகத் திட்டிக்கொண்டிருந்தார்கள். கைகலப்பில் ஈடுபடாத குறை.

பழைய விதானையார் பேரம்பலம் நிற்பது தென்பட்டது. முந்தைய தமிழரசுக் கட்சிக்காரன். எண்பத்தைந்து வயது.

''உவங்கள் ஏன் ஐயா அடிபடுகிறாங்கள்?'' வினவினேன்.

என்னை ஒருமுறை ஏற இறங்கப்பார்த்துவிட்டு நன்றாக இருமிக்கொண்டு பேரம்பலத்தார் சொன்னார்.

''இஞ்சைபார் பெடி. நாங்கள் அந்தக்காலத்திலை எத்தினை போராட்டங்கள் நடத்தியிருப்பம். எலெக்சனுக்கு எவ்வளவு வேலை செய்தம்; மற்றக் கட்கிக்காரங்களை மதிச்சுத்தான் எல்லாத்தையும் செய்தனாங்கள். அப்ப எங்களுக்கு ஒற்றுமை இருந்தது. ஒரு கட்சி எண்டபலம் இருந்தது. இப்ப இருக்கிறவை சனத்துக்கு அது இதெண்டு செய்யினம். பரவாயில்லை. ஆனா முதலிலை தங்களுக்க ஒற்றுமைப்பட வேணும். அப்பதான் தேர்தல் வெற்றி முழுமையாக இருக்கும். எண்டாலும்...... அடி உதவிறமாதிரி எதுவும் உதவமாட்டாதடா. எங்களுக்கு வேண்டியதை அதுக்கேற்ற முறையிலை முழுமையாகப் பெறுகிறதுதான் நிரந்தரமா இருக்கும்.''

ஒரு பிரசங்கமே வைத்து விட்டார் பேரம்பலத்தார்:

நானும் ஆமோதித்துக் கொண்டே சைக்கிளைத் திருப்பினேன். அவர்களின் சண்டை இன்னும் ஓய்ந்தபாடில்லை. ஒருவாறு வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். சாய்மனைக் கதிரையிலே சரிந்துகொண்டு யோசித்துக் கொண்டிருந்தேன்.

சிறுகதை எழுதுவதற்கான ஊக்கம் உள்ளத்திலே கிளர்ந்தது. சடாரென எழுந்து எனது அறைக்குச் சென்று தாள்களை எடுத்தேன். பிள்ளையார் சுழியிட்டேன்.

'கரு'' என்று தலைப்பிட்டு எழுதத் தொடங்கினேன்.

(யாவும் கற்பனை)

# சந்திரனில் மனிதன் போய் இறங்கி...

(III ஆம் பக்கத் தொடர்)
புரிகிறார் டாக்டர்ரையுகின். அவருக்கு ஓர் ஆராய்ச்சி உணர்வு தோன்றிற்று. சூரியனின் கதிர்களுக்கும், அவற்றின் திறனுக்கும், இருதயப் பாதிப்புக்கும் சம்பந்தம் இருப்பதாக அவருக்குத் தோன்றிற்று.

சூரியன் இயக்கம் அதிக வீரியத்துடன் இருக்கும் நாள்களில், மருத்துவ மனையிலுள்ள இருதய நோயாளிகளின் இருதய நிலையை 'எலெக்ட்ரோ கார்டியோகிராம்' மூலம் பதிவு செய்தார். அவருடைய இருதய நிலை (Myo—Cardialinfar-cts) அந்த நாள்களில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது!

★ ★ ★

நமது புராதன சாஸ்திரங்களில் மிகச் சிறந்த ஒன்று ஜோதிடக்கலை. அதன் மிகச் சிறந்த ஞானியான வாராஹ மிஹிரர். அவர் எழுதிவைத்த ஜோதிட நூல் இப்படிக் கூறுகிறது.

'சூரியனில் கரும்புள்ளிகள் [illegible] உள்ள [illegible] உணர்ச்சிகள் பாதிக்கப்படும். உலகத்தின் இயற்கை நிலை பெரும்பாதிப்புக்குள்ளாகும்.'

இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் கூறுவது என்ன?

அமெரிக்காவில் இது பற்றி ஆராய்ச்சிநடத்தும் R. C. A. Communications Department-இல் பணிபுரியும் ஜான் நெல்கோ இப்படிக் கூறுகிறார்.

''சூரியனில் புள்ளிகள் (Sun Spots) தோன்றும் நேரத்தில் பூமியில் நிலநடுக்கம் ஏற்படுகிறது; வெள்ளம் உண்டாகிறது. பல்வேறு நாடுகளிலும் அந்தச்சமயத்தில், வேலைநிறுத்தம், கிளர்ச்சிகள், கலவரங்கள் ஆகியவை ஏற்பட்டிருக்கின்றன.

★ ★ ★

நமது மதத்தின் அடிப்படையான பயிற்சி தியானம். அதை நாம் பிரார்த்தனைக்கு உபயோகப்படுத்துகிறோம். இறைவனை நினைத்து, நல்லவற்றை வேண்டி, தியானம் செய்யும் போது, மனம் தெளிவடைகிறது. உடலின் உள்ளே உணர்ச்சிகள் அமைதி காண்பதை உணருகிறோம்.

மேல்நாடுகளில் இன்று அதிகமாக மக்களைப் பாதித்திருப்பது மனோவியாதி. இவர்களைக் குணப்படுத்துவதற்குரிய மனநிலை மருத்துவ நிலையங்கள் இன்று அங்கெல்லாம் கணக்கின்றி இருக்கின்றன. மனோதத்துவ நிபுணராக, அறுபது ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்துள்ள பேராசிரியர் கார்ல் சி. ஜங். அவர் இப்படிக் கூறுகிறார்:

''என்னுடைய நீண்ட அனுபவத்தில், கடவுள் நம்பிக்கை கொண்ட, தியானப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஆணோ பெண்ணோ, ஒருவர்கூட என்னிடம் மனநோய் மருத்துவத்துக்காக வந்து நான் பார்க்கவில்லை! நீங்கள் எவ்வளவு விதமான, மன அமைதிக்குரிய மாத்திரைகளை(TranquillizerPills) உபயோகித்தாலும், தியானத்தில் காணக்கூடிய அபூர்வ அமைதியைப் பெறவே முடியாது!''

(நன்றி: ஞானபூமி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைகள் இறங்குவ....

(IV ஆம் பக்கத் தொடர்)
இது எவருக்குமே அமையக் கூடாது.

பரீட்சையில் என்ன எழுதினேனோ தெரியாது. முடிவுகள் நல்லாகவே வந்தன. 'தம்பி அவங்கள் ஏ. எல். முடித்தால் கம்பஸுக்குப் போகட்டும். உனக்கு வேலை எடுத்துத் தாறன்' எண்டு பிடிவாதம் பிடிச்சார் மாமா. தம்பியும் தன்ர மகளைக் கட்டுறதெண்டு ஒப்புதல் தந்தால் தான் அவனைப் படிப்பிக்கிறதெண்டும் அடம் புடிச்சார்.

பெரிய உதவியா எனக்கு ஒரு கம்பனியிலை வேலை எடுத்துத் தந்திட்டார் மாமா எனக்கு கொஞ்சம் ரைப்பிங் தெரிஞ்சதுதான் வேலைக்கு காரணம். அந்தக் கம்பனியும் எனக்கு கஞ்சி ஊத்தத் தொடங்கியது. வீட்டு நிலமையிலை கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

நான் வேலைக்குப் போயிட்டன். எனக்கு வந்த கம்பஸ் அப்பிளிக்கேஷன் படிவங்களை மாமா ஒளித்து விட்டதாக அம்மா அழுதபடி சொன்னா. நான் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படுவதாக இல்லை. என் கம்பனியும் வேலையும் — அங்கே உள்ள பல இடைஞ்சல்களுக்கு நடுவிலும் — எனக்குப் புடிச்சுப்போச்சு.

என்னடை வேலை என்ர குடும்பத்தை தாங்கப் போதாது தான். தம்பியவையைப் படிப்பிக்க வேணும். மாமா படிப்பிக்கிறதெண்டால் தாங்கள் படிக்கவே இல்லையாம். இனி ஒரு சதம் அவரை நம்பி இருக்கிறதில்லையாம். அவரை வீட்டில் எவரும் மதிப்பதாக இல்லை. அம்மா மட்டும் பாசத்தில் கொஞ்சம் பழகுவா. அதுவும் இன்னும் கடன் கணக்கு காட்டி அம்மாவை நம்ப வைத்திருக்கிறார்.

எங்களுக்கு செலவழிக்கிறது என மாமி வீட்டுக்கு வீடு புறணிபாடித் திரிகிறா. அப்புவின்ரை உழைப்பிலை ஒரு சதம் எங்களுக்கு சேர்ந்ததாக இல்லை. அம்மா நொந்துபோய் எதையும் கேட்கும் நிலமையிலை இல்லை.

நல்ல வேளையா அப்புவை உயிரோடை ஒருக்கால்போய் அம்மா எண்டாலும் பாத்திட்டு வந்தாவே எண்ட நிம்மதி எங்களுக்கு ஆயுள் பூராப் போதும் போலை இருந்தது. அதுவும் இல்லாவிட்டால் நாங்கள் என்ன மனுசரே!

நான் கந்தோரிலை கடன் பட்டுக் கடன்பட்டுக் காசு அனுப்பி தம்பியை படிப்பிச்சன். ஒரு நாளும் குறையாத நெருக்கடியான நிதி நிலமை தான். இதிலை எனக்குக் கனபேர் உதவி செய்தவை. நான் ஒரு பொம்பிளை. உதவி கேட்டதுக்காக உதவியும் செய்து உபத்திரவமும் குடுத்தவையும் நிறையப் பேர்தான்.

நான் ஒரு பெண் குடும்பத்தைச் சுமந்து வாழ்க்கையிலை எதிர்நீச்சல் போட்ட காலம் அது. இப்ப இருபத்தைஞ்சு வருஷம் ஆகுது. அப்பெல்லாம் அம்மாவின் மன உளைச்சலுக்குக் குறைவே இல்லை. வீட்டிலை நிம்மதி என்பதே கிடையாது. அப்புவின்ரை இழப்பு, மாமாவின்ரை சுரண்டல். எல்லாம் எங்களை வாட்டின நேரம்.

நாங்கள்கோயில்குளம்எண்டு போய் அறியம். மாமா, மாமி, பிள்ளைகள் சுவாமிக்குப் பட்டும் நகையும் சாத்தின மாதிரி உடுத்தி கோயில் கோயிலா இடம் இடமாப் போய் வருவினம். தம்பி தங்கச்சிக்கும் இந்த ஆசைகள் வராமலா விடும்?. எங்களுக்குத்தான் கோயில் குளம் எண்டு போக தகுதி இல்லையே; கூட்டிப்போக ஆள் இல்லையே. அப்பு இருக்கிற காலத்திலும் நேரம் இருக்க இல்லையே எண்டு அம்மா நெஞ்சு பொரும பிள்ளையளைப் பார்த்து அழுவா.

இந்தச் சுந்தரம் மாமா தான் இப்பஒஞ்சு தனிமரமா நிக்கிறார். மாமி போயிட்டா. பிள்ளையள் குடும்பம் குட்டி என்று கொழும்பிலும் வெளிநாட்டிலும். எனது வருத்தம் தான் சுபியை இவரிடம் மண்டியிட வைச்சிருக்கு.

— தொடரும் —

# பாலியல் சர்ச்சை...

(I ஆம் பக்கத் தொடர்)
பங்களில் — பல மணித்தியாலங்கள் — இயல்பாக லிண்டாவும், மொனிக்காவும் உரையாடிய விடயங்களே என்பது தெளிவாகின்றன. ஆனால் அவற்றை—தொலைபேசி உரையாடலை — சட்ட விரோதமாக ஏன் லிண்டா புதிவு செய்தாள் என்ற கேள்வி எழுகிறது.

பெரிய இடத்து விவகாரம். அவள் போனில் கதைக்கிறாள். சுவாரசியம் விடவில்லை. மட்டுமா? எனது பாதுகாப்பையும் கருதி தேவைப்படலாம் என நினைத்துப் பதிந்தேன் என்கிறாள் லிண்டா! சட்ட விரோதமாக தான் இவற்றை பதிந்தமை பற்றி சட்டத் தரணியிடம் ஆலோசனை கேட்கப்போக — விடயம் சந்திக்கு வந்து விட்டது.

தொலைபேசி உரையாடல்களை ஆதாரமாக எடுப்பதா விடுவதா என்ற சர்ச்சைகள் ஒருபுறம் இருந்தாலும் அங்கு பேசப்பட்ட விடயங்கள் மிக மிக சுவாரசியமானவை.

மொனிக்கா தனதும் கிளின்ரனதும் உறவு பற்றி அங்கே விளாசி இருந்தாள். வாய் பிளந்து ரசித்தவள் — கேட்டவள் லிண்டா.

தனக்கும், கிளின்ரனுக்கும் இயல்புவழி உறவு இருக்கவில்லை. வாய்வழி உறவே இருந்தது எனத் தெளிவாகச் சொல்லி இருக்கிறாள் மொனிக்கா. காரணம்?

வெள்ளை மாளிகையில் வசதிக் குறைவு?...... தெரியாது. மட்டுமா கிளின்ரனின் உடற்திரவ அடையாளங்களைக் கொண்ட தனது ஆடை அவரின் ஞாபகமாக பேணி வைத்திருக்கிறேன் என்கிறாள் அவள். தற்போது ஆடை ஆய்வுகூடப் பரிசோதனை செய்யப்படுகிறது. அதில் உள்ள உயிரணுக்களின் DNA அமைப்பு கிளின்ரனுடைய DNA அமைப்பை ஒத்ததா எனப் பரிசோதனைகள் தெளிவிக்கும்.

பென்ரகனுக்கு மாற்றப்பட்ட தன்னை 1996 தேர்தல் முடிந்ததும் மீண்டும் வெள்ளை மாளிகைக்குள் எடுப்பதாக கிளின்ரனே உறுதிகூறியதாக மொனிக்கா லிண்டாவிடம் தொலைபேசியில் தெரிவித்து இருக்கிறாள்.

கிளின்ரனுக்கு வம்புக் கதைகளை தன்னுடன் பகிர்வதில் ஆசை அதிகம் எனவும் அவள் லிண்டாவிடம் தெரிவித்து இருக்கிறாள்.

பென்ரகனில் இருந்து தான் வெள்ளை மாளிகைக்கு ஒன்பது அன்பளிப்பு பார்சல்களை அனுப்பியதாகவும் அவற்றை கிளின்ரனின் செயலர் ''பெற்றி கியூரி'' பெற்று கிளின்ரனிடம் கொடுத்ததாகவும் மொனிக்கா தெரிவிக்கிறாள்.

அவற்றில் ஒன்றில் பாலுணர்வுகளை தூண்டும் வகையான ஓடியோ ரேப் ஒன்றும் அடக்கம் என அவள் தெரிவிக்கிறாள்.

கிளின்ரன் தன்னோடு பேசும்போது தனது மண வாழ்வில் திருப்தி இல்லை எனத் தெரிவித்ததாகவும் — வெள்ளை மாளிகை வாழ்க்கை முடிந்ததும் தான் தனித்துப்போய் இருப்பது பற்றி ஆலோசிப்பதாகத் தெரிவித்ததாகவும் அவள் செய்தி 'அவுட்' ஆக்கி இருக்கிறாள்.

இவ்வளவு தூரம் இறங்கி வந்து இவளோடு பேசக் கிளின்ரனால் இயன்றதா என்ற கேள்வி — சிலரை, பத்திரிகைகளின் பக்கம் பாயவைக்கிறது.

விவகாரம் வளரவும், 1997 டிசம்பர் 28 இல் பெற்றி கியூரி மொனிக்காவை வெள்ளை மாளிகைக்குள் அனுமதித்து, கிளின்ரனோடு உரையாட விட்டிருக்கிறார்.

ஜனவரி 15 இல் மீண்டும் மொனிக்கா வெள்ளை மாளிகைக்கு வந்தும் கிளின்ரனைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

உறவை விடப் பாரதூரமான விடயம் என்னவென்றால் —

கிளின்ரனும் அவரது ஆலோசகர் ஜோடானும் கூட தன்னிடம் எச்சந்தர்ப்பத்திலும் கிளின்ரனோடு உறவே இல்லை என்பதை தெளிவாகக் கூறும்படி ஆலோசனை கூறி இருக்கிறார்கள் என அவள் தொலைபேசியில் சொல்லி இருக்கிறாள்.

விவகாரங்கள் இப்படி விரியும்வேளை தாராளமாக கிசுகிசுக்கள் வெள்ளை மாளிகையில் உலாவரத் தொடங்கின. கிளின்ரனுக்கு எதிரான மற்றொரு பெண்ணான பௌலா ஜோன்ஸின் வழக்கில் டிசம்பரில் மொனிக்காவுக்கும் லிண்டாவுக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்ட வேளை இவர்கள் சட்டத் தரணிகளை நாடினார்கள்.

மொனிக்கா கிளின்ரனோடு தனது விவகாரத்தை ஒளிக்க முயன்றவேளை — விண்டா தன்னால் பொய் சொல்ல முடியாது என மறுத்து விட்டாள். பொய் சொல்லி ஒப்பந்தத்தை மீறிய தண்டனை பெற அவள் தயாரில்லை.

விளைவு விவகாரம் சிக்கலாக நீளுகிறது. இன்னும் பல சிகசிகக்கள்... எல்லாரும் உரிமை கோரி ஆதாரங்களுடன் புறப்பட்டால்...

இன்பத்திலும்... துன்பத்திலும்... இணைந்திருப்போம் என கிளின்ரன் — ஹிலரி தம்பதிகள் வெளியே காட்டிக் கொள்வது பெருமையான விடயம். உள்ளே புழுங்காமலா விடும்?

கிளின்ரன் பொய் சொல்லச், சொல்லி வற்புறுத்தியது — சத்தியப் பிரமாணத்துக்கு எதிரான சட்டப் பிரச்சினை.

உறவு வைத்தது — கட்சிக்குரிய ஒழுக்காற்று நடவடிக்கைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலமை.

அரசியல் சரிவை வாக்காளர்கள் — அமெரிக்க மக்கள் தீர்மானிக்கலாம்.

இப்படிப் பல கோண அச்சுறுத்தல்கள் விடுக்கப்படும் வேளை கவனத்தை திசை திருப்பவா ஈராக் மீதான தாக்குதல் எனப் பலரும் கேட்கிறார்கள்.

தாம் எப்படி வாழ்ந்தாலும் — பாலியல் விவகார கலாசாரம் கொண்ட தலைவர்கள் தலைதூக்குவதை — அமெரிக்க, ஐரோப்பிய மக்கள் பொதுவாக விரும்புவதில்லை.

பத்திரிகைகள் பலவும் பல்வேறு கருத்துக் கணிப்புகளை நடத்தி இருக்கின்றன.

தற்போதைக்கு தெளிவான தீர்ப்புக்கள் கிடைக்காதவரை — விசாரணைகள் முற்றுப் பெறாதவரை — கருத்துக் கணிப்புக்கள் சரியான முடிவுகளைத் தரமாட்டா.

'நீயூஸ் வீக்' பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பின் படி 48 வீதமானோர் கிளின்ரன் மறுப்பதை நம்பவில்லை. 32 வீதமானோர் மட்டுமே அவர் தப்புச் செய்திருக்க மாட்டார் எனவே கருதுகிறார்கள். இது [illegible] வின் ஆரம்பமா? ★

# அனுமதியின்றி சுவரொட்டி ஒட்டியதாக 370 வழக்குகள்

அரசு மற்றும் தனியார் கட்டடங்களில் அனுமதியின்றி சுவரொட்டிகள் ஒட்டியது, சின்னங்கள் வரைந்தது ஆகிய குற்றங்களுக்காக தமிழகத்தில் 370 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக கன்னியாகுமரியில் 63 வழக்குகளும் குறைந்தபட்சமாக புதுக்கோட்டையில் ஒரு வழக்கும் தொடரப்பட்டுள்ளன.

அதிமுக—91, பாஜக—68, திமுக—65, மதிமுக—27, தமாகா—25, இ. காங்கிரஸ்—21, இ. கம்யூனிஸ்ட்—17, பாமக—12, பகுஜன்சமாஜ்—5, மார்க்சிஸ்ட்—2, புதிய தமிழகம்—2.

இத்தகைய வழக்குகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி வருவதால் தீவிர நடவடிக்கைகள்எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தான் முன்னெடுத்த...

(II ஆம் பக்கத் தொடர்)
ஈ.பி.டி.பி. ஆகியவை குறித்து கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டி யாழ் அரசியல் வட்டாரங்களில் முக்கியமானதாகப் பேசப்படுகின்றது.

''தமிழ்க் கட்சிகளின் ஆயுதக் கலாசாரத்தால் நான் குழப்பமடைந்துள்ளேன். முக்கியமாக ஈ.பி.டி.பியும், புளொட்டும் சொந்தமாக தனிப்பட்ட இராணுவத்தை வைத்திருக்கின்றன. இது தவறானது.

''தேர்தல் காலத்தில் இவர்களின் அச்சுறுத்தலாலேயே தேர்தல் காலத்தில் எங்கள் வேட்பாளர்கள் பலர் விலகினார்கள்.

''கூட்டணியினரான நாங்கள் எங்களுக்கு என்று ஓர் இராணுவத்தை வைத்திருக்கவில்லை. அந்த எண்ணமும் எமக்கு இல்லை''— என்று திருமதி யோகேஸ்வரன் அப்பேட்டியில் கூறியிருக்கின்றார்.

இப்படி ஆரம்பத்திலேயே இரு கட்சிகளுடனும் சுரண்டுப்பட்டுக் கொண்டு சபை நடவடிக்கைகளுக்கு அக்கட்சிகளின் அல்லது அக்கட்சிகளில் ஒன்றின் ஆதரவை அவர் எப்படிப் பெற்றுக் கொள்ளப் போகின்றார் என யாழ். அரசியல் வட்டாரங்கள் கேள்வி எழுப்புகின்றன.

ஆனால் இந்த விடயத்தில் தமக்கு முழு ஒத்துழைப்புக் கிடைக்கும் என திருமதி யோகேஸ்வரன் நம்புகின்றார்.


''யாழ். நகரை மீளக் கட்டியெழுப்புவதற்கு சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஒன்றாகச் சேர்ந்து—கட்சி வேறுபாடின்றி ஒத்துழைப்பார்கள் என நான் நம்புகின்றேன். ஆனால் அவர்கள் எம்மைக் கவிழ்க்க விரும்பினால்மாநகரசபைக்கு மீண்டும் தேர்தல் நடத்தும்படி நாம் வலியுறுத்துவோம். வாக்காளர் இடாப்புக்களை நேர்சீராக்கிக் கொண்டு—வசதியான பிரசாரத்துடன்—நாம் தேர்தலைச் சந்திக்கலாம் அல்லவா?''—என்று திட்டமான கருத்துடன் கூறுகின்றார் திருமதி யோகேஸ்வரன்.

# விடைகள்

VII ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

**இயலுமா?**

புள்ளியிடப்படக் கூடிய சதுரங்கள் வருமாறு:-



**முயன்று பாருங்கள்**

I. 1. மரம். 2. மகரம். 3. ரகம். 4. ரதம். 5 கரம். 6. தகரம். 7. மதம். 8. தரம். 9. மகம். 10. கமம்.

II. 1. பரி 2. பதி. 3. பகை. 4. திரிகை. 5. கை. 6. பத்தி.

III. 1. கச்சேரி. 2. வரி. 3. கரி. 4. கவரி. 5. சேரி. 6. சா. 7. சாரி. 8. சேகரி.

**வார்த்தை விளையாட்டு**

துணி, துணிவு, கனி, கதி, திணி, திதி, திணிவு, தின், திகதி, திவான், வாணி, வாது, வாதி, வான், வாணிகன், காவு, காது, காணி, காமன், மணி, மகான், மதி, மது, மகவு, மகன்.

**கண்டுபிடியுங்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | லே | சி | யா | டா | து | யா | ரு |
| கு | ஸ் | ரி | ன | ந் | ஷ் | பெ | னா |
| வை | சி | க | லா | ர | பி | சீ | ஸ் |
| த் | கி | ஸி | பா | ஈ | ரா | க் | ல் |
| ஈ | யூ | ர் | ரா | கி | ன் | ரே | ஜே |
| நி | பா | ன் | மா | ஓ | ஸ் | யா | ர் |
| லி | யா | தி | ந் | இ | பி | தா | ம |
| சி | இ | த் | தா | லி | சூ | டா | ன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் குண்டு வெடிப்புக்களுடன் ஆரம்பமான இந்திய மக்களவை தேர்தல்

## சோனியாவின் பிரசாரத்தினால் காங்கிரஸுக்கு ஆதரவு அதிகரிப்பு

இந்திய மக்களவைக்கான (நாடாளுமன்றம்) முதலாவது கட்ட வாக்களிப்பு கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.

கோயம்புத்தூரில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களுடன் வாக்களிப்பு ஆரம்பமானது வரப்போகும் நாள்களில் ஏற்படக் கூடிய அரசியல் நெருக்கடிக்கான அறிகுறியாக அவதானிகள் கருதுகின்றனர்.


முதலாவது கட்ட வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு இரு தினங்களுக்கு முன் கோயம்புத்தூரில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்கள் தமிழ்நாட்டை மட்டும் அல்ல முழு இந்தியாவையுமே ஒரு கலக்குக் கலக்கிவிட்டன.

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான எல்.கே. அத்வானி இக் குண்டு வெடிப்புக்களில் இருந்து உயிர் தப்பி உள்ளார்.

கோயம்புத்தூரில் அன்று வெடித்த 16 குண்டுகளில் அத்வானி பேச இருந்த கூட்ட மேடைக்கு சுமார் 60 மீற்றர் தொலைவில் மூன்று குண்டுகள் வெடித்தன.

அத்வானி அன்று இரண்டு மணித்தியாலங்கள் பிந்தியே கூட்டத்துக்கு வந்திருந்தார். அதற்கு முன்னரே குண்டுகள் வெடித்து விட்டன.

கோயம்புத்தூர் குண்டு வெடிப்புக்கள், அத்வானிக்கு குறிவைக்கப் பட்டிருக்கலாம் என்று பாரதீய ஜனதாக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.



கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பு இடம் பெற்ற ஓர் இடத்தில் வாகனங்கள் சிதறிக் கிடக்கும் காட்சி.

தி.மு.க. அரசு போதிய பாதுகாப்பு அளிக்கத் தவறி விட்டதாக பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். கருணாநிதி பதவி விலக வேண்டும் என்று ஜெயலலிதா உட்பட தமிழ்நாட்டின் எதிரணிக்கட்சித் தலைவர்கள் பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஏற்கனவே ஜெயின் கமிஷன் அறிக்கையால் சிக்கலில் மாட்டுப்பட்டவர் கருணாநிதி. கோயம்புத்தூர் குண்டு வெடிப்புக்கள் அத்வானியின் உயிருக்கு உலை வைத்திருந்தால், கருணாநிதியை அது பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

### முதலாவது கட்ட வாக்களிப்பு

இந்தியாவின் 545 மக்களவைத் தொகுதிகளில் 222 தொகுதிகளுக்கான முதலாம் கட்ட வாக்களிப்பே கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இரண்டாவது கட்ட வாக்களிப்பு நாளை 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மூன்றாவது கட்ட வாக்களிப்பு எதிர்வரும் 28 ஆம் திகதியும் நடைபெறும்.

நாளை 186 தொகுதிகளுக்கான வாக்களிப்பும் 28 ஆம் திகதி 132 தொகுதிகளுக்கான வாக்களிப்பும் நடைபெற உள்ளன.

நான்காவது கட்ட வாக்களிப்பு மார்ச் மாதம் 4 ஆம் திகதி நடைபெறும். நான்கு தொகுதிகளுக்கு மட்டும் அப்பொழுது வாக்களிப்பு நடைபெறும்.

### 60 கோடி வாக்காளர்

இந்தியாவின் சனத்தொகை 95 கோடி. இதில் 60 கோடி மக்கள் தற்போதைய தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

திங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது கட்டத் தேர்தலில் எதிர்பார்த்த அளவு வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகள் பாரதீய ஜனதா, காங்கிரஸ், ஐக்கிய முன்னணி.

சோனியாவின் பிரசாரத்துக்கு மத்தியிலும் பாரதீய ஜனதாவே தனித்து கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றும் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. ஆனால் அறுதிப் பெரும்பான்மை பாரதீய ஜனதாவுக்கு கிடையாது போகலாம்.

### உலக உலா

என்.பி.சீலன்

தேர்தல் பிரசாரம் ஆரம்பமான சமயம் பாரதீய ஜனதாவுக்கு வெகு தூரத்தில் பின்னால் நின்ற காங்கிரஸ், சோனியாவின் பிரசாரம் காரணமாக தற்பொழுது நெருங்கி வந்துள்ளது.

### ஐக்கிய முன்னணி

1996 தேர்தலில் பெற்ற ஆசனங்கள் அல்லது அதற்கு குறைவான ஆசனங்களே ஐக்கிய முன்னணிக்கு இம்முறை கிடைக்கலாம் என்று நம்பப்படுகிறது.

1996 தேர்தலில் ஐக்கிய முன்னணி மூன்றாவது சக்தியாகவே இருந்தது. ஆனால் அது அப்பொழுது ஆட்சியை அமைத்துக் கொண்டது. ஆனால் இம்முறை அப்படியான நிலைமை சாத்தியம் இல்லை.

இனி எந்த சந்தர்ப்பத்திலும் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு அளிக்கும் நிலையில் காங்கிரஸ் இல்லை.

காங்கிரஸ் தனித்து அறுதிப் பெரும்பான்மை பெற முடியாத நிலையில் ஐக்கிய முன்னணியின் சில கட்சிகளை சேர்த்துக் கொண்டு ஆட்சி அமைக்க முயலும் சாத்தியமே கூடுதலாக இருந்து வருகிறது.

ஐக்கிய முன்னணியில் உள்ள பிரதான கட்சியான ஜனதாதள் பலவீனமடைந்துள்ளது.

ஜனதாதள்ளின் கோட்டைகளாக கருதப்பட்ட பீஹார், ஒரிஸா மாநிலங்களில் ஜனதாதள் பிளவுபட்டுள்ளது கர்நாடகத்திலும் போட்டிக் குழுக்களால் ஜனதாதள் பலவீனமான நிலையில் இருந்து வருகிறது.

பீஹாரில் லாலுபிரசாத் யாதவ் ஆதரவாளர்கள் தனிக்கட்சி அமைத்து காங்கிரஸை ஆதரிப்பது ஜனதாதள்ளுக்கு மற்றுமொரு பின்னடைவு ஆகும்.

தேவகௌடா, ராம் விலாஸ் பஸ்வான், குஜ்ரால் போன்றோர் தமது சொந்த செல்வாக்கினாலேயே மீண்டும் தெரிந்தெடுக்கப்படும் நிலையில் இருந்து வருகின்றனர். அதேசமயம் மேற்கு வங்காளத்தில் காங்கிரஸ் பிளவுபட்டு மமதா பனர்ஜி தனிக்கட்சி அமைத்திருப்பது அங்கு ஐக்கிய முன்னணிக்கு சாதகமான நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு ஐக்கியமுன்னணிக்கே இருந்துவருகிறது.

### காங்கிரஸ்

1984 இல் அமிர்தசரஸில் உள்ள சீக்கியரின் பொற்கோயிலுக்குள் படைகளை அனுப்பியது—

1992 இல் அயோத்தியில் பாபர் மசூதி உடைக்கப் பட்டது — ஆகியவற்றுக்கு சோனியா காந்தி பகிரங்கமாகவே மன்னிப்புக் கோரியது மூலம் தேர்தலில் சீக்கியர்களினதும் முஸ்லிம்களினதும் ஆதரவைப் பெற்றுவிட முடியும் என்றுகருதுகிறார்.

1996 தேர்தலில் இந்துக்களின் வாக்குகளைப் பெறுவதிலேயே காங்கிரஸ் கூடிய கவனம் செலுத்தி வந்தது.

தற்போது பாரதீய ஜனதாவின் இந்துமதவாத பிரசாரத்துக்கு காங்கிரஸினால் ஈடுகொடுக்க முடியாது. இந்த நிலையிலேயே சிறுபான்மையினரின் ஆதரவைப் பெறுவதில் காங்கிரஸ் கவனம் செலுத்தி வருகிறது.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கான பொறுப்பை நரசிம்மராவின் தலையில் போட்டு அவருக்கு தேர்தல் டிக்கட் கொடுக்கவும் காங்கிரஸ் மறுத்துவிட்டது.

இந்தியாவில் 12 கோடியே 50 இலட்சம் முஸ்லிங்கள் உள்ளனர். இவர்களில் ஒரு கணிசமான எண்ணிக்கையானோரின் ஆதரவைப் பெற முடியும் என்று பாரதீய ஜனதா தேர்தல் பிரசார ஆரம்பத்தில் கருதியது. ஆனால் சோனியா தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட பின்னர் இந்த வாய்ப்புகள் அற்றுப் போய்விட்டன.

### பாரதீயஜனதா

இந்திய தேர்தலில் சிறுபான்மையினரின் ஆதரவைப் பெறுவதற்காகவே மிதவாதியான வாஜ்பேயை பாரதீய ஜனதா பிரதமராக அறிவித்தது. ஆனால் தற்போது சிறுபான்மையினரின் ஆதரவு கிடைப்பது கேள்விக்குறியாக மாறிவருவதால் தீவிர இந்து மத பிரசாரத்தில் பாரதீய ஜனதா ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தீவிர மதவாதியாகக் கருதப்படும் அத்வானி, பாரதீய ஜனதா ஆட்சி அமைத்தால் தான் துணைப்பிரதமர் பதவி வகிக்கப் போவதாக தெரிவித்துள்ளார். அதே சமயம் வெளிநாட்டுப் பிரஜைகள் பிரதமர் பதவி ஏற்பதை தடுக்க சட்டம் கொண்டு வரப்போவதாகவும் பாரதீய ஜனதா அறிவித்துள்ளது.

ராஜீவை திருமணம் செய்து 20 ஆண்டுகள் சோனியா இத்தாலியப் பிரஜையாகவே இருந்தார்.

1984ஆம் ஆண்டே அவர் முழு அளவில் இந்தியப் பிரஜையானார்.

### மீண்டும் தொங்கு நாடாளுமன்றம்

மார்ச் 15ஆம் திகதி அனேகமாக புதிய அரசு ஒன்று அமைக்கப்பட்டு விடும். மீண்டும் தொங்கு நாடாளுமன்றமே அமையும் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுவதால் இந்திய வாக்காளர்கள் சலிப்படைந்துவிடப் போகிறார்கள். ★



அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒன்றான இந்தியாவின் பொருளாதாரத்துக்கு பெரும் சுமையாக இருந்து வரும் சுமார் ஆயிரம் கோடி இந்திய ரூபா செலவில் நடைபெற்று வரும் தற்போதைய மக்களவைத் தேர்தலுக்கு சோனியாகாந்தியும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

ஜெயின் கமிஷன் அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள தி.மு.கவை ஐக்கிய முன்னணி அரசில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்பதில் காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி பிடிவாதமாக இருந்தார்.

சோனியாவின் தீவிர ஆதரவாளர்களான காங்கிரஸ் எம்.பிக்கள் சிலரே சோனியாவின் தூண்டுதல் காரணமாக கேசரியை இத்தகைய நிலைக்குள் கொண்டு வந்ததாக அரசியல் அவதானிகள் நம்புகின்றனர்.

சோனியா நீண்டகாலமாக அரசியலுக்கு வராமல் ஒதுங்கி இருந்தார். சஞ்சேய் காந்தியின் மரணத்தின் பின்னர் ராஜீவ் காந்தியை அவரது தாயார் இந்திரா காந்தி அரசியலுக்கு இழுக்க முற்பட்டபோது அதனை அப்பொழுது கடுமையாக எதிர்த்தவர் சோனியா.

பின்னர் 1984 இல் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட பின்னர் ராஜீவ் காந்தி பிரதமர் பதவி ஏற்பதையும் சோனியா எதிர்த்தார்.

1991 இல் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின்னர் சுமார் நான்கு ஆண்டுகள் அவர் மௌனம் சாதித்து வந்தார்.

1995 இல் ராஜீவ் காந்தியின் சொந்தத் தொகுதியான அமேதி தொகுதியில் அவரது மௌனம் முதல் தடவையாகக் கலைந்தது. ராஜீவ் கொலை வழக்கு விசாரணைகள் இழுத்தடிக்கப்படுவதாக அவர் அங்கு நடந்த கூட்டம் ஒன்றில் குற்றஞ் சாட்டினார்.

இதன் மூலம் அப்பொழுது பிரதமராக இருந்த நரசிம்மராவுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி இருந்தார் சோனியா.

1997 மார்ச்சில் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்பினராக அவர் சேர்ந்து கொண்டார். அதே ஆண்டு ஓகஸ்ட்டில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மகாசபைக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

அதன் பின்பும் அரசியலில் முழு அளவில் ஈடுபடுவதை சோனியா தவிர்த்து வந்தார். தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடப் போவதாக 1997 டிசெம்பர் 29 ஆம் திகதி சோனியா அறிவித்த பின்னர் சுமார் 100 கூட்டங்களில் உரை நிகழ்த்தினார். தமது கணவர் கொலையுண்ட ஸ்ரீபெரும்புதூரிலேயே அவரது முதலாவது பிரசாரக் கூட்டம் ஆரம்பமானது.

ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் குறைந்த அளவானோரே கலந்து கொண்டனர். ஆனால் அதற்குப் பின்னர் நடைபெற்ற கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொள்ளத் தொடங்கியது சோனியா இல்லாமல் காங்கிரஸ் இனி தலை தூக்க முடியாது என்ற நிலையை ஏற்படுத்தியது.

சோனியாவின் பிரசாரம் ஜெயின் கமிஷன் அறிக்கைக்கு அப்பால் செல்லாது என்றே ஆரம்பத்தில் காங்கிரஸ் தலைவர்கள் கருதினர்.

ஆனால் காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை மக்களைக் கவரக் கூடிய தலைவர் எவரும் சோனியாவைத் தவிர காங்கிரஸில் இருக்க முடியாது என்ற நிலை தற்பொழுது உருவாகிவிட்டது என்றே அவதானிகள் நம்புகின்றனர்.

சோனியாவின் தேர்தல் பிரசாரம் காங்கிரஸுக்கு 20 முதல் 40 ஆசனங்கள் கூடுதலாகக் கிடைக்க வழி ஏற்படுத்தி உள்ளதாகக் கருதப்படுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org